நகர சபை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்: இருபத்தெட்டு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 07 ஞாயிற்றுக்கிழமை (21.03.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 115

## போர்க் குற்றங்களுக்கு இலங்கை பொறுப்புக் கூறும் விவகாரம்

# நிபுணர் குழுவை நியமிக்க மூனுக்கு அதிகாரம் உண்டு என்கிறது பிரிட்டன்

### அணிசேரா நாடுகளின் தீர்மானம் குறித்து விசனம்



நியூயோர்க்,மார்ச் 21

போர்க் குற்றங்களுக்கு இலங்கை பொறுப்புக் கூறுவது குறித்து தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு நிபுணர்குழு ஒன்றை நியமிப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் - கீ - மூனுக்கு அதிகாரம் - ஆணை - உண்டு.

அந்த நடவடிக்கைக்கு, முயற்சிக்கு அணிசேரா நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்ததை ஏற்றுக்கொள்ள முடியாது என்று பிரிட்டன் கடும் விசனம் தெரிவித்துள்ளது.

(28 ஆம் பக்கம் பார்க்க)



### நாளை மறுதினம் யாழ். வருகின்றார் ஜனாதிபதி மஹிந்த

யாழ்ப்பாணம்,மார்ச்21

தேர்தல் பிரசாரம் மேற்கொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம்,வருகின்றார்.

இன்று திருகோணமலைக்குச் செல்லும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாளை வவுனியாவில் (28ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் அபிவிருத்தி திட்டங்களுக்கு தாராளமாக வழங்கி வருகின்றது இந்தியா!

### கடந்த வருடத்தில் மட்டும் 12.5பில்லியன் ரூபா உதவி நிதி

யாழ்ப்பாணம்,மார்ச்21

இலங்கை அரசுக்கு கடந்த வருடத்தில் மட்டும் இந்தியா 12.5 பில்லியன் ரூபா உதவியை வழங்கியுள்ளதாக இந்தியத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதன் மூலம் அந்த நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு இந்தியா தனது உதவிகளை அதிகரித்துள்ளது.

இந்திய அரசின் இந்த உதவிகளின் அளவு கடந்த ஆண்டு 12.5 பில்லியன் ரூபாவை எட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தென்னிலங்கையிலும், மத்திய பகுதிகளிலும் அதிகளவு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டுவரும் இந்தியா, தற்போது கிளிநொச்சி, வவுனியா, (24 ஆம் பக்கம் பார்க்க)

### 25ஆம் திகதி வரை மீளக்குடியமர்வோர் சொந்த இடங்களில் வாக்களிக்க வசதி

கொழும்பு,மார்ச் 21

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் எதிர்வரும் 25ஆம் திகதிவரை தமது பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்தவர்கள் அந்தந்த இடங்களில் வாக்களிக்க வசதி செய்யப்படும் என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க அறிவித்துள் ளார்.

நாட்டில் உள்ள 22தேர்தல் மாவட்டங்களின் தெரிவத் தாட்சி அதிகாரிகளை நேற்றுச் சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்தார். (28ஆம் பக்கம் பார்க்க)

## மீளக்குடியமர்ந்தோருக்கு 25 ஆயிரம் ரூபா; நாளைமுதல் கொடுப்பனவைப் பெறமுடியும்

### நிக்கொட் யாழ். மாவட்டப் பணிப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 21

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேறிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் 'நிக்கொட்' நிறுவனத்தால் வழங்கப்படுகின்ற 25ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்கான அனுமதிக் கடிதங்கள் வழங்கப்பட்டவர்கள் நாளை திங்கட்கிழமை முதல் வங்கியில் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்று நிறுவனத்தின் யாழ். மாவட்டப் பணிப்பாளர் ஆர்.சிவரூபன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு-

வன்னியில் இருந்து இடம் (28ஆம் பக்கம் பார்க்க)

### ஏப்ரல் 2ஆம் வாரத்தில் ஜி.சீ.ஈ. பெறுபேறுகள்

கொழும்பு,மார்ச் 21

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ.(சாதாரண) தரப் பரீட்சையின் பெறுபேறுகள் ஏப்ரல் மாதம் இரண்டாம் வாரத்தில் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தப் பரீட்சைக்கு 5 லட்சத்து 45ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றினர். அவர்களில் 3 லட்சத்து 40 ஆயிரம் பேர் பாடசாலைகள் மூலம் தோற்றிய பரீட்சார்த்திகள் ஆவர்.

**கல்விச் சுடர்**

**நாளை**

ஜி.சீ.ஈ. உ யர்தரப் பரீ சைக்கான வணிகக் கல்வி மாதிரி வினாத்தாள்

## கைக்குண்டுடன் ஊரெழு வாசி ஒருவர் நேற்று வட்டுக்கோட்டையில் கைது!

யாழ்ப்பாணம்,மார்ச் 21

வட்டுக்கோட்டையில் நபர் ஒருவரை கைக்குண்டுடன் வட்டுக்கோட்டைப் பொலிஸார் நேற்று மடக்கிப்பிடித்துக் கைது செய்தனர்.

ஊரெழுவைச் சேர்ந்த என்.மகேந்திரன் என்பவரே கைது செய்யப்பட்டவர் ஆவார்.

வட்டுக்கோட்டைப் பகுதியில் கசிப்பு வேட்டையில் ஈடுபட்ட கலால் திணைக்கள அதிகாரிகள் பிரஸ்தாப நபர் வசம் இருந்த பையைச் சோதனையிட முயன்றனர். (28ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் சூடுபிடித்து வரும் கட்சிகளின் தேர்தல் பிரசாரங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச் 21

யாழ்.குடாநாட்டில் தற்போது தேர்தல் பிரச்சாரம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. அரசியல் கட்சிகள் மட்டுமன்றி, சுயேச்சைக் குழுக்களும் போட்டி போட்டுக் கொண்டு பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. யாழ்.நகரில் மட்டுமன்றி குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் வண்ண வண்ணச் சுவரொட்டிகள் காணப்படுகின்றன. துண்டுப் பிரசுரங்களும் ஏராளமாக அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. (28ஆம் பக்கம் பார்க்க)







நீண்ட காலம் நீடித்துழைக்கும் சீமெந்து

- போசலானா சீமெந்து உறுதி மிக்கது, நீண்டகாலம் நீடித்துழைக்கும்.
- இலங்கையில் SLS 1247 தரத்துடன் உற்பத்தி செய்யப்படும் ஒரே சீமெந்து டோக்யோ சுப்பர் போசலானா மட்டுமே.
- சதுப்பு நிலங்கள், கடற்கரை ஓரங்கள், கடல் சார்ந்த கட்டுமானப் பணிகள், அணைக்கட்டுக்கள், கால்வாய்கள் மற்றும் ... வேலைகளுக்கு மிகவும் ஏற்றது.

டோக்யோ சுப்பர் போசலானா - நீண்டகாலம் நிலைத்திருக்கும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்



### சுரேஸ்வரன் சஸ்வின்

அரியாலையைச் சேர்ந்த சுரேஸ்வரன் - பகீரதி தம்பதியினரின் செல்வப் புதல்வன் சஸ்வின் தனது முதலாவது பிறந்த நாளை இலண்டனில் உள்ள தனதில்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். சஸ்வினை அப்பா, அம்மா, அரியாலையில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா மற்றும் இலண்டனில் வசிக்கும் லதா அத்தை, கனுமச்சி, ராஜா பெரியப்பா குடும்பம், மனோ சித்தப்பா குடும்பம், இத்தாலி ரவிச் சித்தப்பா குடும்பம், அரியாலை தனாசித்தப்பா குடும்பம், குமார் மாமா குடும்பம், இலண்டன் ஜெனிமச்சி குடும்பம், ஜேர்மன் டஜானா அக்கா குடும்பம், அக்காமார் மது, சானு, மச்சி, மியூரி மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அரியாலை வெட்டுக்குளம் புவனேஸ்வரி அம்பாள் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

வாழ்த்துவோர்

(சி/565957) தனேஸ்வரன் காமினி குடும்பம், மது அக்கா.

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்

### சஹானா தனேஸ்வரன்



அரியாலை, சாஸ்திரியார் வீதியைச் சேர்ந்த தனேஸ்வரன் காமினி தம்பதியினரின் செல்வப் புதல்வி சஹானா தனது முதலாவது பிறந்த நாளை இன்று (21.03.2010) தமதில்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

சஹானாவை அப்பா, அம்மா, அக்கா மதுவுடன் அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, லண்டனில் வசிக்கும் லதா அத்தை, கனு மச்சி, ராஜா பெரியப்பா குடும்பம், மனோ சித்தப்பா குடும்பம், சுரேஸ் சித்தப்பா குடும்பம் இத்தாலியில் வசிக்கும் ரவிச்சித்தப்பா குடும்பம், மயிலங்காடு சாந்தன் மாமா குடும்பம், தொண்டைமானாறு சிவா மாமா குடும்பம், சுட்டி சித்தா, குட்டி மாமா, லண்டன் ஜெனி மச்சாள் குடும்பம், ஜேர்மன் டஜானா அக்கா குடும்பம், தம்பி சஸ்வின் மற்றும் அண்ணாமார், அக்காமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அரியாலை வெட்டுக்குளம் புவனேஸ்வரி அம்பாள் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

வாழ்த்துவோர்: லதா அத்தை, ஜெனிமச்சி, கனு மச்சி - லண்டன்.

## தவறிவிட்டது

புதுமுறிப்பு, உருத்திரபுரம், கிளிநொச்சியைச் சேர்ந்த சுப்பிரமணியம் கயேந்திரன் என்பவரது முகாம் அடையாள அட்டை மற்றும் தேசிய அடையாள அட்டை (853463507V)யும் ஆரியகுளம் சந்திக்கும் திருநெல்வேலி, பழம் வீதிக்கும் இடையில் 18.03.2010 தவறிவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்துத்தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0770889681, 0776751467
43/4 மணல் தெரு லேன்

## விற்பனைக்குண்டு



சன்ரல் கோபுரமாக பயன்படுத்தப்பட்ட 54 அடி உயரமான Tower விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0777040767, 021 321 9808

## மரண அறிவித்தல்கள்

### செல்லன் குழந்தைவேலு



தவசிகுளம், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லன் குழந்தைவேலு 19.03.2010வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லன் - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கிட்னன் மற்றும் சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் இராசசுலோசனாவின் அன்பு கணவரும் பாஸ்கரன் (லண்டன்) பார்த்தீபன் (பிரான்ஸ்) பவிதா, வாசுகி, வசிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் சுபாசினியின் (லண்டன்) அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஈச்சங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தவசிகுளம், மிருசுவில்.* (95749) தகவல்: குடும்பத்தினர்.

### நடேசு கிருஸ்ணகுமாரன் (பொலிஸ்)



அல்வாய் வடக்கு, நக்கீரன் வீதியைச் சேர்ந்த நடேசு கிருஸ்ணகுமாரன் (பொலிஸ்) நேற்று (20.03.2010) சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் பார்வதியின் அன்புக் கணவரும், திருமதி பிரசாத் சோபனா, சிந்துயா, சந்துரு, கிருஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாரதிபிரசாத்தின் (மந்திகை அரசினர் வைத்தியசாலை) அன்பு மாமனாரும், நடேசு - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2010) ஞாயிறு முற்பகல் 11மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர் மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'சோபனம்',*
*நக்கீரன் வீதி,*
*அல்வாய் வடக்கு, அல்வாய்.*

தகவல்: குடும்பத்தினர்.

### முருகேசு கந்தையா

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு கந்தையா நேற்று (20.03.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-பொன்னம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா- அன்னம்மா தம்பதிகளின் மருமகனும், சரஸ்வதி(மணி)யின் அன்புக் கணவரும், தனபாக்கியலட்சுமி, யோகேஸ்வரி, ரதிரஞ்சிதம் (ஆசிரியை, கோண்டாவில் இந்து ம.வி), ஜெயலட்சுமி (டென்மார்க்), சுபாசினி, கேதீஸ்வரன் (லக்சுமி இரும்பகம், கோண்டாவில் மேற்கு), கணேஸ்வரன் (அமெரிக்கா), கவிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலேஸ்வரன் (சுமங்கலி சில்க், சுன்னாகம்), குலாகரன், பகீரதன் (கண்ணன்-ஸ்ரீகிருஷ்ணா இயந்திரவியல் தொழிலகம்), ஜெயக்குமார் (டென்மார்க்), கேதீஸ்வரன் (மாநகரசபை), சிவாநந்தினி (கிளி/பரந்தன் இந்து ம.வி), கலையரசி (நளினி), கோபிகரன் (கஜமுகன் மோட்டோர்ஸ், இணுவில்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அருண், தர்ஷன், சஜீவன், ரகுராம், அனுராம், ஸ்ரீராம், ஸ்ரீசங்கர், ஜெனனி, ஜெனுசன், ஜெனி, அனுசியா, அருணன், அஸ்வினி, அர்ச்சனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2010) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலட்டி லேன்,*
*கோண்டாவில் மேற்கு.* (95753) தகவல்; குடும்பத்தினர்.

## தேவை

1. TYPIST (தமிழ், ஆங்கிலம்)
2. GRAPHIC DESIGNER.
3. DEVELOPERS, SOURCE, JOOMLA, DRUPAL, NOODLE.

தொடர்பு: JAFFNA SERVICES,
P.O.BOX - 3, CHANKANAI.
T.P. 0777726335.
E.mail:- jaffna service @ gmail.com

## STR COMPUTER SYSTEM

384, Navalar Road, Nallur, Jaffna
Tel: 021-2224459, 0774192275
Fax: 021-2224460

### ENGLISH CLASSES

**Diploma in English**

Grammar, Spoken, Reading, Writing, Listening, Speaking என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.

Start on 24.03.2010, Time:- 4.00-6.00

**FACILITIES**

Insolvement, Payment, Computer Uses, Comfortable Lacture Hall, Supporting Material for Learning, Semester Exam and Result, Comfortable Class Time.

[தொழில் புரிபவர்களுக்கான விஷேட ஆங்கில வகுப்புக்களும் நடைபெறவுள்ளது]

விவரங்களுக்கு நேரில் (C/565953)

கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகில்

## மரண அறிவித்தல்

### திருமதி கணபதிப்பிள்ளை நவமணி

புங்குடுதீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை நவமணி 19.03.2010வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்புத் துணைவியும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு நவசிவாயம் (ஆறுமுகம்) - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிவகாமிப்பிள்ளையின் பெறாமகளும், கணேசமூர்த்தி, சோமசுந்தரி, கமலாம்பிகை, சண்முகநாதன், சோமசுந்தரம் ஆகியோரின் சகோதரரும், ரதிதேவி, உமாதேவி, நவதாசன், விஜிதாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிறிகரன், ரகுநாதன், கௌசிகா, தங்கேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற அம்பலவாணர் மற்றும் சின்னத்துரை, ஐயம்பிள்ளை, காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி பூரணம், மங்கையர்க்கரசி, அன்னம்மா, மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற கதிர்காமாநாதன், தருமபாலன், விக்கினேஸ்வரி, சந்திராதேவி ஆகியோரின் மைத்துனியும் அன்னம்மா, வள்ளியம்மை, கமலாம்பிகை, சரோசா, காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம், துரைச்சாமி, சண்முகம் ஆகியோரின் சகலியும், யதுஷ், சானுஷன், தட்சிகா, நிந்துஜா, தர்மியா, பிரவீன், சபீகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 20.03.2010 சனிக்கிழமை பொரளை ஜெயரட்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (21.03.2010) ஞாயிற்றுக்கிழமை முற் பகல் 11 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக் கிரிகைக்காக கனத்தை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*107, பண்டாரநாயக்கா மாவத்தை,*
*கொழும்பு. 13*
*தொடர்பு : 077 4938431* (95746) தகவல்: மக்கள், மருமக்கள், சகோதரர்கள்.

## விசேட மாநாடு

யாழ்ப்பாணம், மார்ச் 21

ஜெகோவாவின் சாட்சிகளின் விசேட மாநாடு இன்று ஞாயிற்றுக் கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த விசேட மாநாடு 'கொஞ்சக் காலமே மீந்திருக்கிறது' என்ற தொனிப் பொருளில் நடைபெறவுள்ளது.

(ஒ-9)

## சேவை

யாழ் மாணவர்களுக்கு லண்டனில் உயர் கல்வி தொடர்வதற்கான சகல வசதியும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு 0772285971

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
05 ★ 07 ★ 1928



மறைவு
19 ★ 02. ★ 2010

### அமரர் ஆழ்வான் நடேசன்

கடந்த 19.02.2010 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர் ஆழ்வான் நடேசன் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு பலவழிகளில் உதவி புரிந்தோருக்கும் அனுதாபச் செய்திகள் மூலம் ஆறுதல் கூறிய உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (21.03.2010) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து பங்கேற்குமாறு தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*[illegible] தெற்கு,*
*[illegible] பருத்தித்துறை.* (சி/565950)

குடும்பத்தினர்.
T.P.: 021 226 3232

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது இன ஐக்கியத்தைக் காக்கும் பெரும் பொறுப்பு இன்று முற்றிலும் தமிழ் மக்களிடமே உண்டு....

வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தின் போதும் அது தந்த கோர விளைவுகளின் போதும் மக்களுடன் கூடவே இருந்து, மருத்துவப் பணியாற்றிய முல்லைத்தீவு பிரதிச் சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி துரைராஜா ஜெயக்குலராஜா இன்று வன்னி மாவட்டத் தேர்தல் தொகுதியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக போட்டியிடுகிறார் அவர் 'உதயனு'க்கு வழங்கிய செவ்வி இது.

## வன்னி மாவட்ட வேட்பாளர் வைத்திய கலாநிதி ஜெயகுலராஜா செவ்வி

செவ்வி: தமிழரசன்

**கேள்வி:** தமிழ்பேசும் மக்களின் நலனில் அக்கறை கொண்டு உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று பிளவுபட்டு உள்ளது. இதற்கான அடிப்படை,உண்மையான காரணம் என்ன?

**பதில்:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உடைவு பிளவு ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றே. இதற்கான உண்மையான காரணம் அல்லது அடிப்படைக் காரணம் ஒரு சிலரிடம் உள்ள சுயநலம் என்றே நான் கருதுகின்றேன். 1983களில் தொடங்கிய ஆயுதப் போராட்டமும் இதன் காரணத்தினாலேயே அழிவுப்பாதையில் சென்றது. அப்போது தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், ஏனைய இயக்கங்கள் ஒன்றுபடும் பட்சத்தில் தாம் பின்னால் வருவதாகக் கூறினார். ஆனால் துரதிஷ்டவசமாக அச்சந்தர்ப்பத்தை வேறு இயக்கங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் எமது விடுதலைப்போராட்டம் வலிகுன்றிப் போனது.

தமிழ் மக்களிடம் 98 வீதமானவர்களிடம் இந்த சுயநலப்பண்பு மேலோங்கி உள்ளது. தாம் தலைவர் ஆக வேண்டும் என்ற எண்ணத்தில் ஒவ்வொருவரும் மக்களின் பிரச்சினைகளைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி இலாபம் காண முயற்சிக்கின்றனர். அவ்வாறே கூட்டமைப்பின் தலைமைகளுக்கு ஏற்பட்ட ஆசையும் சுயநலமுமே இப்பிளவின் உண்மையான காரணமாக என்னால் கருதமுடிகிறது.

**கேள்வி:** தமிழ் மக்களினுடைய பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்தியாவின் அனுசரணை முக்கியமானது தவிர்க்கமுடியாதது எனக் கூட்டமைப்புக் கூறுகிறது. ஆனால் பிளவுற்ற கட்சிகளும் ஏனைய சில கட்சிகளும் இந்தியாவை நட்பு நாடாக மட்டுமே ஏற்க முடியும் எனக் கூறுகின்றன. இந்த நிலையில் தங்களுடைய கருத்து என்ன?

**பதில்:** ஜனநாயக ரீதியிலும் இராணுவ ரீதியிலும் ஒரு சக்திவாய்ந்த நாடாக இந்தியா உள்ளது. சீனாவுக்கு அடுத்தபடியாக அதிக சனத்தொகையை கொண்ட இந்த நாடு பொருளாதார ரீதியிலும் ஒரு உன்னத வளர்ச்சியை அடைந்துள்ளது.

இலங்கைப் பிரச்சினையில் இந்தியா ஆரம்பகாலத்தில் ஒரு காத்திரமான பங்களிப்பை வழங்கியது. தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதப்பயிற்சியையும் அந்நாட்டின் தலைவர்கள் வழங்கியிருந்தனர். ஆனால் தன்னுடைய பிராந்திய நலனைக் கருத்தில்கொண்டு ஒரு தனித் தேசத்தை வழங்க இந்தியா முன்வரவில்லை. வங்க தேசத்தை பிரித்து வழங்கிய இந்திராகாந்தி அம்மையார், இலங்கையில் அத்தகைய ஒரு நடவடிக்கையைச் செய்ய முன்வரவில்லை. அமெரிக்காவின் செல்வாக்கை உடைப்பதற்காகவும் தன்னுடைய பிராந்திய நலனை கருத்தில் கொண்டும் அந்நாடு செயற்பட்டதாலேயே எமது பிரச்சினை இன்றும் தீர்க்கப்படாமல் உள்ளது. இந்நிலையில் இந்தியாவினுடைய பங்களிப்புக் குறித்த விடயத்தைக் கவனத்துடன் கையாள வேண்டும்.

### தமிழருக்கு இன்றுள்ள ஒரே தெரிவு கூட்டமைப்பே

**கேள்வி:** தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்க கூட்டமைப்பால் மட்டுமே முடிமெனக் கூறப்படுகிறது. அது குறித்து....?

**பதில்:** தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இன்றுள்ள ஒரேதெரிவு தமிழ் தேசியக் கூட்டமைப்பே. ஏனைய கட்சிகளை தமிழ்மக்கள் புறக்கணிக்கவேண்டிய ஒரு நிலையில் உள்ளனர். ஆனாலும் தமிழ் மக்களுக்கு மாற்று அரசியல் ஒன்று கட்டாயம் தேவை என்பது அர்த்தம் நிறைந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சில தவறுகளை விட்டுள்ளது. ஆனால் அவற்றை மக்களில் பெரும்பாலானோர் இன்று மன்னிக்கத் தயார் இல்லை. ஆனாலும் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய தமிழ்மக்களின் அபிலாசைகளை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தக்கூடிய சக்தி இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாத்திரமே உண்டு. ஆனால் விரைவில் மாற்று அரசியல் சக்தி ஒன்று உருவாகும். அதனை எதிர்கொள்ளவேண்டிய நிலைமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உள்ளது. எனவே எச்சரிக்கையுடனேயே மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அர்ப்பணிப்புடன் செயலாற்றும் காலம் கனிந்துள்ளது என்றே நான் கருதுகிறேன்.

**கே:** மாற்று அரசியல் சக்தியினுடைய உருவாக்கம் எவ்வாறு அமையும் என கருதுகிறீர்கள்?

ப: குறிப்பாக எதனையும் சொல்லமுடியாது. ஆனால் சில பிரிவினரின் அர்ப்பணிப்புணர்வுடன் தோற்றம் பெறலாம். எனினும் அதற்கான காலம் இன்னமும் உள்ளது.

### இன ஐக்கியத்தைக் காக்க வேண்டிய பொறுப்புத் தமிழ் மக்களிடமே உண்டு

இன்று தமிழ்மக்களின் ஒரே தெரிவான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மாத்திரமே உள்ளது. அதன் பலத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை உண்டு. அதனை உடைக்கவே இன்று தென்னிலங்கைச் சக்திகள் சுயேச்சைகளையும் கட்சிகளையும் களமிறக்கியுள்ளன. கூட்டமைப்பில் இருந்து வெளியேறியவர்கள் ஒரு புறம் இருக்க, வெளியேறக்கூடியவர்கள் இன்னும் சிலர் உள்ளனர். ஆனால் அர்ப்பணிப்புள்ளவர்களை தெரிவுசெய்து இன ஐக்கியத்தை காக்க வேண்டிய பெரும் பொறுப்பு தமிழ் மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

**கே:** நீங்கள் வன்னி மாவட்டத்தை பிரதிநிதுத்துவப்படுத்தும் கூட்டமைப்பின் வேட்பாளர் என்ற வகையில் உங்கள் பிரச்சாரப் பணிகளை அங்கு எவ்வாறு மேற்கொள்கிறீர்கள்?

ப: எனக்கு பண பல்மோ அல்லது ஆள் பலமோ இல்லை. வன்னி மாவட்ட மக்கள் இடம்பெயர்ந்து பல இடங்களிலும் சிதறிப்போய் உள்ளனர். அம்மக்கள் வவுனியாவில் ஒவ்வொரு இடங்களிலும் 10 அல்லது 15 குடும்பங்களாக பல இடங்களிலும் வாழ்கின்றனர். அவர்களை நேரில் சென்று சந்தித்து அம்மக்களின் துன்ப துயரங்களை அறிந்து அவர்களின் ஆதரவை வேண்டுகின்றேன்.

### தமிழ் மக்கள் மீண்டும் ஏமாற மாட்டார்கள்

எனக்கென்று ஓர் அலுவலகம் கூட இல்லை. ஆனால் நான் எம் இனத்தின் ஐக்கியத்தையே வலியுறுத்துகின்றேன். கடந்த காலத்தில் நாம் விட்ட தவறுகளை சுட்டிக்காட்டி கூட்டமைப்பை உடைக்க நினைக்கும் சக்திகளுக்கு நல்லதொரு பாடத்தைப் படிப்பிக்க வேண்டும் அதனை தமிழ்மக்கள் செய்வார்கள். தமிழ்மக்கள் மீண்டும் ஏமாறமாட்டார்கள்.

**கே:** வன்னியில் பிரசார நடவடிக்கைகளுக்கு அரசு சார்பான கட்சிகள் சுதந்திரமாக செயற்படுகின்ற போது, எதிர்க்கட்சிக்கும் கூட்டமைப்புக்கும் தடைகள் காணப்படுவதாக குற்றஞ்சாட்டப்படுகிறதே?

ப: அது உண்மைதான். ஆனால், எதிர்க்கட்சியைவிட எமக்குள்ள பிரச்சினை வேறு. காலம்காலமாக இரு தேசியக் கட்சிகளும் எம் மக்களை ஏமாற்றி எமது மண்ணைப் பறித்தவர்கள். உதாரணமாக மன்னார், அம்பாறை, திருகோணமலை போன்றவை பறிக்கப்பட்டன. இன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ''நான் உங்கள் சகோதரன், உங்களில் ஒருவன், எனக்கு ஜாதி, மத, இன, பேதமில்லை'' என்று கூறுகிறார். ஆனால் ஒரு சகோதரன் போல அவர் நடந்துகொள்ளவில்லை.

சகோதரனாகவுள்ளவர் எதற்காக எமது ஒற்றுமையை குலைப்பதற்கு சதிகள் செய்ய வேண்டும்? எமது மக்களின் வாழ்வாதாரத்தைக் குலைக்க வேண்டும்?

### எமது பிரச்சினையை ரணிலும் தீர்க்கமாட்டார்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க இன்று தம்மால் மட்டுமே பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்கிறார். ஆனால் இவர் எமது பிரச்சினையை தீர்க்கவிருந்த சந்தர்ப்பங்களை பயன்படுத்தவில்லை. இவருடன் நான் ஒரே காலத்தில் படித்தவன். இவர் அமைச்சராகவிருந்த காலத்தில் தொடர்புகளையும் கொண்டிருந்தவன் என்ற வகையில் கூறுகிறேன், எமது பிரச்சினைகளைத் தீர்க்க இவரும் முன்வரமாட்டார். காலம்காலமாக ஏமாற்றிய தேசியக் கட்சிகளின் தலைவர்கள் போன்றே இவர்கள் இன்றும் நடக்கின்றனர். எமது பிரசாரப் பணிகளையும் தடுகின்றனர். ஆனால் தமிழ்மக்கள் உண்மையை உணர்ந்தவர்கள். தங்கள் வாக்குகளை தவறாது கூட்டமைப்புக்கு வழங்குவர்.

### மீள்குடியேற்றத்தின் விசித்திரம்....

**கே:** வன்னியில் இன்று மீள்குடியேற்றம் எவ்வாறு உள்ளது?

ப: உண்மையில் வன்னியில் மீள்குடியேற்றம் என்ற போர்வையில் பாடசாலைகளில் மக்கள் குடியமர்த்தப்படுகின்றனர். நான்கு ஐந்து தினங்களின் பின்னர் உச்சி வெயிலில் பஸ்களுக்குள் குழந்தைகள், வயதுமுதிந்தவர்கள் உட்பட அனைவரும் ஏற்றப்பட்டு [illegible]கின்றனர். பின் மாலையில் தெருவோரங்களில் கொண்டுசென்று விடப்படுகின்றனர். இவர்கள் இரவில் தங்குவது எங்கே? அவர்களுக்கு பாதுகாப்பான குடிநீர் இல்லை, உணவு இல்லை; இரண்டு இலட்சம் மக்களை குடியேற்றி விட்டதாகக் கூறும் அரசு இப்படித்தான் குடியேற்றுகிறது. மனச்சாட்சிக்கு விரோதமான முறையிலே மீள்குடியேற்றம் நடைபெறுகின்றது. அம்மக்களை தெருவில் விடும் அரசு அவர்களுக்கான வாழ்வாதார வசதிகளை கொடுக்கவில்லை. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கேட்டுக் கொள்கின்றேன்: தயவுசெய்து, அம்மக்களின் காணிகளில் அவர்களை குடியேற்றினாலே போதும். நடுத்தெருவில் விடாதீர்கள். மீள்குடியேற்றம் என்ற கண்துடைப்பு நாடகத்தையும் நடத்தாதீர்கள்

### புலம்பெயர் தமிழர்கள்


# புலம்பெயர் உறவுகளின் ஆதரவைப் பெருக்குவது இன்றைய தேவை

**கே:** இன்று தமிழ் மக்களுடன் பிரிக்க முடியாத சக்தியான புலம்பெயர் சமூகத்துடன் உள்ள உறவுநிலை எவ்வாறு உள்ளது?

ப: பல இலட்சக் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் வாழ்கின்றனர். இவர்களினுடைய கருத்து மிக முக்கியமானது. இவர்கள் எம்மை விட்டு விலகிப்போவது தடுக்கப்பட வேண்டியது. இம் மக்கள் தொடர்ச்சியாக தமது ஆதரவினைத் தரவேண்டும். அவர்களிலும் பலதரப்பட்டவர்கள் உள்ளனர். போராட்ட காலத்தில் எவ்வாறான ஆதரவினை வழங்கியிருந்தனரோ அவ்வாறான ஆதரவை அவர்கள் தொடர்ந்தும் தரவேண்டும்.

**கே:** புலம்பெயர் சமூகத்துடன் கூட்டமைப்பின் உறவு எந்நிலையில் உள்ளது?

ப:புலம்பெயர் சமூகத்துடன் கூட்டடைப்பின் தற்போதைய உறவு குறைந்தளவி லேயே காணப்படுகிறது. இந்நிலை முன்னேற்றம் அடையவேண்டும். கூட்டமைப்பு ஒருசாரரிடமே உறவுகளைப் பேணுகிறது. புலம்பெயர் சமூகத்தில் பலதரப்பட்டவர்கள் வாழ்கின்றனர். அவர்களுடனான உறவையும்



வலுப்படுத்த வேண்டும். அப் போதுதான் ஐக்கியப்பட்ட சமூகத்தை கட்டியெழுப்பவும், அதனைநோக்கி நகரவும் முடியும்.

தேர்தலின் பின்னர் இந்த உறவுநிலையில் நீண்ட வளர்ச்சியை நாம் கொண்டிருப்போம். இதற்காக சம்பந்தன் ஐயா பல திட்டங்களை வகுத்துள்ளார் அதற்கு நான் பக்கபலமாக இருப்பேன்.

**கே:** கூட்டமைப்பின் வேட்பாளராகப் பேட்டியிடும் தாங்கள் 'உதயன்' ஊடாக என்ன சொல்ல விரும்புகிறீர்கள்.

ப: காலங்காலமாக ஏமாற்றப் பட்டிருக்கும் எமது இனத்தின் விடுதலைக்கு புதிய பரிணாமத்தை இத் தேர்தல் வழங்கவுள்ளது. எங்கள் இன ஐக்கியத்தை சர்வதேசத்திற்கு வெளிப் படுத்த நாம் ஒன்றிணைய வேண்டிய காலம். எனவே அன் பார்ந்த மக்களே! உங்கள் வாக்கு களை வரும் ஏப்ரல் 8 ஆம் திகதி தவறாது கூட்டமைப்புக்கு வழங்குங்கள்.

நன்கு சிந்தித்து தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாணக்கூடிய தலைமையிடம் உங்கள் எதிர்காலத்தை ஒப்படையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

# சேவை நலன் பாராட்டு

நூற்றாண்டு நிறைவைக் கொண்டாடும் மகாஜனக் கல்லூரியில் 25 வருட ஆசிரிய சேவையினை வழங்கி இன்று (21.03.2010) மணிவிழாக் காணும் எங்கள் பிரதி அதிபர்

## திருமதி சௌபாக்கியகௌரி பத்மநாதன் அவர்கள்

(S.L.T.S.- 1), M.Phil in Philosophy, B.A., Dip in Education, Sp.Trained (Home Economics)

மகாஜனவின் 25 வருட சேவையில் ஆசிரியராக மனைப்பொருளியல், அளவையியல், ஆங்கிலம் பொறுப்பாசிரியராக - பரிசுக்குழு, ஒழுங்காற்றுக்குழு, கட்டாயக்கல்வி, பெண் சாரணியம், மாணவர் நலன் பகுதித் தலைவராக, பிரதி அதிபராக.

### கல்வி கற்ற பாடசாலைகள்

ஆரம்பக்கல்வி: யா/இந்து ஆரம்ப பாடசாலை
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
யா/அளவெட்டி அருணாசலம் வித்.
இடைநிலை : யா/அருணோதயக் கல்லூரி
உயர் கல்வி : யா/திருக்குடும்பக் கன்னியர் மடம் ஆங்கிலப் பாடசாலை

### ஆசிரிய சேவைகள்

09.09.1975 யா/அருணோதயக் கல்லூரி
01.01.1977 யா/கோப்பாய் ஆசிரிய கலாசாலை
01.01.1979 யா/கிண்ணியா முஸ்லிம் ம.வி
15.03.1985 யா/மகாஜனக் கல்லூரி

### கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

வலிகாமம் கல்வி வலயத்தில் சாதனைகள் பல படைக்கும் கோட்டமாகத் திகழும் தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்திலே நூற்றாண்டு விழாக் காணுகின்ற புகழ் பூத்த கல்லூரியாகிய தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் 25 வருடகாலம் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி நேற்று (20.03.2010) ஓய்வுபெற்ற பிரதி அதிபர் திருமதி சௌபாக்கியகௌரி பத்மநாதன் அவர்கள் கல்விப் புலம், சேவைப்புலம், ஆன்மீகம், மனிதநேயம் ஆகிய பன்முகப்படுத்தப்பட்ட ஆளுமைப்பண்புகள் கொண்டவர். அவர் தனது ஓய்வுக் காலத்தில் நீடித்த ஆயுளும் நிறைந்த ஆரோக்கியமும்கொண்டு பல்லாண்டு வாழ மனம் நிறைந்து வாழ்த்துகின்றேன்.

திரு.ச.கைலாசநாதன்

### அர்ப்பணிப்புடன் சேவையாற்றியவர்

மகாஜன மாதாவின் நூற்றாண்டிலே அன்னையின் மடியில் 25 ஆண்டுகளைப் பூர்த்தி செய்த பிரதி அதிபர் திருமதி சௌபாக்கியகௌரி பத்மநாதன் அவர்கள் பாடசாலைப் பணியில் இருந்து ஓய்வு பெறுகின்றார் என்பது எமது மாணவச் செல்வங்களுக்கு பேரிழப்பாகும்.

எமது பாடசாலையின் முதல் பெண் பிரதி அதிபர். பாடசாலையின் சகல அபிவிருத்திகளிலும் என்னோடு தோளோடு தோள் கொடுத்து முகம் கோணாமல் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியவர். மாணவர் நலனுடன் நேரடியான தொடர்புள்ள சகல விடயங்களிலும் அவருடைய சேவை எமது பாடசாலைக்குக் கிடைத்த "bench mark" என்றால் அது மிகையாகாது. ஆங்கில புலமை மிக்க அவர் இதுவரையும் எமது உயர்தர மாணவர்கள் உட்பட சகல மாணவர்களுக்கும் ஆங்கில அறிவுக்கு வழிகாட்டியவர். ஆங்கிலத்தின் முக்கியத்துவம் மாணவர்கள் மத்தியில் வலியுறுத்தப்பட வேண்டும் என்பதற்காக மிகப் பாடுபட்டவர். ஓய்வு பெறும் கடைசி நாள்வரை கற்றல் கற்பித்தலில் விருப்புடன் ஈடுபட்டவர். பாடசாலை 1987 இலிருந்து 1999 வரை இடம் பெயர்ந்தபோதெல்லாம் பாடசாலை ஆவணங்கள் பாதுகாக்கப்படுவதில் விசுவாசத்துடன் செயற்பட்டவர்.

அவருடைய சேவையை அவதானிக்கும் போது ஒரு அர்ப்பணிப்புள்ள ஓர் ஆசிரியரின் விசுவாசத்தை எம் கண்முன்னே காட்டி நிற்பவர். பாடசாலை அவருடைய சேவையை ஓய்வுக் காலத்திலும் நாடி நிற்கின்றது என்பதை பெருமையுடன் கூறி வைக்கின்றோம். அவர் ஓய்வுக்காலம் சிறப்புற வாழ்த்துவதுடன் சமூகத்திற்கும் தொண்டாற்றவும் பயன்படட்டும் என மகாஜன சமூகம் சார்பில் வாழ்த்துகிறேன்.

கல்லூரி அதிபர்

### வெற்றித் திருமகள் ஆனாய்

எழில் சூழ் இலங்கை மண்ணில் ஏற்றமிகு யாழ்நகரில்
கலைசூழ் அளவைநகர் கற்றவர்கள் வரிசையிலே
விஜயரத்தினம் புனிதவதி தம்பதியர் மகிழ்ந்து பெற்ற
சௌபாக்கியகௌரி,பத்மநாதன் அருந் துணைவி
நூற்றாண்டு விழாக் காணும் மகாஜனவின் சேவைதன்னில்
நுண்மாண் நுழைபுலமாய் நூலறிவு ஆற்றல் கொண்ட
பிரதி அதிபர் சௌபாக்கியகௌரி பத்மநாதப் பெருந்தகையே!
சேவைநலம் போற்றுகின்றோம் சீர் பெருக நீ வாழி!
மாண்புமிகு ஆசானாய், பகுதித்தலைவரென சேவையாற்றி
மகிமைதரும் பிரதி அதிபரென உயர்வு கண்டு
முப்பத்தைந்து ஆண்டு சேவைக் காலமதில் இருபத்தைந்து
ஆண்டுகாலம் எம்மவர்க்காய் உழைத்த தாயே நீடு வாழி!
கற்றல் கற்பித்தல் இணைப்பாட விதானமொடு
பொற்புடனே ஆங்கிலத்தைப் பொறுப்பெடுத்த சேவைநலம்
உச்சமுடன் நிர்வாக ஒழுக்காற்று முகாமைத்துவம்,
மெச்சுகின்ற மேன்மையெல்லாம் மிக்கசேவை நீடு வாழி!
விசேட பயிற்சியோடு கலைப் பட்டதாரியாகி
கல்வி டிப்ளோமா மெய்யியலில் முதுமாணி
உசாத்துணைக்கோர் களஞ்சியமாய் உயர்தகுதி விழுமியங்கள்
உளசமூக ஆன்மீக நிறைவு கண்டீர் நீடு வாழி!
மகாஜனத்தாய் பெற்றெடுத்த மாணவர்தம் நலன்கள் பேணி
தேசிய நிலையில் எம்மை உயர்த்திவைத்த பெருமையோடு
வழிகாட்டிச் சேவைதன்னில் வீர விருது பெறவும் வைத்து
மானிடத்தை மதிக்கும் தாயே மாதவமே நீடு வாழி!
மகாஜனத்தாய் வாழ்த்துகின்றாள்
மனம் நிறைந்து வாழி ! வாழி!

ஆசிரியர் கழகம்


## காணி விற்பனைக்கு

நீர்வேலி தெற்கு, 6ஆம் கட்டையடியில் பருத்தித்துறை வீதியில் சிறிய வீடு, கிணற்றுடன் கூடிய 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:0776660740, 0776979762, 0712131811 (95736)

## அறைகள் வாடகைக்கு

வெள்ளவத்தையில் அறைகள் குறைந்த நாள் வாடகைக்கு உண்டு

விபரங்களுக்கு:-
- **Thas Rest**
391/6, Galle Road, Wellawatte
Tel:- 2360515, 2362586
- **Uthaya Rest**
58, Hamers Avenue, Wellawatte
Tel:- 2503552 2361242

**Mobile - 077685339**

## வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் ஐந்து பரப்புக் காணியுடன் கூடிய கல் வீடு வளவு விற்பனைக்குண்டு. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். தரகர்களும்தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு:
முருகன் நகைமாளிகை,
சாவகச்சேரி (இலங்கை வங்கி முன்பாக)
தொ.பே.0775369798

## "ஐங்கரன் திருமணசேவை"

யாழ். இந்து கௌரவ குடும்பம், UK Citizen 28, 32,34,37,40 வயது, Canada Citizen 31,34,37 வயது, அமெரிக்கா Citizen 37 வயது, ஜேர்மனி Citizen 32 வயது, கொலன்ட் Citizen 30 வயது, அவுஸ்திரேலியா Citizen 34,37 வயது ஆகிய மணமகன்மார் உள்ளனர். 24 மணி நேர தொலைபேசி வசதி உண்டு. பதிவுக்கட்டணம் இல்லை.
லண்டன் தொடர்பு:
00447508295863, 00447535384166
Fax No.. 00442086720673
E.Mail: anyngaran wedding @ yahoo.com (95729)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் உச்சியோடைப் பகுதியில் 3½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: தொ.பே.0776701502 (95738)

## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத் துணைத் தெரிவுக்குச் சுயதெரிவு முறையே. சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த, புகழ் பூத்த-சுயதெரிவு முறை முன்னோடி-தனிமனித நிறுவுநர்-சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெழு வேலமுதனுடன் தொடர்பு கொள்க.
கொழும்பு நேரடித் தொலைபேசி:2360488, 2360694, 4873929

## காணி விற்பனைக்குண்டு

நவாலி தெற்கில் பாதையோரமாக கிணற்றுடன் 5ப.6.6கு. காணி விற்பனைக்குண்டு. தேவையேற்படின் துண்டுகளாகப்பிரித்து விற்கப்படும்.
தொடர்பு: 077 9676128 (95713)

## லொறி விற்பனைக்கு (10 அடி)

WPLB - 7047, WPLA - 7250 இலக்கங்களைக் கொண்ட லொறிகள் உடன் விற்பனைக்குண்டு. வாகன மாற்றம் அல்லது சாரதியுடன் வாடகைக்கும் விடப்படும்.
தொடர்பு: 0776560149, 0714856550

## விற்பனைக்குண்டு

25 H.P மில் Motor, 15-25 A.M.P.S Starter, Antana பைப்புகள், இரும்புச் சாமான்கள், 14" Panasonic TV, Osaki CD Player என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு: இல 51, ஆத்திசூடி வீதி, பிள்ளையார் கோவிலுக்கு முன்புள்ள வீடு (95798)

## விற்பனைக்கு

ஜப்பான் 300 l - 3 face கொம்பிரசர்
டயர் கடை, வாகன சுத்திகரிப்பு நிலையத்திற்கு உகந்ததும், வாகனம் கழுவுவதற்கு பயன்படும் பிரஷர் ... விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0774030970


## 7 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 23.10.1923
உதிர்வு: 08.04.2003

# அமரர் சிற்றம்பலம் கனகசபை

(ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்)

*திதி: ஷஷ்டி*

அன்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
எம்மை அரவணைத்து ஆளாக்கி எம்மைவிட்டுப் பிரிந்து
ஏழு ஆண்டுகள் சென்றதுவோ
உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு அகலாது
இயற்கையின் நியதியை ஏற்றுக்கொண்டு உங்கள்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

புகையிரத வீதி, மாவிட்டபுரம். மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### தர்மலிங்கம் பத்மலிங்கம்



67/5, தர்மலிங்கம் அவெனியூ, கொட்டடி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், 45வருடங்கள் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் பத்மலிங்கம் கடந்த 11.03.2010 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் முன்னாள் முத்தையா மோட்டோர்ஸ் உரிமையாளராகிய காலஞ்சென்ற தர்மலிங்கம்-கண்மணி தம்பதிகளின் அன்பு மகனும், திருநாவுக்கரசு (UK)-காலஞ்சென்ற இராசாத்தி தம்பதிகளின் அன்பு மருமகனும், வாசுகியின் (UK) அன்புக் கணவரும், சுஜியின் (UK)அருமைத் தந்தையும், காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம், பத்மாவதி, தண்டாயுதபாணி, யுகலட்சுமி மற்றும் சத்தியலட்சுமி (கொழும்பு), கனகலிங்கம் (கொட்டடி), நடேசலிங்கம் (UK) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சித்திரலேகா (UK), பாலசுப்பிரமணியம் (கொழும்பு), குணரட்ணம் (கொழும்பு), காலஞ்சென்ற கிருஷ்ண மூர்த்தி மற்றும் பத்மலோஜினி (கொட்டடி), பிறேமா (UK) ஆகியோரின் மைத்துனரும், திலீப்குமார் (பிரான்ஸ்), தர்மகுமார் (ஜேர்மனி), திருலோக்குமார் (பிரான்ஸ்), நவநீதகுமார் (கொட்டடி) ஆகியோரின் சித்தப்பாவும், வினோத் (UK), மீரா (UK) ஆகியோரின் பெரியப்பாவும், சித்ரா (கொழும்பு), குலேந்திரன் (கனடா), பிரபா (பிரான்ஸ்), சுரேஸ் (UK), ரமேஷ் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2010) ஞாயிற்றுக்கிழமை லண்டன் நேரம் பகல் 11மணிக்கு லண்டன் கெண்டன் மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.கனகலிங்கம் (சகோதரன்).
67/43, தர்மலிங்கம் அவெனியூ, கொட்டடி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 0212227796, 0779352583. (95652)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் ஆட்டம் போடுவோர் எல்லாம் இயன்றவரை ஆடித்தான் பார்க்கிறார்கள்.....!

'அட! இத்தனை நல்லவர்கள் நம்மிடையே உள்ளார்களா?' என்று மக்கள் ஆச்சரியப் படும் அளவுக்கு மக்கள் நலன் சார்ந்த ஏராளமான வாக்குறுதிகளை அள்ளி வீசிக்கொண்டிருக்கிறார்கள் எங்கள் வேட்பாளக்குஞ்சுகள். இதுநாள் வரையில் தத்தம் அலுவல்களைப் பார்த்துக் கொண் டிருந்த அவர்களுக்கு இப்போதுதான் திடீர் ஞானம் பிறந்து மக் களின் பிரச்சினைகள் எல்லாம் தெரியத் தொடங் கியிருக்கின்றன. இதில் இன்னொரு வேடிக்கை என்னவென் றால் புலம்பெயர் நாடுகளில் இருந்துகூட மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக [?] பல வேட்பாளர்கள் கள மிறங்கியிருக்கிறார்கள்.

வழமையாக சுயேச்சைக்குழுக்களாகக் களமிறங்குபவர்கள் பொருளாதாரரீதியில் பின் தங்கியவர்களாகவே இருப்பர். இதனால் அவர்களுடைய பிரசார நடவடிக்கைகள் ஒரு வித மட்டுப்பாட்டுக்குள்ளேயே இருக்கும். பிரதான கட்சிகளின் ஏட்டிக்குப்போட்டியான பிரசார யுத்தத்தின் நடுவே இத்தகைய சுயேச் சைகளின் குரல் எடுபடாமலே போய்விடு வதே வழக்கமாக இருந்தது. ஆனால் இம் முறை எல்லாமே தலைகீழ். பிரதான கட்சி வேட் பாளர்களைவிடவும் சுயேச்சைகளின் கையே இதுவரையில் பிரசார யுத்தத்தில் ஓங்கி யிருப்பதை வீதிகள் தோறும் ஒட்டப்பட்டிருக் கும் சுவரொட்டிகள், வரையப்பட்டிருக்கும் சின்னங்கள், வாரி இறைக்கப்படும் கையடக் கக் கலண்டர்கள், தென்னிந்தியச் சினிமாப் படங்களில் வருவது போல நகரெங்கும் பவனி வருகின்ற ஒரே விதமான சொகுசு வாகனங் கள் என்பன புலப்படுத்தி நிற்கின்றன. இவ் வாறு சகல வசதிகளும் கொண்ட வாகனங்க ளில் வந்திறங்குகின்ற வேட்பாளர்கள், மக்க ளின் ஏழ்மை குறித்தும், அவர்களின் உரிமைப் பிரச்சினை குறித்தும் மக்களுக்கே தெரியாத மக்களின் பிரச்சினை குறித்தும் கண்ணீர்த் துளிகளில் கரைகின்றார்கள். பின்னர் அந்தக் கண்ணீர்த்துளிகளை ஒற்றியெடுத்து ஒப்பனை செய்துகொண்டு இன்னொரு கூட்டத்திற்குப் பறந்தோடுகின்றார்கள். அங்கும் இதே கண் ணீர் நாடகம் தான். இவ்வாறு சுயேச்சைக ளும் பிரதான கட்சிகளும் நடத்துகின்ற தேர் தல் கூத்தில் 'யாருக்கு வாக்களிப்பது?' என்று முடிவெடுப்பதைவிடவும் வழமைபோல யாருக்கும் வாக்களிக்காமல் விடுவதே நல்லது என்ற முடிவுக்கு தள்ளப்பட்டுக் கொண்டிருப் பதாக நண்பர் ஒருவர் என்னிடம் குறைபட் டுக்கொண்டார்.

அவர் சொல்வதும் உண்மைபோலவே பட்டது. தங்களுடைய நாடாளுமன்றக் கதி ரையை அடையும் கனவை நனவாக்குவதற் காக என்ன விலையேனும் கொடுப்பதற்கு தயாராக இருக்கின்ற வேட்பாளர்கள் மக்க ளைப் பற்றியோ, அவர்களது உடைமைகளைப் பற்றியோ எவ்வித அக்கறையும் கொள்ளா மல் ஒப்புக்கு அவர்களின் பிரச்சினைகள் பற்றி மட்டும் நீலிக்கண்ணீர் வடிக்கின்றார்கள்.

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர், தென்னி லங்கையில் இருந்து சகல பொருள்களும் தாராளமாக இறக்கப்படுவதால் இப்போது தான் தங்களுடைய வீடுகளை, மதில்களை யாழ். மக்கள் அவசரஅவசரமாகச் செப்ப னிட்டு வருகின்றார்கள். யுத்த அனர்த்தத் தால் சிதைந்து போன வீட்டு மதிலை, தான் வாயைக் கட்டி, வயிற்றைக்கட்டி சிறுகச் சிறுகச் சேமித்த பணத்தைக் கொண்டு மீளக் கட்டி தனக்குப் பிடித்த 'பெயின்ரையும்' அடித்து அழகு பார்த்துவிட்டு ஒருநாள் இரவு படுக்கைக்குப் போனார். விடிந்ததும் புது மதிலின் அழகைப் பார்க்க வந்தவருக்கு வயிறு பற்றி எரிந்தது. மதிலின் ஒரு இஞ்சிகூட இடை வெளிவிடாமல் வேட்பாளர்களின் அடிப்பொடி கள் சுவரொட்டிகளை வாரி இறைத்திருந் தனர். கடமையே கண்ணெனக் கருதும் பொலி ஸார் அந்த சுவ ரொட்டிகள் மீது தம்மால் எவ் வளவு முடியுமோ அந்தளவுக்கு கறுப்புநிற ஒயிலை ஊற்றியிருந்தார்கள். நேற்றிரவுவரை பார்ப்போரைச் சுண் டியிழுத்த புதுமதில் இப்போது சேடமிழுக் கும் கிழவிபோல பார்க்கவே பரிதாபமாக இருந்தது. இப்போது மதிலில் ஊற்றப்பட்ட ஒயிலை எப்படி இல் லாமல் செய்யலாம் என்று ஓடுப்பட்டுத் திரி கின்றார் அந்த மனிதர். இத்தகைய சம்பவங்களைக் குடாநாட்டில் சர்வசாதாரண மாகக் காணலாம்.

இதைவிட நடமாடும் பிரசாரங்களில் ஈடு படுகின்ற கட்சித்தொண்டர்கள் வேறொரு வகையில் மக்களுக்கு இடையூறு செய்வதென்றே பிடிவாதமாய் நிற்கின்றார்கள். வீதிகளில் பயணிப்போரின் அவசரத்தைப் புரிந்து கொள் ளாமல் நிறுத்திவைத்து தங்கள் கையில் உள்ள ஒருகட்டு துண்டுப் பிரசுரங்களையும் கொள்கை விளக்கங்களையும் திணித்து விடு வதிலேயே குறியாக இருக்கின்றார்கள். வீதி யில் வருபவர்கள் இளம் பெண்களாக இருந்து விட்டால் இன்னும் கொஞ்சநேரம் அவர்க ளோடு 'மினக்கெட்டு' கொள்கை விளக்கங் கள் பற்றி குட்டிப்பிரசங்கள் செய்து தங்களு டைய வித்துவச் செருக்கை வெளிப்படுத்தி விட வேண்டும் என்று அதீத அக்கறை எடுக் கின்றார்கள். பம்பலுக்காக அல்லது அலுப் புத்தெரியாமல் இருப்பதற்காக தாங்கள் பிர சாரம் செய்கின்ற பகுதிகளில் உள்ள வீடு களில் காய்த்துத்தொங்கும் பழவகைகளைப் பிடுங்குதல், பெண்களோடு பகிடிவிடுதல், வீட்டுநாய்களோடு மல்லுக்கட்டுதல், வீடு களுக்குக் கல்லெறிதல் போன்ற கைங்கரி யங்களையும் தவறாது நிறைவேற்றுகிறார்கள் வேட்பா ளர்களின் தொண்டர்கள். அரசியல் கட்சித் தொண்டர்களின் இத்தகைய எல்லை மீறும் நடவடிக்கைகளால் மக்கள் சினம் அடைந் தாலும் அவர்களோடு சச்சரவு செய்தால் தேர் தலுக்குப்பின்னர் பழிவாங்கப்படலாம் என்ற பயம் காரண மாக பேசாமல் ஒதுங் கிக் கொள்கின்றார்கள். ஏழ்மை பற்றியும் அபிவிருத்திபற்றியும் மூச்சுக்கு முன்னூறு தரம் முழங்கித் தள்ளுகின்ற வேட்பாளப் பெருந்த கைகள் தங்களுடைய பிரசாரங்களுக்காக அநியாயமாகச் செலவிடுகின்ற பணத்தை ஏன் மக்களின் சிறு பிரச்சினைகளைத் தீர்ப்ப தற்கு செல வழிக்க மறுக்கின்றார் கள் என்ற கேள்வியையும் ஒரு நண்பர் கேட் டார். தேர்தலில் வென்றால் 'அது செய்வோம். இது செய்வோம்' என்று மக்களை ஒரு கற்பனை உலகத்துக்கு அழைத்துச் செல்கின்ற வேட்பாளர்கள் யதார்த் தத்தில் தென்படுகின்ற சின்னச் சின்னப் பிரச்சினைகளைக் கூட- தம்முடைய தற் போதைய சக்திக்குட்பட்ட- தீர்ப்பதற்கு எள்ளளவு நடவடிக்கை தானும் எடுக்கின் றார்கள் இல்லை.

தற்போது தேர்தலில் நிற்கின்ற வேட்பாளர் ஒருவரை அண்மையில் சந்திக்க நேர்ந்தது. அவருடைய கொள்கைகள் பற்றியும் தேர்த லில் வென்ற பின்னர் மக்களுக்கு என்ன செய் யப் போகின்றீர்கள் எனவும் அவரிடம் வினவி னேன். அதற்கு சர்வசாதாரணமாக "அதைப் பற்றியெல்லாம் இப்போது தெரியாது. இப் போது அது பிரச்சினை இல்லை. தேர்தலில் வெல்ல வேணும். அதுக்குப்பிறகு என்ன செய் யிறதெண்டு யோசிக்கலாம்" என்று கூறினார் 'தொலை நோக்கு மிக்க' அந்த வேட்பாளர். இந்த லட்சணத்தில் தான் பெரும்பாலான வேட்பாளர்கள் இருக்கின்றார்கள். ஒரு படத் தில் "ஏய்! பாத்துக்க. நான் ஜெயிலுக்குப் போறேன். நானும் ரவுடி. நானும் ரவுடி. "என்று பெருமையோடு கூவுவார் வடிவேலு. அதே பாணியில் 'நானும் தேர்தலில் போட்டிடும் ஒரு வேட்பாளர் தான்,' என்று பிறருக்கு 'எழுப்பம்' காட்டுவதற்காகவே பலர் போட்டியிடுகின் றார்கள். அல்லது ஏதோ ஒரு வகையில் வரு மானம் கிடைக்கும் என்பதற்காகவும் களத் தில் நிற்பவர்களும் உண்டு. என்னதான் மக் களின் பிரச்சினை குறித்து தாங்கள் அதிகளவு அக்கறை கொள்வதாக இந்த வேட்பாளர்கள் காட்டிக்கொண்டாலும் தங்களின் வியர்வை நாற் றத்தை மறைப்பதற்காக அடித் திருக்கும் 'சென்ட்' வாசனையையும் மீறி அவர்களின் 'உண்மையான சுயரூபத்தின் சாக்கடை நாற் றம் மக்களுக்கு மிக நன்றாகவே தெரியும். ஆடு வோர் எல்லாம் நன்றாகவே ஆடட்டும். ஆனா லும் மக்களின் தீர்ப்பே அவர்களின் ஆட்டத்திற னையும் உண்மை முகத்தையும் தோலுரித்துக் காட்டும். ஆகவே ஏப்ரல் 8வரை இதற்காக எல் லோரும் காத்திருந்தே ஆகவேண்டும்.★★★

## அவர் தம் உண்மை முகம் தோலுரிந்து தெரியும்...

-ஒளண்யன்


# நாடாளுமன்றத் தேர்தல் - 2010

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - TNA



அன்றும் இன்றும் என்றும்
சொந்த மண்ணில்
உங்களுடன் ...

உதயன் நிர்வாக இயக்குநர்

தொழிலதிபர்

ஈ.சரவணபவன்

இலங்கைத் தமிழரசுக் கட்சி

X 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தூரம் வரை பறக்க முடியும்?

## வெளிக்கள முகாமையாளர் / நிதிச்சேவை ஆலோசகர்கள் (ஆயுள் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி)

### யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு பிராந்திய அலுவலகங்கள்

வளமான வாழ்வை அமைத்துக்கொள்ள எதிர்பார்த்திருக்கும் நீங்கள், உங்களது அனுபவம், தலைமைத்துவம் போன்ற திறமைகளால் பயன்பெற விரும்பினால் இதுவே உங்களுக்கான தருணம். சர்வதேச காப்புறுதி நிறுவனம் ஒன்றில் அங்கத்துவம் பெற கிடைக்கும் சிறந்ததோர் வாய்ப்பு.

புதிதாக நிறுவப்பட்டுள்ள எமது அலுவலகங்களில் இணைந்து பொறுப்புடன் சேவையாற்றுவதற்காக இம்மாவட்டங்களில் வசிக்கும் ஆர்வமும், கீழ்க்குறிப்பிடப்பட்ட தகைமைகளும் கொண்டவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வெளிக்கள முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பிக்க - கணிதம் உட்பட கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன், சிறந்த ஆளுமை, காப்புறுதித்துறையில் அனுபவம், நிதித்தீர்வுகளைத் தெளிவாகவும் இலகுவாகவும் கையாழும் தன்மை, வாடிக்கையாளர்களுக்கு விளக்கும் திறன், நம்பிக்கையுடன் சிறந்த தொடர்பைப் பேணுதல் போன்றவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

நிதிச்சேவை ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பிக்க - கணிதம் உட்பட கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன், சிறந்த ஆளுமை, திட்டமிடல், நிதித்தீர்வுகளைத் தெளிவாகவும், இலகுவாகவும் கையாழும் தன்மை, வாடிக்கையாளர்களுக்கு விளக்கும் திறன், நம்பிக்கையுடன் சிறந்த தொடர்பைப் பேணுதல் போன்றவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

நீங்களும் AVIVA NDB யுடன் இணைந்து பாரிய நன்மைகளைப் பெற்றுத்தரும் தொழில் வாய்ப்பு ஒன்றைப் பெற்றுக்கொள்ள பொருத்தமான ஒரு சந்தர்ப்பம் இதுவாகும்.

எதிர்பார்க்கும் எல்லைகளைத் தாண்டிச்செல்ல உங்களால் முடியுமானால், உங்களது தொழிலிலும் எல்லைகள் இன்றி உயர்ந்து செல்வதற்கு இதோ வாய்ப்பு.

நீங்கள் பெறும் பல்வேறு பயன்களில், உங்களுக்கான ஆயுள்காப்புறுதி, உங்களுக்கும் உங்களது துணைவியருக்கும் மருத்துவச் செலவுகளுக்கான நிதி, ஓய்வூதியத் திட்டங்கள் மற்றும் குறைந்த வட்டியுடன் வீட்டுக்கடன் போன்றவை உள்ளடங்கும். இதற்கு மேலதிகமாக வெளிநாட்டுப் பயணங்களில் இணைந்துகொள்ளும் வாய்ப்பு. தேவை ஏற்படுமாயின் பயிற்சிக் காலத்தில் முற்பணம் பெறவும் வாய்ப்பு உள்ளது. இவை அனைத்தும் கிடைப்பது உங்களது திறமைகளைப் பொறுத்தே.

AVIVA NDB யின் அங்கத்தவராவதற்கு நீங்கள் செய்யவேண்டியது;

வவுனியா - Regional Manager, 66 Station Road, Vairavapuliyankulam, Vavuniya தொலைபேசி 0777 593078, 0773 609033

திருகோணமலை - Regional Manager 5A Main Street, Trincomalee தொலைபேசி 0777 697113

மட்டக்களப்பு - Regional Manager, 42/1 Trincomalee Road, Batticaloa. தொலைபேசி 0773 998953

யாழ்ப்பாணம் - Regional Manager, 62/6 Stanley Road, Jaffna தொலைபேசி 0773 521472

உங்களுடைய விண்ணப்பங்களை 10 நாட்களுக்குள் அனுப்பி வைக்கவும் அல்லது wealthplanners@avivandb.com க்கு மின்னஞ்சல் செய்யவும். மேலதிக விபரங்களுக்கு 2310310 ல் அழைக்கவும்.

AVIVA NDB
காப்புறுதி நிறுவனம்

24 மணிநேர தொலைபேசி 2310310 மின்னஞ்சல் info@avivandb.com இணையத்தளம் www.avivandb.com

TBWA\TAL

### பண்ணை வீதி புனரமைப்பு பணிகள் துரிதகதியில்

யாழ்ப்பாணம்,மார்ச் 21

பண்ணை வீதி புனரமைக்கும் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை இந்தப் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

தார்க்கலவை மூலம் வீதிகளில் காணப்படும் சேதங்கள் சீர்செய்யப்படுகின்றன.

குறிகாட்டுவான் துறைமுகப்பகுதியில் உள்ள சேதங்களும் புனரமைக்கப்பட்டு வருகின்றன. (50-224)

### மலசலகூடம் அமைக்க 25ஆயிரம் ரூபா நிதியுதவி

கைதடி,மார்ச் 21

கைதடி கலைநகர் வளர்மதி முன்பள்ளியில் மழலைகளின் நன்மை கருதி மலசலகூடம் ஒன்றை விரைவில் அமைப்பதற்கு திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ்.வைத்தியசாலையின் உமையாளர்எஸ்.குலேநதிரராஜா (குயிலன்) 25ஆயிரம் ரூபாவை நன்கொடையாகவழங்கியுள்ளதாக வளர்மதி முன்பள்ளி நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

கடந்த 18ஆம் திகதி மேற்படி முன்பள்ளிக்கு நேரடியாக வருகை தந்து அதனைப் பார்வையிட்ட பின் இத்தொகையை அவர் வழங்கியதுடன் இனி வரும்காலங்களிலும் இம்முன்பள்ளிக்கு தொடர்ந்து தான் பல வகைகளிலும் உதவிசெய்வேன் என உறுதியளித்துள்ளதாகவும் நிர்வாகத்தினர் மேலும் தெரிவித்தனர். (50-288)

### இம்மாத நிவாரண விநியோகம் ஆரம்பம்

கைதடி,மார்ச் 21

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு மீளக்குடியமர்ந்த மக்களுக்கான இம்மாத நிவாரணம் கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளைகளில் தற்போது வழங்கப்பட்டு வருவதாக கைதடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ந.சிவதிருச்செந்தூர்நாதர் அறிவித்துள்ளார்.

மேற்படி நிவாரணத்தை எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்ன் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (50-288)

### ஒன்று கூடல் நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச் 21

மயிலிட்டி றோ.க.த.க. பாடசாலையின் பழைய மாணவர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (50-204-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தாயகம் திரும்புவதா?

நான் வீட்டுக்குப் போக வேண்டும் - என நிசா என்னிடம் கூறினாள்.

சிறிலங்காவின் 26 வருடகால இனப்போரின் போது நாட்டை விட்டு வெளியேறி, இந்தியாவின் தமிழ்நாட்டில் சிதறிக்கிடக்கும் சுமார் ஒரு லட்சம் ஈழத் தமிழ் அகதிகளுள் இவளும் ஒருத்தி.


இலங்கை அகதி போடி

2008ஆம் ஆண்டு நிசா வவுனியாவிலிருந்து புறப்பட்ட போது அவளது அகதிப் பயணம் ஆரம்பமானது. உள்நாட்டிலேயே அவள் இரண்டு முறை இடம்பெயர்ந்திருந்தாள்.

போர் இடம்பெற்றுக்கொண்டிருந்த காலமது. ''எனது பிள்ளை, எனது கணவன் மற்றும் எனக்கு என்ன நடக்குமோ என நான் அஞ்சினேன்.'' - என்று என்னிடம் விவரிக்கிறாள் நிசா.

இவளது நெருங்கிய உறவுகள் இன்னமும் வவுனியாவிலேயே வாழ்ந்து வருகிறார்கள். அங்கு அமைதி நிலவுவதாகவும், இனி எந்தப் பிரச்சினையும் வந்துவிடாது எனவும் வவுனியாவிலிருக்கும் எனது பெற்றோர்கள் கூறுகிறார்கள் என்று நிசா தொடர்ந்து தெரிவித்தார்.

ஊரில் இருந்த போது விவசாயத்தில் ஈடுபட்டு வந்த நிசாவின் கணவன் இங்கு . தமிழ்நாட்டில் வண்ணப்பூச்சுத் தொழில் செய்கிறார்.

''தொழில் நிமித்தமாக வெளியிடங்களுக்குச் செல்லும் எனது கணவர் வாரத்தில் ஒரு முறை தான் வீட்டுக்கு வர முடிகின்றது.''

இந்திய அரசால் நிர்வகிக்கப்படும் முகாம் ஒன்றிலேயே நிசா தனது பிள்ளையுடன் வசித்துவருகிறார்.

போரென்று வந்து விட்டால் பொது மக்களுக்கு இழப்புக்கள் இருக்கத் தான் செய்கின்றன.

கணவன், சகோதர சகோதரிகள், மாமன், மச்சான் என ஆயிரக்கணக்கான பொது மக்கள் சிறிலங்காவில் இடம்பெற்ற போரிலும் இறந்து போனார்கள்.

புஸ்பாவைப் பொறுத்தவரையில் அவள் தனது தந்தையை இழந்து நிற்கிறாள். ''சிறிலங்காவிற்கு என்னால் திரும்பப் போக முடியாது'' - எனக் கண்கள் குளமாகிக் கண்ணீர் வழிந்தோட என்னிடம் கூறுகிறாள்.

''அந்தத் துயரச் சம்பவத்தை நான் நினைத்துப் பார்க்கிறேன்'' என வழிந்தோடிய கண்ணீரைத் துடைத்தவாறு தொடர்கிறாள்.

ஓர் இரவு புஸ்பாவின் கிராமத்திலிருந்து 25 ஆண்கள் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். வீதியினருகே உயிரற்ற உடல்களாகவும் ஏனையோர் மோசமாகக் காயமடைந்த நிலையிலும் வீசி எறியப்பட்டிருந்தார்கள். இந்தச் சம்பவத்தின் போது இறந்தவர்களுள் புஸ்பாவின் தந்தையும் ஒருவர்.

சிறிலங்காவின் வடக்குக் பகுதியிலுள்ள முகாமொன்றில் புஸ்பாவின் சகோதரன் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறான்.

''நான் இந்தியாவிற்கு வருவதற்கு முன்னர் எனது சகோதரனைப் பார்ப்பதற்குச் சென்றேன். நடுவே கம்பி வேலியால் பிரிக்கப்பட்டு இருந்தமையினால், என்னால் அவனுடன் அதிகம் பேசமுடியவில்லை.

புஸ்பா 2009 ஆம் ஆண்டு படகு மூலம் இந்தியாவிற்கு வந்திருந்தார்.

''எங்களது கிராமத்தில் சுமார் நூறு குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. ஆனால், தற்போது இரண்டு குடும்பங்கள் மாத்திரமே அங்கிருக்கின்றன. இந்த நிலையில் அங்கு திரும்பச் செல்வதற்கு என்னால் முடியாது'' - என்கிறார் புஸ்பா.


அவளது கண்களிலிருந்து மறுபடியும் கண்ணீர் வழிந்தோடுகிறது.

வடக்குப் பகுதிக்குச் செல்வதற்கு ஏதுவாக சிறிலங்காவிற்கான நுழைவு அனுமதியைப் பெறுவதற்கு என்னால் முடியவில்லை.

# அகதிகள் திரிசங்கு நிலையில்!

இலங்கையின் இன மோதல்கள் தொடர்பான, போரின் காரணமாக இடம்பெயர்ந்தவர்கள் மீது ஏற்பட்டிருக்கும் பாதிப்புகள் பற்றிய எனது தனிப்பட்ட பார்வை இது தான்.

- இவ்வாறு எழுதியுள்ளார், புதுடில்லியைத் தளமாகக் கொண்டியங்கும், ஐரோப்பிய ஒன்றியத்தின் மனிதாா்ந்த திணைக்கள (European Commission Humanitarian Deparment - ECHO) பணியாளர் மாலினி மோஷறியா (Malini Morzaria). இவர் பாகிஸ்தான், சிறிலங்கா, பங்களாதேஷ், இந்தியா, ஈரான்,


அகதி முகாம்களுக்கு ஈழ அகதிகள் லொறிகளில் ஏற்றிச் செல்கின்றபோது

நேபாள், பூட்டான், மாலைதீவு ஆகிய நாடுகளுக்கு பொறுப்பாளராக உள்ளார். அவர் மேலும் விவரிக்கின்றார்:-

கடந்த வருடம் முடிவுக்கு வந்த சிறிலங்காவின் இன மோதல்களின் விளைவாக 3 லட்சம் பொதுமக்கள் இடம்பெயர்ந்திருந்தார்கள்.

நாட்டின் வடக்குப் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் முகாம்களில் இன்னமும் இடம்பெயர்ந்தவர்கள் தங்கவைக்கப்பட்டு இருக்கிறார்கள். தற்போது தான் அந்த மக்கள் தத்தமது சொந்த இடங்களில் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்தியாவின் தமிழ்நாடு விசாலமான நிலப்பரப்பைக் கொண்டது. மலைகளையும் புல்வெளிகளையும் தென்னந் தோப்புக்களையும் வயல் நிலங்களையும் தாண்டி நாம் பயணம் செய்தோம்.

தமிழ்நாட்டில் ஈழ அகதிகள் தங்கவைக்கப்பட்டிருக்கும் முகாம்களுக்கு இடையிலான தூரம் மிகவும் அதிகம். ஒரு முகாமிலிருந்து இன்னொரு முகாமிற்குப் பயணிப்பதற்கு பல மணிநேரத்தைச் செலவிடவேண்டியிருந்தது.

படகுகள் மூலம் தமிழ்நாட்டுக் கரையை வந்துசேர்ந்த ஈழ அகதிகளது பயணப் பாதையை என்னால் அறிந்துகொள்ள முடிந்தது. பெரும்பாலும் இரவில் படகுகளில் வரும் அகதிகள் ராமேஸ்வரத்தை அண்டியுள்ள ராமர் அணைப் பகுதியின் மணல் திட்டுக்களிலேயே இறக்கி விடப்படுகிறார்கள்.

புராணக் கதைகளில் இந்தியாவிற்கும் சிறிலங்காவிற்கும் இடையில் மக்கள் நடந்தே பயணித்திருக்கிறார்கள் என நான் அறிந்திருக்கிறேன். குறித்த ஒரு பகுதியில் சிறிலங்காவிற்கும் இந்தியாவின் தமிழ்நாட்டுக்கும் இடையிலான தூரம் வெறும் ஏழு கிலோ மீற்றர்களே.

இவ்வாறாகப் புதிதாக வரும் தமிழ் அகதிகள் லொறிகளில் ஏற்றப்பட்டு காவற்துறை நிலையத்திற்குக் கொண்டுவரப்படுகிறார்கள். பின்னர் அங்கிருந்து இடைத்தங்கல் முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்படு கிறார்கள்.

இடைத்தங்கல் முகாம்களில் ஒரு சில நாட்கள் தங்கியிருக்கும் இவர்கள் தொடர்பான தகவல்களைப் புலனாய்வு அதிகாரிகள் திரட்டுகிறார்கள். ஈற்றில் அவர்கள் நிரந்தர முகாம்களுக்கு அனுப்பப்படு கிறார்கள்.

தற்போதுதான் இந்த அகதிகள் நம்பிக்கையுடன் இருக்கின்றனர் எனவும் இருள் சூழ்ந்த தங்களது வாழ்வில் அவர்கள் தற்போதுதான் நம்பிக்கை ஒளியைப் பெற்றுள்ளனர் எனவும் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டிருக்கும் ஈழ அகதிகளுக்கான இந்த முகாம்களுக்குக் கடந்த சில வருடங்களாகச் சென்று வரும் எனது நண்பர்கள் சிலர் கூறுகிறார்கள்.

சிறிலங்காவில் வாழும் தமிழர்களில் பொரும்பான்மை யானோர் - இப்போது, தங்கள் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கே விரும்புகிறார்கள் என அண்மையில் சிறிலங்காவிற்குச் சென்று திரும்பிய


ஈழ அகதி நிசா

ஊடக நண்பர் ஒருவர் என்னிடம் தெரிவித்தார்.

''சிறிலங்காவின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியில் சுயாட்சி கோரி பெரும்பான்மைச் சிங்களவர்களுடன் போராடி வந்த தமிழ்ச் சிறுபான்மையினருக்கு மூன்று தசாப்த காலப் போரின் பின்னரும் எதுவும் கிடைத்துவிடவில்லை.'' - என அந்த ஊடக நண்பர் கூறினார்.

''எந்தத் தொடக்கப் புள்ளியில் சிறுபான்மைத் தமிழர்கள் போராட்டத்தை ஆரம்பித்தார்களோ அந்தப் புள்ளிக்கே அவர்கள் திரும்பவும் வந்துவிட்டார்கள்.'' - என்றார் அவர்.

போரில் ஈடுபட்டிருந்த அரச படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சிக்கி, யுத்தத்தின் பலிக்கடாக்கள் ஆக்கப்பட்ட பொது மக்களது கசப்பான கடந்த கால நினைவுகள் மிகவும் கோரமானவை.

**- தி. வண்ணமதி -**


சிறிலங்காவில் தற்போது நிலவும் - எளிதில் உடையக் கூடிய - அமைதி நிலையைக் கூர்ந்து அவதானித்து வருகின்ற தமிழ்நாட்டில் வசித்து வரும் ஈழ அகதிகளைப் பொறுத்தவரையில் அகதிகளாக தமிழ்நாட்டிலேயே தங்கியிருப்பதா அல்லது தங்களது வீடுகளுக்கு திரும்பிச் செல்வதா என்பது ஒவ்வொரு குடும்பத்தினதும் தேர்வாகவே இருக்கிறது.

20 வருடங்களுக்கும் மேலாக அகதியாக இந்தியாவிலேயே தங்கியிருக்கும் போடி என்ற தமிழ் விதவை, ''எனது பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் இலங்கைக்குத் திரும்பச் செல்லுவதற்கு விரும்பவில்லை. அவர்களைப் பொறுத்தவரையில் இந்தியா தான் அவர்களது இல்லம்'' - எனக் கூறுகிறார்.

''எனது இறுதி நாட்களை இலங்கையில் கழிக்கவே நான் விரும்புகிறேன். அதற்காக எனது பிள்ளைகளையும் பேரக் குழந்தைகளையும் தமிழ்நாட்டில் விட்டுவிட்டு தனியே என்றாலும் செல்லவே விரும்புகிறேன்' - என்றார் அந்த விதவை. *

நன்றி: 'புதினப் பலகை'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படத்தில் தோன்றுபவர்களின் அடையாளம் காப்பதற்காக முகம் மறைக்கப்பட்டுள்ளது.

## பொறுத்தது போதும் இத்துன்பம்!
## மாற்றுவோம் ஆட்சியை!

பொருளாதார அபிவிருத்தியை நாட்டிற்கு அளித்த கட்சியுடன் அனைவருக்கும் சௌபாக்கியம் நிறைந்த நாளையை ஏற்படுத்துவோம்.

## ஐக்கிய தேசிய முன்னணி

CONCEPT STUDIO 2429

*நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு, இலங்கை மத்திய வங்கி, தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் ஆகியவற்றின் கணிப்பீட்டிற்கேற்ப.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் 50 வருடகாலம் நிலைத்த தனி அரசு
# சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்ததும் தனி வரலாறு

யாழ்ப்பாணம் இலங்கையைச் சேர்ந்ததாயினும் அதன் வரலாறு தமிழ்மக்கள் வரலாற்றில் ஒரு பகுதியாக இடம்பெறத்தக்கது. யாழ்ப்பாணத்தில் 12 ஆம் நூற்றாண்டு முதல் ஏறக்குறைய 500 ஆண்டுகளாக ஓர் அரச பரம்பரை நிலைபெற்றிருந்தது.

இந்தப் பரம்பரை அரசர்கள் 14 ஆம் நூற்றாண்டில் இலங்கை முழுவதிலேயும் ஏகாதிபத்தியம் பெற்றிருந்தார்கள். இவர்கள் தங்களை ஆரியச் சக்கரவர்த்திகள் என்று கூறிக்கொண்டபோதிலும் தமிழ் மன்னர்களாகவே விளங்கினார்கள்.

இவர்கள் யாழ்ப்பாணத்தில் ஒரு தமிழ்ச் சங்கத்தை நிறுவி தமிழைப் பெரிதும் வளர்த்தார்கள். இவர்களில் சிலர் தமிழில் சிறந்த புலமையுடையவர்களாக இருந்தார்கள்.

இந்த அரசர்களுடைய பூர்வீக வரலாறு இராமேஸ்வரத்தோடு தொடர்புடையதாகும். இவர்கள் சேது காவலர் என்ற பட்டம் தரித்திருந்தார்கள். சேதுநாடு இவர்கள் ஆதிக்கத்தில் இருந்தாகத் தெரிகிறது. இவர்களுடைய நாணயங்களில் சேது என்ற சொல் பொறிக்கப்பட்டிருந்தது. இந்த நாணயங்களில் சில யாழ்ப்பாணத்துப் பொருள்காட்சிச் சாலையில் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றது.

இராமேஸ்வர ஆலயத்தைப் பழைய காலத்தில் பரிபாலித்து வந்த பிராமண வம்சத்தோடும் கலிங்க நாட்டு அரச வம்சத்தோடும் ஆரியச் சக்கரவர்த்திகள் சம்பந்தப்பட்டவர்கள் என்று கருதவேண்டியிருக்கிறது. 12 ஆவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் முதலாம் குலோத்துங்கசோழன் நடத்திய கலிங்கப் போர்களில் சிதறுண்ட கலிங்க அரச வம்சத்தைச் சேர்ந்த சிலர் இராமேஸ்வரத்துக்கு வந்து அங்குள்ள ஆலயத்தைப் பரிபாலித்த பிராமணக் குடும்பங்களோடு கலப்புற்றனர் என்று ஊகிக்கப்படுகிறது.

கலிங்க நாட்டு அரசர்கள் கங்கை வம்சத்தைச் சேர்ந்தவர்கள். ஆரியச் சக்கரவர்த்திகள் இராமேஸ்வரத்தில் ஆதிக்கம் பெற்றிருந்த பிராமணர்களின் வழித்தோன்றல்கள் என்றும், கங்கை வம்ச அரசர்கள் என்றும் இவர்கள் ஆட்சிக் காலத்தில் இயற்றப்பட்ட நூல்கள் கூறுகின்றன.

### பாண்டிய மன்னன்

யாழ்ப்பாணத்திலிருந்த பாண்டிமழவன் என்ற ஒரு வேளாளத் தலைவன் மதுரைக்குச் சென்று அங்கு பாண்டிய மன்னனிடத்தில் அரசகாரியம் அவனுடன் புகழேந்திப் புலவரையும் அப்பாண்டியன் சோழ அரண்மனைக்கு அனுப்பி வைத்தான் என்று இந்தக் கர்ணபரம்பரை வரலாறு கூறும்.

இவ்வரலாறு ஓரளவு உண்மை யானதென்றே தோன்றுகின்றது. இப் பாண்டியன் குமார குலோத்துங்கனுடைய தந்தையாகிய விக்ரம சோழனுக்கு கலிங்கப் போரில் உதவிசெய்த பாரந்தக பாண்டியனாக இருக்கலாம் என்று கருதுவதற்கு இடமுண்டு. இவர்களுடைய காலம் 12ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். புகழேந்திப் புலவர் யாழ்ப்பாணம் சென்று ஆரியச் சக்கரவர்த்தியிடம் சன்மானம் பெற்ற காலமும் இதுவே என்று சொல்லலாம்.

### சடையப்பவள்ளலின் நெல்

ஆரியச் சக்கரவர்த்திகள் செகராச சேகரன் என்றும் பரராச சேகரன் என்றும் ஒருவர் பின் ஒருவராகப் பட்டம் வகித்து வந்தார்கள். இவர்களுள் பரராச சேகரன் என்ற

> **இக்கட்டுரையை எழுதியவர் அறிஞர் சு.நடேசபிள்ளை. வரலாற்றுத் தகவல்களையும் இலக்கியத்தையும் தொட்டுக் காட்டும் இந்தப் பதிவு உதயனின் ஞாயிறு சிறப்பம்சமாக வெளிவந்த "சூரியகாந்தி" யில் (18.10.1998) பிரசுரமானது.**

பட்டம் தாங்கிய ஒரு மன்னன் காலத்தில் கொடிய பஞ்சம் உண்டானபோது, குதுவையிலிருந்த சடையப்ப வள்ளல் நூற்றுக்கணக்கான படகுகளில் நெல் அனுப்பியதைப் பெற்றுக்கொண்டு அவன் தனது நன்றியை ஓர் அருமையான செய்யுள் வாயிலாக அறிவித்தான்.

"இரவு நண்பகல் ஆகிலென்பகல் இருளறா இரவாகிலென்
இரவியெண்திசை மாறிலென்கடல் ஏழுமேறி லென் வற்றிலேன்
மரபுதங்கிய முறைமைபேணிய மன்னர் போகி லெனாகிலென்
வளமையின்புறு சோழ மண்டல வாழ்க்கை காரணமாகவே
கருது செம்பொனின் அம்பலத்திலோர் கடவுள் நின்று நடிக்குமே
காவிரித்திரு நதியிலேஒரு கருணைமாமுகில் துயிலுமே
தருஉயர்ந்திடு புதுவையம்பதி தங்குமன்னிய சேகரன்
சங்கரன்தருசடையன் என்றொருதரும தேவதை வாழவே"

யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகளுள் இவ்வரோதயனே எல்லா வகையிலும் சிறப்புற்றவன். இவன் ஒரு பெரிய கொடை வள்ளலாகத் திகழ்ந்தான். இவன் முத்தமிழிலும் வேதாகம புராணங்களிலும் பாண்டித் தியம் பெற்றவன். தக்கண கைலாச புராணத்தை இவன் தமிழ்ச் செய்யுட் காப்பியமாக அந்தாதித் தொடையில் இயற்றியுள்ளான். இப்புராணம் அறு நூறுக்கு மேற்பட்ட இனிய செய்யுள்களை உடையது. அவற்றுள் உதாரணமாக இரண்டு செய்யுள்கள் இங்கே காட்டத்தகுவன.

காப்பிட்டலர்வாய் அளியினங்கள்
கனிகொண்ட சோசின் மலர்பாய
ம்பட்டன்னம் மேற்பாய்ந்து
வெடிக்கும் பலவிக் சுளைத்தேனும்
பூப்பிட்டொழுகும் பசுந்தேனும்
பொழிந்து பதைக்கும் வானரங்கள் கூப்பிட்டயலார்க்
உரைப்பவைபோல்
குயிலும் மயிலும் குரல்காட்டும்

காட்டும் கதலிக் கொழுங்கனியும்
கமுகின் கனியும் மாங்கனியும்
கோட்டின் பலவின் சுளைக்கனியும்
கூட்டிக் கறியின் கொடிவிழ்த்து
நாட்டின் கரும்பின் பிணையொடித்து
நறுநீர் வாவிதோறும் சிதறித்
தோட்டின் கமலமலர்ப் பொருட்டுத்
துயில்வண்டெழுப்பும் திருநாடு.

### செண்பகப் பெருமாள்

ஆனால் 14ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆதிக்கம் தளர்வுற்றது. அக்காலத்தில் இருந்த சிங்கள மன்னனின் மந்திரியாகிய அளகேசுவரன் என்பவன் ஆரியச் சக்கரவர்திக்குக் கப்பம் கட்ட மறுத்து அவன் அனுப்பிய பண்டைகளோடு போரிட்டு வென்றான். இதற்குப் பிறகு கி.பி. 1450ஆம் ஆண்டில் ஆறாம் பராக்கிரமபாகு என்ற சிங்கள அரசன் செண்பகப்பெருமாள் என்ற படைத் தலைவனை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினான்.

அப்பொழுது அங்கு அரசனாயிருந்த கனகசூரிய ஆரியச் சக்கரவர்த்தி போரில் தோற்றுத் தன் நாட்டை இழந்து தென்னிந்தியாவுக்கு வந்தான். பதினெழு ஆண்டுகளுக்குப் பின்னர் இவன் ஒரு

## வரோதயச் சக்கரவர்த்தி காலத்தில் சிறப்புற்று விளங்கியது

பயின்று கொண்டிருந்த ஓர் அரசகுமாரனைப் பாண்டிய மன்னன் ஆதரவுடன் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவந்து அவனை அரசன் ஆக்கினான் என்று யாழ்ப்பாணச் சரித்திர நூல்கள் வாயிலாக அறிகின்றோம். இந்த அரசகுமாரனே யாழ்ப்பாணத்தை ஆண்ட முதல் ஆரியச்சக்கரவர்த்தி ஆவான்.

இவனை அனுப்பிய பாண்டிய மன்னன் காலத்தில் புகழேந்திப் புலவர் அவனுடைய அவைப் புலவராக இருந்தார் என்று தெரிகின்றது. இப்புலவர் பின் இலங்கைக்குச் சென்று கதிர்காமத் தலத்தைத் தரிசித்து யாழ்ப்பாணத்துக்கு வந்து இவ்வாரிய மன்னனால் சன்மானிக்கப்பெற்றார் என்று அருவருடைய செய்யுள்கள் சிலவற்றால் அறியக் கிடக்கிறது. இச் செய்யுள்கள் தமிழ் நாவலர் சரிதை என்ற நூலில் காணப்படுகின்றன.

### சிங்கை நகரம்

யாழ்ப்பாணத்தில் இருந்த ஆரிய அரசன் இவரைப் பாண்டியன் அவையில் முன்னரே அறிந்திருந்தவன் என்று கொள்ளத்தகும். இவ்வாரிய அரசன் இவருக்குச் சில யானைகளைப் பரிசாகக் கொடுத்தான் என்றும் இந்த யானைகளை வாங்குவதற்குத் தமிழ் நாட்டரசர்கள் இவருடைய வாயிலில் காத்திருந்தார்கள் என்றும் இவர் பாடிய செய்யுள் ஒன்று கூறுகின்றது.

"பாவலன் வாசலில் வந்திபம் வாங்கப் படிபுரக்கும்
காவலர் நிற்கும் படி வைத்த வாகண்டி ஒன்பதினும்
மேவலர் மார்பினும் திண் தோளினும் செம் பொன் மேருவினும்
சேவெழுதும் பெருமான் சிங்கை ஆரிய சேகரனே"

இச்செய்யுளில் 'சே' என்பது ஆரியச் சக்கரவர்த்தியின் நந்திக்கொடியையும் 'சிங்கை' என்பது அவனது தலைநகரத்தையும் குறிக்கின்றன.

இவ்வாரியச் சக்கரவர்த்தி இறந்தததைக் கேட்டு ஆற்றாது புகழேந்திப் புலவர் பின்வரும் உணர்ச்சி மிக்க செய்யுளைப் பாடியதாகச் சொல்லப்படுகின்றது.

'ஆகு விதியோ அடலா ரியர்கோமான்
ஏ வலரால் இழிந்தநாள்- ஓஒ
தருக்கண் ணிலும் குளிர்ந்த தண்ணளிதந் தாண்ட
திருக்கண் ணிலும் சுடுமோ தீ'

புகழேந்திப் புலவர் ஒட்டக்கூத்தர் காலத்தவர் என்று ஒரு கர்ணபரம்பரை வரலாறு உண்டு. ஒட்டக்கூத்தரிடம் தமிழ் பயின்ற குமார குலோதுங்க சோழன், பாண்டியன் மகளை மணம் செய்தபோது, சடையப்ப வள்ளலுக்கு கம்பர்கூட இவ்வளவு பெருமை கொடுத்துப் பாடவில்லை. தில்லை நாதனோடும் அரங்க நாதனோடும் சடையப்ப வள்ளல் இந்தக் கவியில் சம இடம் பெறுவதைக் காண்கிறோம்.

### பாண்டியருடன் நட்புறவு

ஆரியச் சக்கரவர்த்திகள் முடிமன்னராக யாழ்ப்பாணத்தை ஆண்டபோதிலும் சேது நாட்டதிபதிகள் என்ற முறையில் பாண்டியருக்கு உட்பட்டு நட்புரிமை பூண்டவர்களாக இருந்தார்கள். பாண்டியர்கள் 13ஆம் நூற்றாண்டில் மைசூர் நாட்டு ஹெய்சளர் என்ற போசளருடன் நடத்திய போர்களில் ஆரியச் சக்கரவர்த்திகள் உதவி புரிந்தார்கள். ஓர் ஆரியச் சக்கரவர்த்தி போசளரை வென்றதாகச் சொல்லப்படுகின்றது. பாண்டியர்களும் ஆரியச் சக்கரவர்த்திகளுக்குத் துணை செய்தார்கள் என்று தெரிகின்றது.

13ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் மாறவர்மன் குலசேகர பாண்டியன் காலத்தில் சிங்கள நாடு அவன் ஆட்சிக்குள் வந்தது. பாண்டிய நாட்டு மந்திரியாகிய ஆரியச் சக்கரவர்த்தி என்பவன் ஈட்டிய வெற்றி இதற்குக் காரணம் என்று இலங்கைச் சரித்திர நூலாகிய மஹாவம்சம் கூறுகின்றது.

இவ்வாரியச் சக்கரவர்த்தி யாழ்ப்பாணத்து அரசர்களில் ஒருவன் என்று திடமாகச் சொல்வதற்கில்லை. அவர்களோடு சுற்றத் தொடர்பு உடையவனாக இருந்தவன் என்று மாத்திரம் நிச்சயமாகச் சொல்லலாம். இவனது வெற்றி யாழ்ப்பாணத்து ஆரியச் சக்கரவர்த்திகள் தென்னிலங்கையில் பின்னர் ஆதிக்கம் செலுத்துவதற்குக் காரணமாக இருந்தது.

### வரோதயச் சக்கரவர்த்தியின் சிறப்பு

14ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வரோதய ஆரியச் சக்கரவர்த்தி என்பவன் ஆட்சிக்கு வந்தான். இவன் காலத்திலேதான் யாழ்ப்பாணம் உச்சநிலையை அடைந்தது. இலங்கை முழுவதையும் இவன் ஒரு குடையின்கீழ் வைத்து ஆண்டான். இவன் காலத்தில் இயற்றப்பட்ட செகராசசேகரன் மாலை என்ற சோதிட நூல் இதைத் தெளிவாகக் கூறுகின்றது. இந்நூலின் சிறப்புப் பாயிரத்தில் வரும் ஒரு செய்யுளினின்று இவன் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் மூத்த மகனாகிய சுந்தரபாண்டியன் மதுரையினின்று துரத்தப்பட்டபோது அவனுக்கு உதவியளித்தான் என்று அறியக்கூடியதாக இருக்கின்றது. இது நிகழ்ந்த காலம் கி.பி. 1310ஆம் ஆண்டு என்று நிச்சயிக்கலாம்.

படையைத் தென்னிந் தியாவினின்று திரட்டிக் கொண்டு யாழ்ப்பாணத்துக்குச் சென்று போரிட்டுத் தான் இழந்த உரிமையை மீண்டும் பெற்றான்.

கனகசூரிய ஆரியச் சக்கரவர்த்திக்குப் பின் பரராசசேகரன் என்ற அரசன் ஆண்ட காலத்தில் யாழ்ப்பாணத்தில் தமிழ்க் கல்வி மறுபடியும் தழைக்க ஆரம்பித்தது. தென்னிந்தியாவிலிருந்து அரிய தமிழ்ச் சுவடிகள் கொண்டுவரப்பட்டன. யாழ்ப்பாணத்தில் ஒரு தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டது. மிகவும் விரிவான முறையில் பரராசசேகரம் என்ற ஒரு சிறந்த வைத்திய நூல் இயற்றப்பட்டது.

அரச குடும்பத்தைச் சேர்ந்த அரச கேசரி என்ற ஒருபுலவர் இக்காலத்தில் தான் இரகுவமிசம் என்ற தமிழ்க்காவி த்தை இயற்றியதாகச் சொல்லப்படுகின்றது. இது காளிதாசரது வடமொழிக் காவியத்தைத் தழுவிய தாகும். இதன் நடை கடினமாக இருந்தாலும் இது பல கற்பனை நயங்களை உடைய ஒரு சிறந்த இலக்கியம் என்று மதிக்கப் படு கின்றது. இதிலுள்ள நாட்டுப் படலத்தி னின்று இரண்டு செய்யுள்களை இதன் சொல் நயத்துக்கும் பொருள் நயத்துக் கும் உதாரணமாகக் காட்டலாம்.

கயல்பி றங்கின பிறங்கின கண்கள்செங் கமலம்
அயல்பி றங்கின பிறங்கின முகங் களாரத்தின்
இயல்பி றங்கின பிறங்கின வெண்ணகை எண்ணில
வயல்பி றங்கின பிறங்கின மாதரார் வயிறும்.

வயல்களில் நாற்று நடுகின்ற பெண்களின் கண் களுக்கு மீன் களையும், முகத்துக்குத் தாமரைகளை யும், வெண்பற்களுக்கு முத்துக்களையும் உவமானங்களாக இங்கு பொருத்திக் கூறப்படுகின்றன.


அம்பொன் நூபுரம் அரற்றின அரற்றின அன்னம்
கம்பு கையத் தொலித்தன ஒலித்தன கம்பு
தும்பி கோதையில் தொனித்தன தொனித் தன கரும்பு
பைம்பொ னார்வயின் கலித்தன கலித்தன பழனம்

அப் பெண்களின் சிலம்புகளும், வளையல்களும் ஒலிப்பதை வயல்களில் அன்னங்களும், சங்குகளும் ஒலிப்பதோடு பொருத்தியும், அவர்கள் கூந்தல் மீது வண்டுகள் ஒலிப்பதை, வயல்களின் பக்கத்தில் வண்டுகள் ஒலிப்பதோடு பொருத்தியும் செய்யுள் வர்ணிக்கின்றது.

(20 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவித்திறன் கோளாறுகளுக்கு காரணங்கள் எவை?




பரம்பரைத் தன்மை, நெருங்கிய உறவினர்களிடையே திருமணம் செய்து கொள்ளுதல், குருதிப்பிரிவு, கர்ப்ப காலத்தில் தொற்று நோய்கள் பாதிப்பது, கர்ப்பணிப் பெண்கள் ஊட்டச்சத்து குன்றியிருப்பது, கர்ப்ப காலத்தில் சில மருந்துகளைச் சாப்பிடுதல், கர்ப்ப காலங்களில் அடிக்கடி நுண்கதிர் வீச்சு படம் எடுத்தல் ஆகியவை குழந்தைக்கு பிறவி செவித்திறன் குறைபாடு ஏற்படுவதற்கான காரணங்களாகும்.

குழந்தை பிறந்த பின்னர் குறை மாதத்தில் பிறப்பது மற்றும் சத்திரசிகிச்சை மூலம் பிறப்பது, குழந்தைக்கு பிறந்தவுடன் மூச்சுத் திணறல் ஏற்படுவது, குழந்தை பிறந்தவுடன் நீண்ட நேரம் அழாமல் இருப்பது, குழந்தையின் எடை 1,200 கிராமுக்கும் குறைவாக இருப்பது ஆகியவை காரணமாக செவித்திறன் குறைபாடு ஏற்படலாம்.

குழந்தை பிறந்தவுடன் மஞ்சள் காமாலை, கடுமையான காய்ச்சல் அல்லது வலிப்பு போன்றவை செவித்திறனைப் பாதிக்க வாய்ப்பு உண்டு. தொற்று நோய்கள், நீண்ட காலமாக ஆன்டிபயோட்டிக் மருந்துகள் சாப்பிடுதல், காதில் அடிபடுதல், தொடர்ந்து அதிக சத்தமான சூழ்நிலையில் இருத்தல், உயர் குருதி அழுத்த நோய், கட்டுப்பாட்டில் இல்லாத நீரிழிவு நோய், காது நரம்பில் கட்டி இருத்தல், காதில் நீர் வடிதலை அலட்சியம் செய்தல், முதுமை ஆகியவை காரணமாக செவித்திறன் குறைபாடு ஏற்படலாம்.

காது கேட்கும் திறன் குறைபாடு ஏற்படுத்தும் பல காரணங்களை எல்லா சமயங்களிலும் கட்டுப்படுத்த முடியாது.

எனினும் காரணத்தை காலதாமதமின்றி அறிந்து கொள்வதன் மூலம் முன்னெச்சரிக்கையாக தடுக்கும் முறைகளைக் கண்டறிந்து செயற்படுவது நல்லது.


# AGC - சிறந்த தெரிவு ... அதி உயர் நம்பிக்கை!



AGC CLASSIC
புத்தம் புதிய கணினியை ரூ. 9999/- செலுத்தி பெற்றிடுங்கள்
மிகுதி மாதாந்தம் ரூ. 2999/- ஆகச் செலுத்துங்கள்

■ Processor: Intel Atom 1.6 Ghz ■ Mother Board: Intel Integrated ■ Memory: 1GB DDR2 ■ Hard Drive: 160GB SATA-7200rpm ■ VGA: Integrated ■ Audio: Integrated ■ Network: Integrated LAN ■ Optical Drive: DVD-ROM ■ Key Board: Standard ■ Mouse: Optical ■ Casing: 500W P5 ATX ■ Monitor: 15" CRT ■ Speaker: Standard

மாதாந்தம் ரூ.499/- செலுத்தி Windows 7 அசல் மென்பொருளைப் பெற்றிடுங்கள்

AGC CLASSIC LCD — மாதாந்தம் ரூ. 3,999/- ரூ. 49,999/-

| | |
|---|---|
| Processor | Intel Dual Core Atom 1.6 GHz |
| Mother Board | Intel Integrated |
| Memory | 1GB DDR2 |
| Hard Drive | 160GB SATA – 7200 RPM |
| VGA | Integrated |
| Audio | Integrated |
| Network | Integrated LAN |
| Optical Drive | DVD-ROM |
| Key Board | Standard |
| Mouse | Optical |
| Casing | 500W P5 ATX |
| Monitor | 16" LCD |
| Speaker | Standard |

AGC SMART — மாதாந்தம் ரூ. 4,800/- ரூ. 59,999/-

| | |
|---|---|
| Processor | Intel Dual Core 2 GHz |
| Mother Board | Intel Integrated |
| Memory | 1GB DDR2 |
| Hard Drive | 160GB SATA - 7200 RPM |
| VGA | Integrated |
| Audio | Integrated |
| Network | Integrated LAN |
| Optical Drive | DVD-RW |
| Key Board | Standard |
| Mouse | Optical |
| Casing | 500W P5 ATX |
| Monitor | 16" LCD |
| Speaker | Standard |
| OS | Windows 7 Starter |

AGC 3G XP — மாதாந்தம் ரூ. 5,600/- ரூ. 69,999/-

| | |
|---|---|
| Processor | Intel Core 2 Duo 2.93 GHz |
| Mother Board | Intel Integrated |
| Memory | 1GB DDR2 |
| Hard Drive | 160GB SATA - 7200 RPM |
| VGA | Integrated |
| Audio | Integrated |
| Network | Integrated LAN |
| Optical Drive | DVD-RW |
| Key Board | Standard |
| Mouse | Optical |
| Casing | 500W P5 ATX |
| Monitor | 16" LCD |
| Speaker | Standard |
| OS | Windows 7 Starter |



1 வருட உத்தரவாதம் ASUS Eee PC
மாதாந்தம் ரூ. 3,999/- ரூ. 49,999/-



3 வருட உத்தரவாதம் ASUS AS-K40JDC (DUAL CORE)
மாதாந்தம் ரூ. 7,200/- ரூ. 89,999/-



3 வருட உத்தரவாதம் ASUS AS-K40JC2D (CORE 2 DUO)
மாதாந்தம் ரூ. 8,000/- ரூ. 99,999/-



1 வருட உத்தரவாதம் TOSHIBA Satelite L510 (THB-L300)
மாதாந்தம் ரூ. 7,272/- ரூ. 90,900/-

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

(011) 5 400 400 www.singersl.com

SINGER Plus, SINGER Mega, SISIL WORLD
காட்சியறைகளில் மற்றும் முகவர்களிடம்

AGC - அசல் மென்பொருள் உள்ளடங்கிய [illegible]

CREATIVE SERVICES


# மிகச்சிறந்த இலவச "அன்ரி - வைரஸ்"

பணம் கொடுத்து அன்ரி- வைரஸ் வாங்க முடியாத வாடிக்கையாளர்கள் தங்களுடைய மென்பொருள்களைப் பயன்படுத்தியாவது பார்க்கட்டுமே என்ற எண்ணத்தில் வழங்கப்படும் அன்ரி-வைரஸ் தான் இலவச அன்ரி-வைரஸ்

இந்தவகை மென்பொருள்களில் பணம் கொடுத்து வாங்கும் அன்ரி-வைரஸில் இருப்பதை விட கொஞ்சம் குறைவான பாதுகாப்பு வசதிகள் கொடுக்கப்பட்டிருக்கும், சில வாடிக்கையாளர்கள் தங்கள் கணனிக்கு முழுமையான பாதுகாப்பு வேண்டும் என்ற எண்ணத்தில் பணம் கொடுத்தே அன்ரி-வைரஸை வாங்கிக்கொள்வார்கள்.

ஆனால் என்னதான் பணம் கொடுத்து நாம் கணனியில் அன்ரி-வைரஸ் போட்டுக் கொண்டாலும் புதிய வைரஸ்களின் அட்டகாசம் இன்றைக்கும் தாங்க முடியாததாகத்தான் உள்ளது.

குறிப்பாக நாம் இணையத்தளங்களில் உலவும்போது கண்டிப்பாக வைரஸ்களின் தொல்லைகள் அதிகமாக இருக்கும். அவை நாம் இணையதளங்களிருந்து ஏதாவது தரவிறக்கம் செய்யும்போது வைரஸும் அதன் கூடவே சேர்ந்து வந்து நம் கணனியில் உட்கார்ந்து கொள்ளும்.

இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமைகிறது மைக்ரோசாப்ட் நிறுவனம் வெளியிட்டிருக்கும் இலவச என்ற மென்பொருள்.

பல கணனி உபயோகிப்பாளர்கள் பயன்படுத்திப் பார்த்த வரையில் மிக அதிகபட்ச பாதுகாப்பை வழங்கும் அன்டிவைரசாக மென்பொருள் செயற்படுகிறது. குறிப்பாக இணையத் தளங்களில் நாம் உலவும்போது இந்த அன்ரி வைரஸ் அதிகபட்ச இணையப் பாதுகாப்பை நமக்கு தருகிறது. இந்த இலவச அன்ரி வைரஸ் நாம் பணம் கொடுத்து வாங்கும் அன்ரி வைரஸ் தரும் அதிகபட்ச பாதுகாப்பை ஒத்த பாதுகாப்பை நமது கணனிக்கும் வழங்கு கிறது.

அது மட்டுமல்லாமல் அதுவே தானாக தன்னை புதுப்பித்துக் கொள்வதால் நமது கணனிக்கு நல்ல பாதுகாப்பும் கிடைக்கிறது.

இந்த அன்ரி வைரஸைப் பயன்படுத்திப் பார்த்த பலர் இதன் செயற்திறனை வெகுவாகப் பாராட்டுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனைமரம் - கற்பகதரு



இயற்கையிலே வரட்சியான சூழலைக் கொண்ட இலங்கையின் வடக்கு,கிழக்கு மாகாணங்களின் தனித்துவம் மிக்க தேசியச் சொத்து பனைவளம் ஆகும். பனை மரங்கள் இலங்கையில் மட்டுமல்லாது இந்தியா, பர்மா, தாய்லாந்து, மேற்கு ஆபிரிக்கா, இந்தோனஷியா ஆகிய நாடுகளிலும் காணப்படுகின்றன. இலங்கையில் 11மில்லியனுக்கு மேற்பட்ட பனைமரங்கள் உள்ளதாகவும் இவற்றில் 'பொறாசஸ் பிளபெல்லிபர்' [Borassus Flabellifer] இனப் பனைவகைகளே அதிகமாக உள்ளதாகவும் கூறப்படுகின்றது. இக் குடும்பம் 140 சாதிகளையும் 1202 இனங்களையும் கொண்டது.

பனை, 'பாமே' (Plame] என்ற குடும்பத்தையும் 'பொறாசஸ் பிளபெல்லிபர்' என்ற தாவர உப குடும்பத்தையும் சேர்ந்தது. 'பொறாசஸ்' என்பது பனம் பழத்தைக் குறிக்கும் கிரேக்க மொழிச் சொல்லாகும்.

Palm Tree என்பதற்கு புல்லின மரவகை எனவும், ஒற்றைத்தடி மரவகை எனவும் பொருள் கூறப்படுகின்றது. நல்ல வளர்ச்சி கண்ட மரம் 15 தொடக்கம் 30 மீற்றர் வரை வளர்ச்சி உடையதாயிருக்கும். நிலத்தில் செங்குத்தாக நேரிய வளர்ச்சி கண்டிருக்கும். ஒரு மரம் ஏறத்தாழ 30 தொடக்கம் 40 வரையான ஓலைகளைக் கொண்டிருக்கும். ஓலைகள் பச்சை நிறமாகவும் குருத்தோலைகள் இளம்பச்சை நிறமாகவும் காணப்படும். ஆண் பனைகளில் பாளை உருவாகி நீண்ட பூந்தண்டாகக் காணப்படும். இத்தண்டுகளில் காணப்படும் மஞ்சள் நிற சிறிய ஆண் பூக்கள் காற்றில் பறந்து பெண் பனையின் பூக்களுடன் சேர்வதால் மகரந்தச் சேர்க்கை இடம் பெறுகிறது. இதனால் பெண் பனையில் குரும்பைகள் உருவாகும். இளம் குரும்பைக்குள் காணப்படும் நுங்கு சுவையானது. குரும்பைகள் முற்றி மூன்று விதைகளுடன் மஞ்சள் நிறக் களி போன்ற உணவுப் பொருளாக மாற்றமடையும். இப் பழங்கள் நிலத்தில் விழுந்து தானாகவே வேரூன்றி வடலிப் பனைகளாகப் பரம்பலை ஏற்படுத்தும். பனைக்கு நீளமான ஆணிவேர்கள் கிடையாது. இது கிளைகள் அற்றது. ஒரு வித்திலைத் தாவரக் குடும்பத்தைச் சேர்ந்தது. இதன் வேர்கள் படர்ந்து பின்னல் போன்று நிலத்தைப் பற்றிக் கொள்வதால் பனைமரம் இலேசில் காற்றுக்கோ, மழைக்கோ சாய்ந்து போகாது நிலைத்து நிற்கும். பனை மரங்கள் பல ஆண்டுகள் வரை நிலைத்து நிற்கவல்லவை. கடந்த பத்து ஆண்டுகளில் மட்டும் யாழ். குடாநாட்டில் ஏராளமான பனைமரங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

பனை மரத்தின் முழுப்பாகங்களும் மனிதருக்குப் பலவகைகளில் பயன்படுவதால் இதனைக் 'கற்பகதரு' என்ற பெயரால் அழைப்பர். அதே போன்று பனைமரத்திலிருந்து பெறப்படும் நுங்கு, பனம்பழம், பனங்கிழங்கு, பனங்கள், பதநீர் என்பன மனிதர்களுக்கு உணவாகப் பயன்படுகின்றது. யாழ். குடாநாட்டில் அந்தந்தப் பருவங்களில் பெறப்படும் பனங்கிழங்கு மற்றும் அதன் மூலம் பெறப்படும் ஒடியல், புழுக்கொடியல் என்பவற்றுக்கு தென்பகுதி மக்கள் மத்தியில் பெரும் பிரபல்யம் உண்டு. ★★★

# பஞ்சாமிர்தம்



# மயிலே!



மாவீரன் அலெக்சாண்டர் இந்தியாவின் மீது படையெடுத்து விட்டுத் திரும்பும் போது பெரும் பொக்கிஷமாக ஏராளமான மயில்களைத் தன்னுடன் கொண்டு சென்றதாக வரலாற்றுக் குறிப்புக்கள் கூறுகின்றன. இந்த அழகிய பறவை இடம்பெறாத தமிழ் இலக்கியங்களே இல்லை எனலாம். மயில் முருகக் கடவுளின் வாகனம் என்பது இந்து மதத்தவர்களின் நம்பிக்கை.

'பேசியானிடே' (Phasianidae) என்ற குடும்பத்தைச் சேர்ந்த மயில்களில் இந்திய, இந்தோசீனா மற்றும் ஆபிரிக்க வகை என மூன்று இனங்கள் உள்ளன.

மயில்களில் ஆண் மயிலுக்குத்தான் நீள் தோகை உண்டு. இரண்டடி நீள உடலுக்கு ஏறக்குறைய ஆறடி நீளத் தோகை இருக் கும். நடக்கும் போது அங்க வஸ்திரம் போல் தரையில் இழுத்துக் கொண்டு தான் போகும். ஆனால் இந்தச் சுமையான சிறகுகளைத் தூக்கி விரித்து ஆட ஆரம்பித்து விட்டால் கொள்ளை அழகுதான்.

தோகை விரித்திருக்கும்போது வாலின் விறைப்பான சிறகுகள் உதவுகின்றன. மயிலின் தோகை மினுமினுக்கும் நீலப் பச்சை நிறப் பின்னணியில் அகல விரித்த கண்களைத் கொண்டது போலிருக்கும்.

## தோகை மயிலே!!

பெண் மயில்களுக்கு தோகை மட்டுமல்ல, நீல நிறக் கழுத்தும் விசிறிக் கொண்டையும் கூடக் கிடையாது.

இவை பெரும்பாலும் அடர்ந்த காட்டுப் பகுதிகளில் வாழ விரும்புவதில்லை.மனிதர்கள் வாழும் பகுதிகளை ஒட்டிய மரங்கள் நிறைந்த பகுதிகளில் வசிக்கவே பெரிதும் விரும்புகின்றன.

விவசாய நிலங்களில் கிடைக்கும் தானியங்கள், விதைகள் மட்டுமன்றி நத்தை, தவளை, பாம்புகள், புழுக்கள் என்பவற்றையும் உணவாகக் கொள்ளும்.

மயில்கள் தரையிலோ, பெரிய மரக்கிளையிலோ ஓர் ஒழுங்கற்ற கூட்டை அமைத்து 'கிறீம்' கலரில் மூன்று முதல் ஐந்து வரையான முட்டைகளை ஒருதடவையில் இடும். பிரியத்தோடு அடைகாத்து முட்டைகளைப் பொரிய வைக்கும்.


ரீ.ஜெயான், கந்தரோடை

# நல்லதொரு குடும்பம்.....

"இன்று எனது கணவருக்குப் பிறந்தநாள். எனது மாமியார் பெயருக்கு அர்ச்சனை செய்யுங்கள். ஏனென்றால் எனக்கு இப்படியொரு நல்ல கணவர் கிடைக்கக் காரணமே எனது கணவரைப் பெற்றெடுத்து வளர்ந்து ஆளாக்கி எனக்குத் திருமணம் செய்து வைத்த எனது மாமியார் தானே?" என்று அர்ச்சனைத் தட்டைத் தம்மிடம் கொடுத்த அந்த இளம் பெண்ணை ஆச்சரியத்தோடு பார்த்தார் அந்தக் கோயில் அர்ச்சகர்.

சிறிது நேரம் கழித்து அங்கு வந்த ஒரு மூதாட்டி 'இன்று எனது மகனுக்குப் பிறந்த நாள், எனது மருமகள் பெயரில் ஓர் அர்ச்சனை செய்யுங்கள். அவள் தானே இனிமேல் என் மகனைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துப் பேணப்போகிறாள்" என்று கூறியபோது அந்த மூதாட்டியை வியப்போடு பார்த்தார் அந்த அர்ச்சகர்.

மேலும் சிறிது நேரம் சென்றதும் "எனக்கு இன்று பிறந்த நாள். எனது மனைவியின் பெயருக்கு அர்ச்சனை செய்யுங்கள் ஐயா, ஏனென்றால் என்னை மட்டுமல்லாமல் வயதான என் தாயாரையும் என் மனைவிதானே கடைசிவரைக்கும் அன்பாய், ஆதரவாய் கவனித்துக் கொள்ளப்போகிறாள்" என்று கூறிய அந்த இளைஞனை அதிசயத்தோடு பார்த்தார் அந்த அர்ச்சகர்.



ஒவ்வொரு குடும்பமும் இவ்விதம் அமைந்து விட்டால், உலகமே சொர்க்கமாக மாறிவிடுமல்லவா? ஆனால் இன்று எமது யதார்த்த வாழ்க்கையில் இவ்வித மனோபாவத்துடன் வாழ்க்கையை நடத்துவோர் எத்தனை பேர்.?

பீ. வசீ, யாழ்ப்பாணம்.

# ஆங்கிலப் பஞ்சாங்க முறையை அறிமுகப்படுத்திய ஜூலியஸ் சீசர்

உலக வரலாற்றில் சிறந்ததோர் அரசியல் மேதையாகக் கணிக்கப்பெறும் ஜூலியஸ் சீசர் சிறந்த படைத் தலைவருமாவார்.

ரோம் நாட்டில் பிறந்த இவர், தமது பேச்சுவன்மையாலும் அரசியல் திறமையாலும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றார். கி.மு.60இல் வேறு இரு தலைவர்களுடன் சேர்ந்து ரோமில் கூட்டாட்சியை ஏற்படுத்தினார். கால் (Gaul) என அழைக்கப்பட்ட இன்றைய பிரான்ஸ் நாட்டைவென்று ரோம் ஆட்சியின் கீழ் கொண்டு வந்ததோடு இரண்டு முறை பிரிட்டன் மீது படையெடுத்து வென்றார்.



சீசரின் செல்வாக்கைப் பொறுக்காது மற்றொரு தலைவரான பாம்ப்பி, சீசரை எதிர்த்ததால் ஏற்பட்ட உள்நாட்டுப்போரில் தோல்வியுற்ற பாம்ப்பி எகிப்துக்குத் தப்பியோட மக்கள் சீசரை சர்வாதிகாரியாக்கினர்.

சீசரிடம் பொறமை கொண்ட சில செல்வந்தர்களும் சீசரின் நண்பர்களும் செய்த சதியால் சீசர் கொல்லப்பட்டார்.

ஆங்கிப் பஞ்சாங்க முறையை அறிமுகப்படுத்தியவர் ஜூலிர்ஸ் சீசரே. ஆங்கில மாதங்களில் ஏழாவதான 'ஜூலை' என்ற மாதம் இவரது பெயரால் உருவாக்கப்பட்டது.

'ஜூலியஸ் சீசரின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு ஷேக்ஸ்பியர் எழுதிய ஜூலியஸ் சீசர் நாடகம் உலகப் புகழ்பெற்றதொரு நாடகமாகும்.***

# நீண்டர்தால் மனிதன்

ஊலி மமத் (Wooly Mammoth) என்றழைக்கப்படும் உடல் முழுவதும் அடர்ந்த மயிரும், நீண்ட தந்தங்களும் யானையைப்போன்ற- ஏன் அதைவிடப் பெரியதெனக் கூறத்தக்க தோற்றமும் கொண்ட பாரிய விலங்கினம் பூமியில் வாழ்ந்த அதே காலத்திலேயே நீண்டர்தால் மனிதரும் (Neanderthal Man) பூமியில் வாழ்ந்துள்ளனர். குறிப்பிட்ட அந்தப் பெரிய விலங்கினத்தைக் கொன்று நீண்டர்தால் மனிதர்கள் அவற்றின் இறைச்சியை உண்டுள்ளனர். இப்புராதன மனிதர்கள் குகைகளில் வாழ்ந்தனர். மிருகங்களின் தோல்களைக் கொண்டு செய்யப்பட்ட உடைகளைப் பயன்படுத்தியுள்ளனர்.



இப் புராதன மனிதர்களின் எச்சங்கள் முதன்முதலில் ஜேர்மனியில் 'நீண்டர்தால்' என்ற பள்ளத்தாக்குகளில் கண்டு பிடிக்கப்பட்டதால் இவர்கள் 'நீண்டர்தால்' மனிதர்கள் என அழைக்கப்படுகின்றனர். -ரம்யான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய இலக்கியங்கள் உணர்த்தும் பண்பாடுகள்
# நேரிய வழியில் எம் வாழ்க்கையை வழிநடத்த வல்லவை

மனம் உள்ளவன் மனிதன், ஆறறிவு படைத்த மனிதனுக்குத்தான் மனமும் இருக்கிறது. இது ஒரு பொறியில்லாத ஒரு புலன். ஆயினும் ஐம்பொறிகளுக்கு இல்லாத,ஐம்புலனுக்கில்லாத, ஆற்றல் கொண்டது அது. இந்த ஆற்றலை வைத்துத்தான் ''மனோவேகம்'' என்ற அலகு உண்டானது. மனது மனிதனை வழிநடத்துகின்றது. அது மனிதனை உயர்நிலைக்கும் கொண்டு செல்லலாம்; நடு நிலையிலும் வைத்திருக்கலாம்; கீழ்நிலைக்கும் தள்ளிவிடலாம். இந்த நிலையற்ற தன்மையினால் மனதை ஒரு குரங்கு என்றும் சொல்வார்கள். இவ்விதம் நிலையற்ற தன்மையில் இல்லாமல் நிலையான ஒரு நல்வழியில் அதனை இட்டுச் செல்வதற்குத்தான் நமக்கு கல்வி அறிவும், கேள்வி அறிவும், நல்லோர் இணக்கமும் தேவைப் படுகின்றது. அப்போது தான் நாம் வையத்துள் வாழ்வாங்கு வாழ, உலக நடைமுறைக்கு ஏற்பவாழ, மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ளமுடியும். அவ்விதமான வாழ்வுதான் பாடறிந்து ஒழுகும் பண்பாட்டு வாழ்க்கையாகும்.

எல்லா வழியிலும் மனம் போன போக்கின்படி மனிதன் போகத் தொடங்கினால், பின்பு மனிதனுக்கும், கால் நடைகளுக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும். இதனாலேதான், உலக நீதி சொல்ல வந்த உலக நாதப்புலவர் ''மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்'' என்று ஓர் எச்சரிக்கை செய்து இருக்கிறார்.

இராமன் அவதார புருஷன் என்று சொல்லப்படுபவன். விசுவாமித்திர முனிவர் கட்டளைப்படி யாகத்திற்கு இடையூறு செய்தவர்களை அழித்து நல்ல பெயர் எடுத்துக்கொண்டு போகிறான். மிதிலையிலே முனிவருக்கும் தெரியாமல் தாமும் உணராமல் ஒரு காரியம் செய்து விடுகின்றான். மாளிகையின் மேல்மாடியில் நின்ற ஒருபெண்ணைக் கண்டு மனதைப் பறிகொடுக்கிறான்; பின்பு யோசிக்கிறான்.

''இதுவரையில் எனது மனம் பிழையான ஒரு வழியில் சென்றது இல்லை. ஆகவே இந்தச் செயலும் பிழையில்லாதது ஆக இருப்பதாக எப்படிக் கொள்ள முடியும்? அந்தப் பெண் (சீதை) ஒரு கன்னிப் பெண்ணாக இருந்தால் என்மனம் விரும்பியதில் தவறு இல்லை; அவள் ஒரு குடும்பப் பெண்ணாக இருந்து விடக்கூடாது'' என்று குழம்பிப் போவதைக் காண்கிறோம். சீதையும் மேல்மாடியில் இருந்து, தான் நோக்கிய அவனும் வில்லை முறித்த அவனும் ஒருவனாக இருக்க வேண்டும் என்று கவலைப் படுவதையும் காண்கிறோம். ஏன் என்றால்

**இலக்கியக் காட்சி 33**

**''பிறன் மனை நோக்காத**
**பேராண்மை சான்றோருக்கு**
**அறன் என்றோ ஆன்ற ஒழுக்கு''**

என்று வள்ளுவர் சொல்லி இருக்கிறார்.

அது போலவே கோவலனும் முழுக்க முழுக்க தன்னில் நம்பிக்கை கொண்டு தன் மனம் போன போக்கில் போய் வீணாக இறந்து போகின்றான். அவன் நல் ஒழுக்கமும் நன்மதிப்பும் உள்ளவன்; அறிவும் ஆற்றலும் பெற்றவன். இருந்தும் சான்றோர் உதவியையோ அனுபவத்தையோ நாடவில்லை. ''இம்மை செய்தன யான் அறி நல்வினை'' என்று எண்ணிக்கொண்டு கண்ணகியைத் தன் மனம் போன போக்கில் கூட்டிச் செல்கின்றான். இருவர் வாழ்வின் முடிவைத் தானே தேடிக் கொண்டதும் அன்றி, மாதவி, மணிமேகலை ஆகியோர் வாழ்வின் சீர்குலைவிற்கும் அவனே காரணம் ஆகிறான். ஆகவே மனம்போன போக்கில் நடப்பதால் தனக்கும் கேடு; தன்னைச் சார்ந்தவனுக்கும் கேடு என்பது உறுதியாகும்.

ஆகவே நாம் கற்ற கல்வி அறிவைக் கொண்டும் உலகில் பெற்ற அனுபவத்தைக் கொண்டும் நமது மனத்தைப் பண்படுத்தி சமுதாயத்தோடு நம்மையும் இணைத்து வாழ்வதுதான் பாடறிந்து ஒழுகுவதாகும். இதனை விடுத்து தன்பாட்டிலே ஒருவன் வாழ்ந்து மடிந்தான் என்றால், ''நின்றான், இருந்தான், கிடந்தான், தன்கேள் அலறச் சென்றான் எனப்படும்'' என்று நாலடியார் கூறுவது போல ஆகிவிடும்.

பண்டைய மக்களின் தேவை பற்றிப் புறநானூற்றுப் புலவர் பின்வரும் நிகழ்வு ஒன்றைக் கூறுகின்றார்.

பாண்டி நாட்டில் இருந்து பிசிராந்தையார் என்ற பெரியார் ஒருவர் தனது நண்பனான கோப் பெருஞ்சோழனைக் காண வருகிறார் என்ற செய்தி கேட்டு அவரைக் காண்பதற்காகப் பல புலவர்கள் வந்து சோழமன்னன் சபையிலே கூடி நிற்கின்றனர். வயது முதிர்ந்தவரான இவர் தான் பிசிராந்தையார் என அறிந்ததும் அங்கு கூடி இருந்தோர் அனைவரும் ஆச்சரியம் அடைகின்றனராம். அவருடையை தலையிலே ஒரு நரையும் தென்படவில்லை என்பதால் இத்தனை வயதிலும் தங்களுக்கு நரை தோன்றாது இருக்கக் காரணம் என்ன என்று கேட்க அவர் சொல்லுகின்றார்;

**''யாண்டு பலவாக நரையிலவாகுதல்**
**யாங்கு ஆகியது என வினவுதிர் ஆயின்,**
**மாண்ட என் மனைவியோடு மக்களும் நிரம்பினர்;**
**யான்கண் டனையர்என் இளையரும்; வேந் தனும்**
**அல்லவை செய்யான் காக்கும்; அதன் தலை**
**ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர் பலர்**
**யான் வாழும் ஊரே''**

என் மனைவி நல்லவள்; நாம் பெற்றெடுத்த பிள்ளைகளும் சிறந்தவர்கள்; எனக்கு இளையவர்களும் என் சொல்லுக்கேற்ப நடப்பவர்கள்; எமது அரசனோ என்றால் எந்த இடையூறுமின்றி எம்மைக் காப்பான். எல்லாவற்றுக்கும் மேலாக அறிவிற் சிறந்த பண்புள்ள பெரியோர் பலர் எனது ஊரில் இருக்கின்றார்கள் 'என்று பிசிராந்தையார் சொல்லித் தாம் கவலையேதுமின்றி வாழ்வதனால் தலை நரைக்கவில்லை என்கிறார். இவர்கள் எல்லோரும் பாடறிந்து ஒழுகும் பண்பின்ராக இருப்பதையே புற நானூற்றுப் புலவர் நமக்குக் காட்டுகின்றார்.

********************

மட்டுவில் நா.நல்லதம்பி

---




இன்னமும் கிழக்கு வெளுக்கவில்லை. இன்று எங்களுடைய வீட்டு வேய்ச்சல், வீட்டில் எல்லோருமே வைகறையில் எழுந்து விட்டனர். நேற் றுப் பின்னேரமே வீட்டுக் கூரையிலிருந்த இற்றுப்போன கிடுகுகளையெல்லாம் பிடுங்கி விட்டிருந்தனர்.

**மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 142**

மண்ணெண்ணெய் விளக்கின் ஒளியிலே மொட்டையாய் வெறிச்சென்று கிடக்கும் எமது வீட்டைப் பார்க்கிறேன். என்னுடைய எதிர்காலமும் இப்படிக் கூரையில்லா வீடாய்க் குட்டிச் சுவராய்க் கிடக்கிறது என்ற நினைப்பு நெஞ்சைக் கவ்வுகின்றது.

நான் ஒரு பட்டதாரி. ஆமாம், வேலையற்ற பட்டதாரிதான். வீட்டுக்குச் சுமையாக நிற்கும் ஒரு பட்டதாரி. என்னுடைய தகப்பனார் ஒரு ஏழை விவசாயி. படிப்பில் சற்றுச் கெட்டிக்காரனாக விளங்கிய என்னை, கடன்பட்டு, கஷ்டப்பட்டுப் படிப்பித்தார். நான் பட்டம் பெற்றவுடன் நிச்சயமாக ஒரு உத்தியோகம் கிடைத்துவிடும். எமது குடும்பம் படும் கஷ்டமெல்லாம் தீர்த்துவிடும் என்று நம்பியிருந்தவர் அவர். என் குடும்பத்தினர் மட்டுமன்று நானுங்கூட என்னுடைய பட்டத்திற்கும் திறமைக்கும் நிச்சயம் ஒருவேலை கிடைத்துவிடும் என்றுதான் நம்பிருந்தேன். அந்த அசையாத நம்பிக்கையின் ஆதாரத்தில் ஆசைகள் பலவற்றை நெஞ்சில் வளர்த்துக் கொண்டவன் நான். இன்றோ அந்த ஆசைகளையும் நம்பிக்கையையும் சுமந்திருந்த என் நெஞ்சில் அடி ப[illegible]கப்பட்டுவிட்டது.

இந்த வைகறைப் பொழுதிலேயே என்னைத்தவிர என் குடும்பத்தினர் யாவரும் வீட்டு வேய்ச்சலுக்காகத் தண்ணீரில் ஊறவைத்திருந்த பனையீர்க்குகளை எடுப்பதும், புதிய கிடுகுகளைத் தூக்கிவந்து வீட்டைச் சுற்றிப் போடுவதுமாக ஏதோவோர் வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர். நான்மட்டும் முழங்கால்களைக் கட்டியவாறே குசினித் திண்ணையில் குந்தியிருக்கிறேன். உடம்பை வளைத்து இந்த வேலைகளையெல்லாம் என்னால் ஏனோ செய்யமுடிவதில்லை. அப்புவுடன் வயலுக்குச் சென்று வயல்வேலைகளில் ஈடுபடவோ, அல்லது ஆச்சியுடனும் தங்கைகளுடனும் வளவுக்குப் பின்புறம் இருக்கும் சிறிய தோட்டத்தில் வேலைசெய்யவோ என்னால் முடிவதில்லை; என்னுடைய உடம்பால் முடிவதில்லை என்பதைவிட என்னுடைய மனத்தால் முடிவதில்லை என்றுதான் சொல்ல வேண்டும். பட்டம் பெற்றதும் பதவி கிடைத்துவிடும், கைநிறையச் சம்பாதிக்கலாம். அப்பு பட்ட கடனையெல்லாம் அடைத்துவிடலாம், கல்யாணத்துக்குக் காத்திருக்கும் இரண்டு தங்கைகளையும் கரை சேர்த்துவிடலாம் என்றெல்லாம் சதா கனவு கண்ட எனக்கு, கேவலம் இந்தச் சின்ன வேலைகளையெல்லாம் செய்வதாலா குடும்பத்தின் கஷ்டங் களும் கடனும் மறைந்து விடப் போகின்றன என்று ஓர் அவநம்பிக்கை; விரக்தி!......

இந்த விரக்தி மனப்பான்மைதான் என்நெஞ்சில் இருள் வெள்ளமாய்த் தேங்கிக் கிடக்கின்றது. இதன் காரணமாக நான் எதிலுமே பற்றற்று, அக்கறையின்றி மனம் ஒடுங்கிப்போய்க் கிடக்கின்றேன். என்னுடைய எதிர்காலம் எனக்கு முன்பாக விடியாதவொரு இரவாக நீண்டுகிடக்கிறது.

என்னுடைய இந்த மனநிலை என் பெற்றோருக்கும், தங்கைகட்கும் நன்கு விளங்கியது போலும். எமது குடும்பத்தின் சுமைகளில், நாளாந்த முயற்சிகளில் நான் பங்குகொள்வ தில்லை என்று அவர்கள் என்றுமே முகம் க[illegible]. அதற்கு மாறாக என்[illegible] மரியாதையுடனுமே நடத்துவர்; ஆனால் ஊரவர்க்கு எனது மனநிலை புரியுமா? 'என்னதம்பி' இன்னும் உத்தியோகம் ஒண்டும் கிடைக்கேல்லையோ? என்று கேட்பர். கேலி இழையோடும் அவர்களுடைய அனுத்தாபம் என்நெஞ்சை நெருப்பாய்த் தகிக்கும். இந்த வேதனையைத் தவிர்ப்பதற்காகவே நான் அவர்களிடமிருந்து ஒதுங்கி இருக்க விரும்புவது என்னுடைய வழக்கமாய்விட்டது.

இன்னும் சற்று நேரத்தில் வீடுவேய்வதற்காக அயலவரெல்லாம் வந்துவிடுவர். அதற்கிடையில் நான் இங்கிருந்து எங்காவது போய்விட வேண்டும் என்ற நினைப்பில் எழுந்து படலையடிக்கு நடக்கிறேன். குப்பிவிளக்கின் ஒளியில் வீடுவேய வருபவர்களுக்குப் பிட்டவிக்க ஆயத்தம் செய்துகொண்டிருக்கும் என் இளையதங்கை ''அண்ணை தேத்தண்ணியைக் குடிச்சிட்டுப் போவன். கலந்துபோட்டன்!'' என்று அழைத்ததைக்கூடக் கவனியாமல் மேலே நடக்கிறேன். நிலம் வெளிக்கத் தொடங்குகிறது.

நீராவிக் குள்க்கட்டில் நிற்கும் நாவல் மரத்தின் கீழ்ச் சென்று அமர்கிறேன். என்னிதயம் இருண்டுபோய்க் கிடக்கிறது.

அண்மையில் ஏதோ அரவம் கேட்கவே தனிமை கலைகிறது. கவனம் திசை திரும்புகிறது.

அங்கே செல்லமும் அவள் மகளும் நீராவியைநோக்கி வருகின்றனர். மகள் முன்னே நடந்துவர, செல்லம் மகளுடைய தோளைக் கைநீட்டித் தொட்டவாறே [illegible] வருகிறாள். அவளுடைய விழிகள் மூடிக்கிடக்கின்றன. ஆமாம்! செல்லம் ஒரு குருடி! அவளுடைய மகள் தான் அவளுக்கு இப்போ விழிகளாக இருக்கின்றாள். அவள் தான் செல்லத்தின் முதல்பிள்ளை. அவளுக்குப் பன்னிரண்டு பதின்மூன்று வயதிருக்கும். கடைக்குட்டியான அடுத்தபிள்ளை செல்லத்தின் இடுப்பிலே இருக்கிறான். கிடுகு இழைப்பதற்கென்று நீராவிக் குளத்தில் ஊறப்போட்டிருந்த தென்னோலைகளை எடுத்துச் செல்வதற்காக அவர்கள் அங்கே வருகிறார்கள்.

கணவனும் மனைவியுமாய் இரண்டு குழந்தைகளுடன் ஏழ்மையிலும்

[18 ஆம் பக்கம் பார்க்க....]

## தன்னம்பிக்கை

விளக்கின் ஒளி
விரட்டியது இருளினை
சுவாலித்து எரிந்து
முடிந்த வரைக்கும்
விஸ்தாரமாக விரட்டியது
இருளினை..........
இருளும் அகன்றது
வெளிச்சம்
வீட்டினை நிறைத்தது
வீட்டினை என்றும்
வெளிச்சம் நிறைந்திருக்கும்
விளக்கினுள் எண்ணெய்
இருக்கும் வரை............!

பொலிகையூர்,
பொன். சுகந்தன்.



முல்லைத்தீவு, முள்ளியவளையைப் பிறப்பிடமாகக் கொண்ட அ.பாலமனோகரன் 1960களின் பிற்பகுதியில் ஈழத்துப் புனை கதைத்துறையில் தன்னை இணைத்துக்கொண்டவர். ஆசிரியப் பணிபுரிந்தவர்.

இவரது சிறுகதைகள் சிந்தாமணி, வீரகேசரி, தினகரன் ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்துள்ளதுடன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையிலும் ஒலிபரப்பாகியுள்ளன.

வீரகேசரி பத்திரிகையின் நாவல் வெளியீட்டு வரிசையில் இவரது முதலாவது நாவல் 'நிலக்கிளி' இரண்டாவது நாவல் 'குமாரபுரம்' என்பன வெளிவந்தன. நிலக்கிளி நாவலுக்காக சாகித்ய மண்டலப் பரிசில் பெற்றவர்.

இவரது பதினொரு சிறுகதைகள் அடங்கிய 'தீபதோரணம்' முதலாவது சிறுகதைத் தொகுதி 1977ஆம் ஆண்டில் வெளிவந்தது. கடந்த பல ஆண்டுகளாக டென்மார்க் நாட்டில் வாழ்ந்து வருகின்றார்.

இவரது 'தீபதோரணம்' சிறுகதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ள 'கிழக்கு வெளுக்கின்றது' சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பொழுது சேர்.பொன். இராமநாதன் வீதியிலும்...

# ராஜா கிறீம் கவுஸ்




பிறந்த நாள் கொண்டாட்டங்கள், விருந்துபசாரங்கள் என்பவற்றை நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் கொண்டாடி மகிழ்ந்திட பிரத்தியேக மண்டப வசதிகள்...

அமைதியான, மனோரம்மியமான எழில்மிகு சூழலில் ஐஸ்கிறீம், குளிர்பானங்கள் மற்றும் சிற்றுண்டி வகைகளை உண்டு மகிழ...

விசாலமான வாகனத்தரிப்பிட வசதி...




37, சேர்.பொன்.இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே : 0213207369

( நாச்சிமார் கோவிலுக்கு நேரெதிராக பல்கலைக்கழகம் செல்லும் வீதி)

கொமர்ஷல் வங்கியின்

# பொற் கடன் அடகுச் சேவை



அதிகூடிய தொகை
குறைந்த வட்டி

- தங்க ஆபரணத்திற்கு அதிகூடிய முதல்
- வங்கி மேலதிகப் பற்று வசதி
- உயர்ந்த இரகசியத் தன்மை
- பாதுகாப்பு உறுதி
- குறைந்த வட்டி வீதம்

COMMERCIAL BANK

2010ம் ஆண்டு மார்ச் 22ம் திகதி முதல் நெல்லியடி, சுன்னாகம் கிளைகளில்

அடகுச்சேவை வசதி

CBCMarketing


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அரசியலுக்குப் புது முகம், எனக்கு வேண்டும் உங்கள் அறிமுகம்.

யாழ் மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகக் கொண்ட அங்கஜன் இராமநாதனாகிய நான் தற்போது எனது மண்ணிற்கு சேவை செய்வதை இலட்சிய நோக்காகக் கொண்டு உங்கள் முன் வந்துள்ளேன். எனது தந்தையார் திரு. சதாசிவம் இராமநாதன் அவர்கள் வல்வெட்டியை பிறப்பிடமாகக் கொண்ட ஒரு பிரபல வர்த்தகர். எனது தாயார் திருமதி பத்மராணி அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட மகாஜனக் கல்லூரியின் பெயர் பெற்ற மறைந்த கணித ஆசிரியர் திரு. சுந்தரம்பிள்ளையின் இளைய மகள் ஆவார். எனது தந்தையார் மாவிட்டபுர மக்களின் நலன் கருதி முதன் முதலில் ஆரம்பித்த சேவைதான் "மாவைக் கந்தன்" போக்குவரத்துச் சேவை. எமது பிரதேச அபிவிருத்திக்கு எனது தந்தையார் அன்று தொடக்கம் இன்று வரை நிறைய பங்களிப்பு செய்துள்ளார். குறிப்பாக ஆலையத் திருப்பணிகளுக்குப் பெரும் பங்கு ஆற்றியுள்ளார். எனவே எமது குடும்பத்தை யாழ் மக்களுக்கு நன்கு தெரியும்.

எனக்கு வெளிநாடு சென்று பட்டப்படிப்பை முடிப்பதற்கு ஒரு அரிய வாய்ப்புக் கிடைத்தது. அவ்வாய்ப்பை நான் சரியான முறையில் பயன்படுத்திக் கொண்டதனால் தொழிலிலும் வாழ்க்கையிலும் படிப்படியாக முன்னேற முடிந்தது. இவ் வசதி வாய்ப்புக்கள் அனைத்தும் இருந்தும் எனக்குள்ளே ஒரு இனந்தெரியாத ஆதங்கம் இருந்தது. நான் கற்ற கல்வி அறிவு, அனுபவங்களைக் கொண்டு பாதிக்கப்பட்ட மக்களினதும், மாவட்டத்தினதும் இழந்த பொருளாதாரம், கல்வி, அபிவிருத்தி போன்றவற்றை மீளவும் இம் மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதாகும்.

தற்போது நாம் வரலாற்று முக்கியத்துவமிக்க காலகட்டத்தில் கால் பதித்துள்ளோம். நாம் இழந்தவற்றை மீளப்பெறுவதற்குரிய சரியான சூழ்நிலை உருவாகியுள்ளது. மாண்பு மிகு ஜனாதிபதி அவர்கள் தூர நோக்குப் பார்வையுடன் இம் மாவட்டத்திற்குரிய பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு செயற்றிறன் மிக்க ஒரு இளைய தலைமைத்துவத்தை எதிர்பார்த்துள்ளார். இத் தருணத்தை நான் சரியான முறையில் பயன்படுத்திக் கொண்டு எம் மாவட்ட மக்களின் முன்னேற்றங் கருதி அரசியலில் பிரவேசித்துள்ளேன்.

நீங்கள் உங்கள் உற்றார் உறவினர் சொந்தபந்தங்களுக்கு எம் முயற்சியின் பலாபலன்களை எடுத்துக் கூறி வெற்றிலைச் சின்னம் இலக்கம் 1 இற்கு வாக்களிப்பதன் மூலம் என்னுடன் கைகோர்த்து குறுகிய பயணத்தில் நிம்மதி காண்போம். நாம் முன்னெடுத்துச் செல்ல இருக்கும் வேலைத்திட்டங்கள் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எம்முடன் இப்பயணத்தில் கைகோர்க்க விரும்புவோர் **info@angajanramanathan.com** இற்கு மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளலாம். மின்னஞ்சல் வசதி இல்லாதோர் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ 195-197 கோவில் வீதியில் அமைந்துள்ள யாழ் அலுவலகத்திற்கு தொடர்புகளை எற்படுத்தலாம்.








# அங்கஜன் இராமநாதன்

**Angajan Ramanathan** B.ENG (HON), MBA

இளமைத்துடிப்பு செயற்றிறன்

www.angajanramanathan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முடி உதிர்வோருக்கு புற்று நோய் ஏற்படக் கூடிய சாத்தியம் குறைவு

தலைமுடி உதிர்வோருக்கு புற்று நோய் ஏற்படக் கூடிய சாத்தியம் குறைவாகக் காணப்படுவதாக அண்மைய மருத்துவ ஆய்வொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

30 வயதளவில் முடி உதிரும் ஆண்களுக்கு புற்று நோய் ஏற்படக் கூடிய சாத்தியம் மிகவும் குறைவாகக் காணப்படுவதாக அமெரிக்க மருத்துவ ஆய்வாளர்கள் குறிப்பட்டுள்ளனர்.

2000 ஆண்களிடம் வோஷிங்டன் மருத்துவ கல்லூரி ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வின் மூலம் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

குறைந்த வயதில் முடி உதிரும் ஆண்களுக்கு புற்று நோயின் தாக்கங்கள் குறைவாகவே காணப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

50 வயதை அடையும் ஆண்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் முடி உதிர்வுப் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

50 வயதை அடையும் ஆண்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் முடி உதிர்வுப் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது

# மாத்திரைகளினால் நீரிழிவு நோயை முழுமையாக கட்டுப்படுத்த முடியாது மருத்துவ ஆய்வு தகவல்

மருந்து மாத்திரைகளினால் நீரிழிவு நோயை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியாது என பிரித்தானிய மற்றும் அமெரிக்க மருத்துவ விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.ஆரோக்கியமான உணவுப்பழக்க வழக்கம் மற்றும் உடற்பயிற்சி ஆகியனவே நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தக்கூடிய சிறந்த வழிமுறைகள் என ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.


மருந்து மாத்திரைகளைப் பயன்படுத்துவதன் மூலம் நீரிழிவு நோயிலிருந்து முழுயைமாக விடுபட முடியாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

9000 பேரிடம் இந்த ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மருந்துகளை உட்கொள்வதனால் எதிர்காலத்தில் இருதய நோய் ஏற்படுவதனைத் தடுக்க முடியும் என்ற கருத்திலும் உண்மையில்லை எனக் குறிப்படப்படுகிறது.

நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தவும் அதனால் ஏற்படக்கூடிய ஏனைய நோய்களை கட்டுப்படுத்தவும் கூடிய மருந்துப் பொருள்களின் தேவை விஞ்சி நிற்பதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தற்போது பாவனையில் உள்ள அநேக மருந்துப் பொருள்களின் மூலம் இந்தத் தேவைகளை பூர்த்தி செய்ய முடிவதில்லை என சுட்டிக்காட்டப்படுகிறது.




முடியுமானால் சொல்லுங்கள்
ஒரு மில்லியனை வெல்லுங்கள்!
விருப்பமா ?
ஒரு நொடியில் ஒரு மில்லியன் ரூபாவை வெல்ல...
ஒரு இரவில் நட்சத்திரம் ஆக....

இலங்கை தொலைக்காட்சி வரலாற்றில் மாபெரும் றியாலிட்டி தொலைக்காட்சி நிகழ்ச்சியான DFCC மைண்ட் ஸ்டாருடன் இணைந்து கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வாரமும் ஒரு மில்லியன ரூபாவை வெல்ல அரிய வாய்ப்பு. நட்சத்திரங்களிடையே ஜொலிக்கும் நட்சத்திரமாக மாற உங்களுக்கு முடியும். இது ஓர் அறிவுப் பயணமாகும். நீங்கள் செய்ய வேண்டியது ஒரு மணித்தியாலத்தில, கேட்கப்படும் 10 வினாக்களுக்கு 10 சரியான விடைகளை கூறுவது மட்டுமே. DFCC வங்கி, DFCC வர்தன வங்கி மற்றும் சுயாதீன தொலைக்காட்சி என்பன இணைந்து உங்கள் புத்திகூர்மையை பரீட்சிக்க நடாத்தும் றியாலிட்டி TV நிகழ்ச்சியில் பங்குபற்றுங்கள்.

இந்த சவாலை ஏற்றுக் கொள்ள நீங்கள் தயாரா?

க.பொ.த (சாதாரண) தரத்தில் நீங்கள சித்தி பெற்றவராகவும், 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருப்பின, மார்ச் 23 ஆம் திகதிக்கு முன் கீழுள்ள முகவரிக்கு உங்கள் விண்ணப்பத்தை அனுப்பி வையுங்கள். மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: 011 2 663888

நிபந்தனைகளுக்கு உட்பட்டது
விரையுங்கள்!

DFCC வங்கி
DFCC வர்தன் வங்கி
ஊடக பங்காளர்

பெயர்: ______ வயது: ______ தேசிய அடையாள அட்டை இல: ______
முகவரி: ______
மாவட்டம்: ______ கையடக்கத் தொலைபேசி: ______ நிரந்தர தொலைபேசி: ______
கல்வித் தகைமை: க.பொ.த. (சாதாரணம்) ☐ க.பொ.த. (உயர்தரம்) ☐ வேறு தகைமைகள்: ______
தெரிவுப் பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மொழி : சிங்களம் ☐ தமிழ் ☐ ஆங்கிலம் ☐

மேலே தரப்பட்ட தகவல்கள் எனது அறிவுக் கெட்டிய வரையில் சரியானவையும், உண்மையானவையும் என உறுதி கூறுகிறேன்.
திகதி: ______ கையொப்பம்: ______
DFCC MINDSTAR, DFCC Bank, 73/5, Galle Road, Colombo 03.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செலிங்கோ லைஃப் தரும்
# போனஸ் உங்கள் இல்லத்திற்கே




PHOENIX O&M

செலிங்கோ லை∴ப் காப்புறுதி ஒப்பந்த உரிமையாளர்களுக்கான போனஸை,
நாங்கள் மார்ச் மற்றும் ஏப்பிரல் மாதங்களில் உங்கள் இல்லத்திற்கே கொண்டு வந்து தருவோம்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 011 2 461 461

* 2009 டிசம்பர் 31ம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொண்ட மற்றும் இலாபத்தை ஈட்டித்தந்த காப்புறுதி ஒப்பந்தங்களுக்கு மட்டுமே போனஸ் சான்றிதழ் வழங்கப்படும்.
இது செலிங்கோ இன்சூரன்ஸ் பீஎல்சியினால் வழங்கப்பட்டது.

## செலிங்கோ லை∴ப்

செலிங்கோ லை∴ப் டவர், 106, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 5.
கம்பனி பதிவு இல. PQ 24 தொ.இல. (011) 2461461 இணையத்தளம்: www.ceylincolife.com






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்நுட்பம் ஆராய்ச்சி மட்டத்தில் வெற்றியளித்தாலும் பயன்பாட்டில் சிக்கலையும் எதிர்நோக்கியது

## விவசாயத்துறையில் நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்களும் எதிர்கொள்ளும் சவால்களும் 5



மரபணு பொறியியல் தொழில் நுட்பம் ஆராய்ச்சி நிலையில் வெற்றி யளித்ததும் அதனைத் தொடர்ந்து இதனை விவசாயத்தினுள்ளே பிர யோகிக்க முற்பட்டனர். இதனை இந்த அரிய கண்டுபிடிப்பைத் தனது உடைமையாக்கிக் கொண்டது 'மொன் சன்றோ' என்னும் மிகப்பெரிய தனி யார் ஆய்வு நிறுவனம். அமெரிக் கர்வை தளமாகக் கொண்டியங்கும் இந்நிறுவனம் பி.ரி.பயிர்களை உற் பத்தி செய்து பல்வேறு நாடுகளுக் கும் பரீட்சித்துப் பார்க்க அனுப்பி வைத்தது. பெரிய நிறுவனம் என்னும் போல மிகப் பெரிய ஆய்வு கூடங்களையும் பல விஞ்ஞானி களையும் உள்வாங்கிய பணக்கார தனியார் நிறுவனம் எனலாம். இவர் களால் உருவாக்கப்படும் V.T. பயிர்களின் விதைகளை முதல் சந் ததி (F, Hybrid) யாக உருவாக்கிய தால் இந்தப் பயிர்களில் இருந்து பெறப்படும் விதைகளை மீண்டும் பயிர்களை உருவாக்க விவசாயிகள் பயன்படுத்த முடியாது. அப்படி யென்றால் அடுத்தமுறை விதைப் பதற்கு 'மொன்சன்றோ', நிறுவனத் திடமிருந்தே வாங்க வேண்டிய கட்டாய நிலை. அதுவும் இவ்வகை மரபணுமாற்றஞ் செய்யப்பட்ட பயிர்களது விதைகளின் விலை சாதாரண விதைகளின் விலையுடன் ஒப்பிடும் போது 10 மடங்கு அதிகமாகவே இருந்தது. தொழில்நுட்பத்தையும் வாங்கி அதன் மூலம் வருமானம் பெருக்கும் நடைமுறையாக 'மொன்சன்றோ' மாறியது. புதிய தொழில்நுட்பத்தை பணமீட்ட பயன்படுத்தியது எனலாம். மீண்டும் ஒருவரில் முழு உலக விவசாயமுமே தங்கியிருக்க வேண்டிவந்ததைப் பார்த்தீர்களா? எங்கு எது நடந்தாலும் இறுதியில் இப்படித்தானே வந்து முடிகின்றது. புதிய தொழில்நுட்பத்திற்காகப் பல மில்லியன் ரூபாக்களை 'மொன் சன்றோ' செலவு செய்ததால் அதன் பயனைப் பெற இழந்த பணத்தை மீட்டெடுக்க இவ்வாறு விலையைப் பத்து மடங்கால் அதிகரித்தது. மொன்சன்ரோ இது தவறல்ல என வாதிடுபவர்கள் ஒருபக்கம். ஆனால் ஏழைவிவசாயியினால் இந்தளவிற்கு அதிக விலை கொடுத்து வாங்க முடியவில்லையே! என்னுமொரு ஆதங்கத்தில் இருந்தவர்கள் இன் னொருபக்கம். இதில் எதுசரி எது தவறு என வாதிடுவது பொருத்தப் பாடில்லாதது.ஆயினும் பாரியளவில் விளை நிலப்பரப்பையுடைய வளர்ந்த நாடுகளிலுள்ள தனவந் தர்களான விவசாயிகளுக்கு இந்த அதிகரித்த விலை ஒரு பொருட் டாகவே இருக்கவில்லை. அதனால் அங்கே எதுவிதமான பிரச்சினையும் எழவேயில்லை. ஆனால் இங்கே வளர்ந்து வரும் எமது நாடுகளில் இதுவொரு பிரச்சினையாகவே எழுந்தது. இங்கேயும் ஒன்றைக் கவனித்துக் கொள்ளுங்கள். பிரச்சினை தொழில்நுட்பத்தினா லல்ல. மாறாக அதனை வைத்திருப் பவருக்கும் பயன்படுத்துபவருக்கும் இடையிலானது ஆகும். வளர்முக நாடுகளிலுள்ள விவசாயிகளுக்கு சிறிய நிலப்பரப்பே பயிர்விளை விப்பதற்காக இருக்கும். இன்னும் இந்த விளைநிலங்கள் சந்ததி பெருக, சீதனமாகக் கொடுக்க மேலும் பிரிக் கப்பட்டுவிடும். விளைநிலம் சிறுக சிறுக பிரச்சினை பெரிதாகும். இந்தப் பிரச்சினைகளின் மொத்தவடிவத் தையும் இந்த விவசாயத்தில் காண முடிந்தது. ஆரம்பத்தில் பி.ரி.மரபணு மாற்றஞ் செய்யப்பட்ட பயிர் இனங்களுக்கு எதிர்பாராத வரவேற்பு இருந்ததென்னவோ உண்மைதான்.

### மேலைத்தேய நாடுகளிலும் இந்தியாவிலும்

மரபணு மாற்றஞ் செய்த தொழில் நுட்பம் ஆரம்பத்தில் பணக்கார நாடுகளுக்கு பயிருற்பத்தியில் எதிர்பார்த்திராத மாற்றத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. மொத் தத்தில் இத் தொழில் நுட்பம் வசதியுள்ள உயர்மட்ட விவசாயிக ளுக்கானதாகவே முன்னிலைப் படுத்தப்பட்டது. இத் தொழில் நுட்பத்தைக் கண்டு பிடிப்பதிலிருந்து தொடர்ச்சியாக அதனைப் பயன் படுத்தியதால் உருவாகும் சாதக பாதக நிலைகளை தமது ஆய்வுக்குரிய விளைநிலத்திலும் பின்னர் விவ சாயிகளது விளைநிலத்திலும் பயிர்செய்து பரீட்சித்துப்பார்த்து இத் தொழில்நுட்பத்தினது நன்மைகளைத் தெட்டத் தெளிவாக விளக்கும் வரை ஏற்பட்ட செலவை ஈடுசெய்வதற்காக மொன்சன்ரோ வினால் உற்பத்தி செய்யப்பட்ட இவ்வாறான விதைக ளுக்கு அதிக விலையை நிர்ணயஞ் செய்ய வேண்டியதாயிற்று. எனவே இந்தப் புதிய தொழில் நுட்பத்தி னூடாக உருவாகிய விதைகள் மேல்மட்ட 'பெரிய' விவசாயிகளின் கைகளினுள் உள்ளடக்கப்பட்ட தாகவே கருத இடமுண்டு. இந்த வாய்ப்பினைப் மேலைத்தேய நாடுகள் நன்றாகவே பயன்படுத்திக் கொண்டன. அங்கு விளைவித்த பயிரிலிருந்து அறுவடை செய்யப் பட்டவை இங்கு உண்பதற்காக முதலில் இனாமாகப் பின்னர் அதி கூடிய விலைக்கும் விற்கப்பட்டன. அவ்வாறு விற்கப்பட்ட விதைகள் இந்தியாவில் பல்வேறு மாநிலங்க ளிலும் விவசாயிகளினால் விதைக் கப்பட்டன.

### இந்தியாவுக்கு தேவைப்பட்ட தொழில்நுட்பம்

சனத்தொகைப் பெருக்கத்தில் முன்னிலை வகித்த நாடுகளில் இந்தியாவும் ஒன்று. நாமிருவர் நமக்கொருவர் என்றும் நாமிருவர் நமக்கெதுக்கு இன்னுமொருவர் என்ற மகுட வாசகங்களுடன் இருந்த இந்திய சனத்தொகையை எவராலும் நினைத்த அள்விற்கு குறைத்துக் கொள்ள முடியவில்லை. அதனால் வேறு வழி யின்றி உணவுற்பத்தியை எவ்விதத்திலேனும் பெருக்க வேண் டிய நிர்ப்பந்தம் ஒருபக்கம். உற்பத்தியைப் பெருக்கும் போது எதிர்கொள்ளும் பீடைகளின் பிரச்சினைகளைச் சமாளிக்க பி.ரி. தொழில்நுட்பம் அவசியம் கைகொடுத்தது. இந்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் மரபணு மாற்றஞ் [illegible] விதைகள் குறிப்[illegible] ஆந்திரா,கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் பயிரிடப் பட்டன.ஆரம்பம் நல்ல சகுனமா னவே இந்திய வேளாண்துறைக்கு அமைந்தது. விவசாயிகள் போட்டி போட்டு பயிர்ச் செய்கையின் விஸ்திர ணத்தை உள்ளூர் இனங்களிலிருந்து மாற்றி மரபணு மாற்றிய இனங்களை மாற்றீடாகப் பயன்படுத்தத் தொடங் கினர். விளைச்சலும் ஆரம்ப நிலை யில் அதிகரித்துக் கொண்டதனால் பெரிய, நடுத்தர, சிறிய விவசாயிகள் என பலரும் இத்தொழில்நுட்பத்தின் கைப்பிடிக்குள் உள்ளீர்க்கப்பட்டனர் எனலாம்.

இந்தியாவின் சனத்தொகைக்கு உணவளிக்கவென வந்த இத்தொழில் நுட்பம் வேளாண் துறையின் சாத னையாகவே கருதப்பட்டது. ஆரம்பத் தில் பருத்திப் பயிரிலேயே இந்த தொழில்நுட்பம் உள்வாங்கப்பட்டு ஆந்திரா,தமிழ்நாடு,கர்நாடக மாநிலங் களிலுள்ள வேளாண் விளைநிலங் களுக்கு அதிக விஸ்தீரணத்தில் பயிர் செய்யப்பட்டன. இங்கும் மேல்தர விவசாயிகளுக்கு உகந்ததாகவே மர பணு மாற்றிய பருத்தி மாறியது. பருத் திப் பயிர் உணவாக உட்கொள்ளாத காரணத்தினால் மரபணு மாற்றத்தின் பாதக நிலைகள் அந்த நேரத்து அவசர நிலையில் அவதானிக்கப்படவில்லை.

### மகிழ்ச்சி நீடிக்கவில்லை

இயற்கைக்கு சவால்விடும் தொழில்நுட்பமாக பரிணமித்த உயிர்தொழில்நுட்பத்தின் வாயிலாக கிடைத்த மரபணு மாற்றஞ் செய்யப்பட்ட் பயிர்களில் குறிப்பாக பி.ரி.பருத்தியின் விளைச்சல் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் எதிர் பார்த்த அளவுக்கில்லாது ஏமாற்றத் தைத் தரத்தொடங்கியது. ஏழை விவசாயிகள் தமது உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு கடன்பெற்று மீண்டும் வேளாண் செய்கைக்குள் கையை நனைத்தனர். போட்ட முதலுக்கு அசலும் நகலுமாக வரும் என எதிர்பார்த்த விளைச்சல் பருத்தியில் கிடைக்கவில்லை. தொழில்நுட்பத்துக்கு தலையிடியாக காலநிலையில் மாற்றங்கள் ஏற்பட்டன. இந்தியாவின் தென்மாநிலங்களான தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் ஆந்திரா மாநிலங்களில் கடும் வரட்சி தொடர்ச்சியாக மூன்று வருடங் களுக்கு இருந்தது. இதனால் சாதாரண பயிர் உள்ளடங்கலாக எந்தவித பயிரும் உற்பத்தி செய்ய முடியாத [illegible] நிலம் ஓடி [illegible] பொய்த்தது. குடிப்பதற்கே நீரை தேடியோடி அகப்பட்டதைக் குடிக்கும் நிலை தோன்றியது. நீரின்றி எதுவும் நடக் காது என்பது இங்கே பொருந்தியது. இதனால் விவசாயிகளுக்கு பாரியள வில் இழப்பு ஏற்பட்டது. பயிர்ச் செய்கைக்கென பெற்றகடன் வீட்டு வாசலைத் தட்டி ஏழை விவசாயிக ளைத் திக்குமுக்காட வைத்தது. வெள்ளாண்மை வீடு வந்து சேர வில்லை. கடன் வட்டியுடன் சேர்ந்து விவசாயிகளுக்கு வினையாகியது. விரக்தியின் விளிம்பில் இருந்த ஏழை விவசாயிகள் தற்கொலை செய்யத் தொடங்கினர். வரட்சியின் கோரப்பிடிக்குள் சிக்கியுழன்ற வேளாண்மை மீட்சியென எதுவும் இல்லாதிருந்த நிலையில் நிவாரணத்துக்காக அலைந்து அல் லல்பட்ட துர்ப்பாக்கிய நிகழ்வுகள் நடந்தேறின. இது இந்திய அரசையே ஒரு கணம் உலுப்பிவிட்டது என் றார்கள்.

இதிலிருந்து ஒன்றைமட்டும் புரிந்து கொள்ள வேண்டும். தொழில்நுட்பங்களை வரிசையாகக் கண்டு பிடித்தாலும் காலநிலை தப்பிதமாகிவிட்டால் அதிலிருந்து எதுவிதமான பிரயோசனமும் இருக்காது. வேளாண்மையும் கால நிலையும் ஒன்றுடன் ஒன்று பின் னிப் பிணைந்திருக்கும் நிலையில் காலநிலை மாற்றத்தை அநுசரித்துச் செய்யாத எந்த வேளாண்மையும் சரிப்பட்டு வராது என எமது முன் னோர்கள் கூறி வைத்தது இங்கும் பொருத்தமாயிருக்கின்றதை அவதானிக்கலாம். அன்று கணக் கிலெடுத்துக் கொள்ளாத காலநிலை மாற்றத்தினை பின்னாளில் உலக ளாவிய ரீதியில் கருத்தரங்கு வைத்து ஆலோசிக்க வேண்டிய தேவை யாயிற்று.

மரபணு மாற்றஞ் செய்த பயிர் களை விளைவிக்க காலநிலை அனு கூலமாக இல்லாத நிலையில் இதனை எவ்வாறு எதிர்கொண்டார்கள் என் பதனை தொடர்ந்து பார்ப்போம். இங்கும் ஒன்று நினைக்க இன் னொன்று நடந் திருக்கிறதல்ல வா! இதுவும் இயற்கையின் திருவிளையாட லன்றோ?


(வளரும்)



கலாநிதி கு.மிகுந்தன்-
தலைவர், விவசாய உயிரியற்றுறை,
விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 105



அனுப்புபவர் பெயர்:....................................

விலாசம்:....................................

....................................

கையொப்பம்:....................................

### இடமிருந்து வலம்

1. உழைத்துப்பெறு/ தேடிக்கொள்.
4. தலைவன் மனங்கவர்ந்தவள்.
6. அழகு/ சுந்தரம்.
7. தாமரை.
11. திறமையைக் குறிப்பிடும் சொல்.
12. காரணமாக அமைவது.
13. அறிவு/ மணக்கும் தன்மை.
15. காமன்/ காதல் தேவன்.
17. உள்.
18. அரையின் அரை/ பாதம்.
19. அனைத்து/ முழுதுமான.
20. ஒட்டை.
21. வர்த்தகம்/ வாணிபம்.

### மேலிருந்து கீழ்

1. விவகாரம்/ விடயம்.
2. புலவன்.
3. நாள்.
4. மனைவியை இழந்தவன்.
5. நோய்.
8. வீரன்.
10. ஒலிப்பது இது/ நேர அளவீடும்கூட.
12. கூற்றுவன்.
13. மகள்.
14. ஒன்று நீளம். மற்றது இது.
15. மோர் கடையப் பயன்படும் கருவி.
16. பெரிய.
17. இதுவே எழுத்தின் முதல் என்கிறார் வள்ளுவர்.
19. சபை.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 105**

**நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,**

**இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 31.03.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.105இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 04.04.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 103 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) அபரிமிதம். (6) கல. (7) குடி. (8) சில. (9) ரம்பை. (11) மகரம். (12) யமன். (14) சுப. (15) கன்னி. (17) சனி. (18) தர்க்கம். (20) மாதவன். (22) கல். (23) தில்லை. (24) இல்லாள்.

**மேலிருந்து கீழ்**

(1) அகரம். (2) பலம். (3) மிகு. (4) தடிமன். (5) கலம்பகம். (8) சிரசு. (10) பையன். (13) மனிதன். (15) கனிதல். (16) சிக்கல் (17) சமாதி (21) வலை

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 103 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** — க.கோகுலன், கயந்தப்பை, தெல்லிப்பழை.

**2 ஆம் பரிசு** — ஸ்ரீ.துளசிகரன், பெரிய அரசடி வீதி, சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி.

**3 ஆம் பரிசு** — கே.இராஜகோபால், அடைக்கலம் தோட்டம், கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.

**4 ஆம் பரிசு** — சி.பானுராஜா, கரணவாய், கரவெட்டி.

**5 ஆம் பரிசு** — அ.ஸ்ரீஸ்கந்தராஜா, இல.15/11, புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர்க் கிழக்கு, யாழ்ப்பாணம்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) ப.வசந்தி, இந்துக்கல்லூரி வீதி, உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

(2) சி.கீதநந்தினி, இல.1160/15, அருளம்பலம் வீதி, கல்வியங்காடு.

(3) அ.அறிவரசன், இல.758, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## கிழக்கு வெளுக்கின்றது

[12 ஆம்பக்கத் தொடர்ச்சி]

திருப்தியுடன் வாழ்ந்த குடும்பம். இரண்டு வருடங்களுக்கு முன் ஒருநாள் மழைநேரம் தென்னந்தோப்பில் ஓலையெடுக்கச் சென்ற செல்லத்தின் விழிகளிரண்டும் அங்கு விழுந்த இடியுடன் தோன்றிய மின்னலால் ஒளியிழந்துவிட்டன. போதாக் குறைக்குச் சென்ற வருடம் அவளுடைய கணவனும் போய்விட்டான். நெஞ்சை வலிக்குதென்று இரண்டு நாள்கள் படுத்தவன்தான் மூன்றாம் நாள் இறந்துவிட்டான்.

அதன்பின் செல்லம் தன்இடுப்பில் மகனை எடுக்கிக் கொண்டு, மகளுடைய தோளைத் தொட்டவாறே தட்டித்தடவி ஊரெல்லாந் திரிந்து தென்னோலைகளைச் சேகரித்து வந்து கிடுகிழைத்து விற்பாள். அதிற் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு ஒருவாறு குடும்பத்தை நடத்துகிறாள்.

அவர்களை இங்கு காணும்போது நேற்றுநடந்த நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகின்றது. நேற்றுப்பின்னேரம் செல்லம் தன் பிள்ளைகளுடன் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தாள். எங்களுக்குக் கிடுகு விற்ற பணத்தைப் பெற்றுச் செல்லவே அவள் அங்கு வந்திருந்தாள்.

அப்போது நான் வீட்டுத் திண்ணையில் சிந்தனையில் மூழ்கியவனாய் இருக்கின்றேன். செல்லம் மகனைச் சுமந்து கொண்டு மகளைத் தொட்டவாறே வீட்டுமுற்றத்தில் வந்து நிற்கின்றாள். செல்லத்தைக்கண்ட என்னுடைய ஆச்சி அவர்களை இருக்கச் சொல்லிவிட்டு "செல்லத்துக்கும் பொடியளுக்கும் தேத்தண்ணிபோட்டுக்குடு தங்கச்சி!" என்று குரல் கொடுத்துக்கொண்டே வீட்டுக்குள் வருகிறார். பணத்தை எடுத்துக்கொண்டு வெளியே சென்றவர்.

"ஏன்ரி செல்லம்.......உன்ரை பொட்டைக்கு ஒரு தாவணிப் பாதியெண்டாலும் போட்டு விடக்கூடாதே? பக்குவப்படுற பருவத்திலை கண்ட இடமெல்லாம் கூட்டிக் கொண்டு திரியுறாய்....." என்று நீட்டி முழக்கியவாறே முற்றத்தில் கிடந்த வெற்றிலைப் பெட்டியடியில் குந்துகின்றார். இப்போ என் கவனமும் அங்கே செல்கின்றது. ஆச்சியின் கேள்வியைச் செவியுற்ற செல்லத்தின் விழிகளற்ற முகத்தில் இருளும் கலவரமும் பரவுகின்றன. அவளுடைய மகளோ நாணத்தினால் கூசிக் கோணுகின்றாள். அவளுடைய உடம்பின் வளர்ச்சியைக் கவனித்த எனக்கு ஆச்சியின் வினா வியப்பைத் தரவில்லை.

"என்ன செய்யிறதம்மா.....? எனக்கென்ன கண்தான் தெரியுமே? நான் என்ன செய்வன்.... இந்தப் பொடியன் கொஞ்சம் வளந்து ஆள்பட்டிட்டான் எண்டால் ஓலையெடுக்கக்கொள்ள என்னைக் கூட்டிக்கொண்டு போவான்... அது மட்டுமெண்டாலும் அந்தப் பெட்டை பக்குவப்படாமல் இருந்திட்டால் பெரிய புண்ணியம் அம்மா!......." செல்வத்தின் குரல் உடைந்து தழுதழுக்கிறது. வயதும் வளர்ச்சியும் வறுமையைக் கண்டு வராமலா போய்விடுகின்றன என எனக்குள் எண்ணிக்கொள்கின்றேன்.

நேற்றைய இந்த நிகழ்ச்சியை இன்றைய சூழல் ஞாபகப்படுத்தவும் என்மனம் சிந்திக்க ஆரம்பிக்கின்றது. தன் இரண்டு கண்களையும் அதற்கு மேலாகத் தன் கணவனையும் பறிகொடுத்துவிட்டு எப்படித்தான் இந்தச் செல்லம் வாழ்க்கை நடத்துகின்றாள்? பார்வையோ கிடையாது. உற்றார் உறவினர் என்று சொல்லிக்கொள்ள யாருமேயில்லை. இருப்பினும் இரண்டு பிள்ளைகளையும் வைத்துக்கொண்டு இவளால் எப்படித்தான் சீவியம் நடத்த முடிகின்றது?

இந்த வினாவுக்கு விடையறிய வேண்டும் என்ற ஆவலுடன் எழுந்து செல்லமும் அவள் மகளும் ஓலைகளை இழுத்துச் சென்ற வழியில் நடக்கிறேன்.

இதோ, இங்கே நீராவியை அடுத்த மேட்டுப்பாங்கான ஒரு இடத்தில், யாரோ ஒருவருக்குச் சொந்தமான தென்னந்தோப்பு மூலையில் அவளுடைய சிறிய குடிசை அமைந்திருக்கிறது. வேலிப்புறமாகச் சென்று நான் பார்க்கையில் அக்குடிசையும், அதன் சூழலில் செல்லமும் பிள்ளைகளும் இருப்பது நன்கு தெரிகிறது.

அது ஒரு சிறிய குடிசை. முன்புறம் சாய்வாகப் பத்தியிறக்கி சுத்தமாக மெழுகப்பட்டிருக்கும் இடந்தான் அவர்களது 'அடுப்படி; திறந்திருக்கும் வாசலினூடாகப் பார்க்கையில் அங்கே வீட்டு முகட்டுக்கப்பில் பிள்ளையார் படம் போட்ட பழைய கலண்டர் மட்டை ஒன்று தொங்குகிறது. அது கொழுவப் பட்டிருக்கும் ஆணியில் இரண்டு மூன்று செவ்வரத்தைப் பூக்கள் வீற்றிருக்கின்றன. வீடும் பசுஞ்சாணத் தினால் மெழுகப்பெற்றுப் புனிதமாகத் தெரிகின்றது. குடிசையாயிருப்பினும் எவ்வளவு சுத்தமாக வீட்டை வைத்திருக்கிறாள்.

குடிசையை அண்டிய வெளியிடத்தில் செல்லமும் அவள் மகளும் பரபரவென்று கிடுகிழைத்துக்கொண்டிருக்கின்றனர். ஒருபக்கத்தில் நீராவி நீரில் ஊறிய தென்னோலைகள் பாதிபாதியாகக் கிழிக்கப்பட்டுக் கிடக்கின்றன. மறுபுறம் இழைக்கப்பட்ட கிடுகுகள் காலை வெய்யிலில் கிடந்து உலருகின்றன. கதை, பேச்சு எதுவுமேயில்லாத துரித இயக்கம். இருவருடைய பழக்கப்பட்ட விரல்களும் மளமளவென ஓலைத்தளிரை நீவியெடுத்து ஈர்க்கை முறித்து ஓலையை மடித்து மாறி மாறிப் பின்னலிட்டு இழைக்கின்றன. விழிகளற்ற செல்லம் மிக விரைவாக இழைக்கின்றாள். அப்பப்பா! எவ்வளவு சுறுசுறுப்பு!

அப்போது "செல்லம்!.....செல்லம்......" என்று குரல் கொடுத்தவாறே என்னுடைய ஆச்சி அங்கே அவசரம் அவசரமாக வருகின்றார்.

'வீட்டு மேய்ச்சலுக்குக் கிடுகு காணாது.... அது தான் பாஞ்சுவாறன்.... இந்தாடி பொட்டை இந்தக் காசை வைத்துக் கொண்டு கெதியிலை ஒரு அம்பது கிடுகு தாமோனை' என்று ஆச்சி மூச்சிழைக்கக் கூறுகிறார். செல்லத்தின் மகள் எழுந்து ஆச்சியிடம் பணத்தைவாங்கிப் பார்த்து விட்டு "நில்லுங்கோம்மா மிச்சக் காசை எடுத்துத்தந்திட்டு கிடுகை எண்ணித்தாறன்....." என்று கூறிக்கொண்டே குடிசைக்குள் போவதற்குக் காலெடுக்கவும்

"எடி தங்கச்சீ......! வீட்டுக்குள்ளை போகிடாதையடி...... அதுக்கை சாமிப்படமெல்லோ கிடக்கு......."

என்று கூவியவாறே கிடுகு இழைத்ததையும் விட்டுவிட்டுத் துடித்துக்கொண்டு எழும்புகிறாள் அவளுடைய தாய். தட்டுத்தடுமாறி எழும்பியவள் ஒருகணம் விக்கித்துப்போய் நின்றுவிட்டாள். குடிசையினுள் போகக் காலெடுத்த அவளுடைய மகளும் தலை குனிந்தவண்ணம் அப்படியே நின்றுவிட்டாள்.

"எடிசெல்லம்......நேற்றுப் பின்னேரங் கூட நான் கேட்டத்துக்கு உன்ரை பெட்டை இன்னும் பக்குவப்படேல்லை எண்டெல்லே சொன்னனீ !?......."

செல்லம் தட்டுத்தடுமாறி ஆச்சியின் குரலை நோக்கி வருகின்றாள். பார்வையற்ற அவளுடைய கண்கள் கரகரவெனக் கண்ணீர் சொரிகின்றன. அவளுடை குரல் கம்முகின்றது.

"[illegible] பிள்ளையாராணை அம்மா... உங்களை ஏமாத்தவேணும் எண்டு நான் அப்படிச் சொல்லேல்லை.... என்ரை விதி!...... இவள் பக்குவப்பட்டு இப்ப இரண்டு மாசமாகுதம்மா...... சனம் அறிஞ்சுதேயெண்டால் நாலுவிதமாய்க் கதைக்குங்கள். இதை நினைச்சுத் தானம்மா நான் உங்களுக்குப் பொய் சொல்லிப் போட்டன்.... இந்தப் பொடியன் கொஞ்சம் புத்திதெரிஞ்சு என்னைக் கூட்டிக்கொண்டு போகத் துடங்கிட்டால் இவளை வெளியே கொண்டு திரியாமல் நான் என்ரை பாட்டைப் பாத்துக் கொள்ளுவன்...., அதுமட்டும் ஆருக்கும் இதைச் சொல்லிப் போடாதையுங்கோ அம்மா!"

என்று கொஞ்சும் குரலில் அழுகிறாள் அந்தக் குருட்டுத்தாய். அவளுடைய மகன் தாயின் கால்களைக் கட்டியவாறே தாயின் முகத்தைக் கவலையுடன் பார்க்கிறான்.

செல்லத்தின் வார்த்தைகளைக் கேட்ட எனக்கு மேனியெல்லாம் ஏதோசெய்து புல்லரிக்கின்றது. கண்ணையிழந்து கணவனையும் இழந்து நிற்கும் இந்தக் குருட்டுப் பெண்ணுக்குத்தான் எவ்வளவு தன்னம்பிக்கை! எத்தனை நெஞ்சுரம்!

வாழ்க்கை என்பதே ஒரு போராட்டந்தான்!

வாழ்வை எதிர்த்துப் போராடுபவனுக்குத்தான் வாழ்வு வழி விட்டுக்கொடுக்கின்றது! கோழைத்தனமாக ஒதுங்கி, தனக்குள் தானே உருகி, தன்மேல் தானே பரிதாபப் பட்டுக்கொண்டிருப்பவனுக்கு விடிவே கிடையாது. என்றெல்லாம் எப்போதோ படித்து உருப்போட்ட தத்துவங்களின் கருத்தெல்லாம் இந்தக் குருட்டுப்பெண்ணின் வாழ்வைக் காணும்போதுதான் எனக்கு வெளிக்கின்றன.

"அழாதையடி செல்லம்! நானேன் ஆருக்கும் பறையிறன்..... நீ ஒண்டுக்கும் யோசியாதை....... ஊத்தங்கரையான் உன்னை ஒருகாலும் கைவிடார்!" என்று என்னுடைய ஆச்சி செல்லத்துக்கு ஆறுதல் கூறுகிறார்.

கலங்கிவிட்ட கண்களைத் துடைத்தவாறே செல்லத்தின் மகள் கிடுகுகளை எண்ணி அடுக்குகின்றாள். ஆச்சி தான் கொண்டுவந்த இழைக்கயிற்றின் உதவியுடன் ஐம்பது கிடுகுகளையும் ஒரேகட்டாகக் கட்டுகின்றா. அத்தனையையும் ஒன்றாய்ச் சேர்த்து சுமந்து செல்லக்கூடிய உடலுரமும், மனத்திண்மையும் கொண்ட அவரைப்பார்க்கையில் என் கண்கள் பனிக்கின்றன. நான் ஆச்சியை நோக்கி நடக்கிறேன்.ஆச்சி அந்தக் கிடுகுக்கட்டைத் தூக்க முயற்சிக்கையில், இரு கரங்கள் அவளைத் தடுத்துவிட்டு கிடுகுக்கட்டைத் தூக்கி தமக்குச் சொந்தமானவனுடைய தலைமேல் வைக்கின்றன. ஆமாம்! அந்தக் கரங்கள் இரண்டும் என்னுடையவைதான். ★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறிவேப்பிலை தரும் நன்மைகள்

நீரிழிவு நோயாளிகள் காலையில் 10 கறிவேப்பிலையும் மாலையில் 10 இலையையும் பறித்த உடனேயே வாயில் போட்டு மென்று சாப்பிட்டு வந்தால், குருதியில் குளுக்கோசின் அளவு கட்டுப்பாட்டுக்குள் வரும்.

வெறும் வயிற்றில் தினமும் கறிவேப்பிலை இலையை மென்று சாப்பிட வேண்டும். இப்படியே 3 மாதங்கள் சாப்பிட்டு வந்தால் நீரிழிவால் உடல் பருமனாவது தவிர்க்கப்படும். சிறுநீரில் குளுக்கோசு வெளியேறும் அளவும் குறைந்து விடும்.


இளம் வயதில் நரைமுடி வராமல் தடுக்க கறிவேப்பிலை பயன்படும் என்பது தெரிந்த விடயம். ஆனால் தெரியாத விடயம் ஒன்று உள்ளது. அதாவது, நரைமுடி வந்தவர்களும், உணவிலும், தனியாகவும் கறிவேப்பிலையைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.




அறிமுகமாகிறது...!
இலங்கையில் முதல் முறையாக...:
SLS 1038
www.sterlingnatural.com
Sterliing
NATURAL MINERAL WATER
இயற்கை தாது நீர்
STERLING MINERALS (PVT) LTD
Hot Line-0772244888


# ஒரேஞ் (தோடம்பழம்) நிற உணவுப் பொருள்களின் மகிமை

ஒரேஞ் நிறத்தில் உள்ள பழங்கள், காய்கறிகளில் பீட்டா கரோட்டின், விற்றமின் சி மற்றும் பல்வேறு ஊட்டச்சத்துக்கள் உள்ளன.



வயது சார்ந்த பார்வைக் குறைபாட்டைத் தடுக்க இவை உதவுகின்றன. புற்றுநோய் ஆபத்தைத் தடுக்கக் கூடிய சக்தியும் இந்த நிறம் கொண்ட காய்கறி, பழங்களுக்கு உண்டு.

இதுபோன்ற பழங்கள் மற்றும் காய்கறிகளை சாப்பிட்டு வந்தால் உடம்பில் கொழுப்பின் அளவை கட்டுப்படுத்தி சீராக வைத்துக்கொள்ள உதவும்.

குருதி அழுத்தம் அதிகமாக இருப்பவர்கள் தோடம்பழம், கரட், பப்பாளி போன்றவற்றை சாப்பிட்டு வந்தால் குருதி அழுத்தத்தின் அளவு குறையும்.

சிலருக்கு மூட்டுத் தேய்வு, மூட்டு வலி போன்ற உபாதைகள் இருப்பவர்கள் தோடம்பழ நிறத்திலான உணவுப் பொருள்களை உண்டு வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

# கண்களைப் பாதுகாப்போம்

வாரத்தில் ஐந்து நாள்களாவது தினமும் அரை மணி நேரம் நடைப்பயிற்சி மேற்கொள்வது அவசியமாகும். இது, குளுகோமா கோளாறு உண்டாவதைத் தடுக்கிறது.



தொடர்ந்து கணனி முன்பு அமர்ந்து வேலை செய்பவர்கள் தினமும் ஐந்து நிமிடம் கண்களுக்கு பயிற்சி கொடுப்பது நல்லது. கண்களை இடது - வலது புறமாகவும், மேலே - கீழேயும் அசைத்து பயிற்சி மேற்கொள்ளலாம். இப்படிச் செய்வதால் குளுகோமா கோளாறு வருவதற்கான வாய்ப்புக் குறைகிறது. 50 வயதைத் தாண்டியவர்கள் மூன்று மாதத்துக்கு ஒருமுறை இரத்த அழுத்த பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். இரத்த அழுத்தம் கூடுதலாக இருக்கின்றவர்கள் ஒவ்வொரு மாதமும் பரிசோதனை செய்து மாத்திரை எடுத்துக் கொள்வது அவசியம்.

சூரிய வெளிச்சத்தில் இருந்து கண்களுக்கு உண்டாகிற வறட்சியால் கண்களைப் பாதுகாப்பதற்காக சன் க்ளாஸ் அணிந்து கொள்ளலாம்.

நீச்சல் செய்யும் போது கண்ணாடி அணிய வேண்டும். ஏனெனில், இது குளோரினில் இருந்து கண்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கிறது. ★★


புதுவருடத்தை முன்னிட்டு
பஜாஜ் அசல் உதிரிப்பாகங்களுக்கு
விசேட சலுகை!
புதுவருடத்தை முன்னிட்டு பஜாஜ் அசல் உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்யும் போது
ரூ.500/- - 1,500/- இற்கு இடையில் வாங்குபவர்களுக்கு கீற்ரெக் ஒன்று
ரூ.1,500/- - 7,500/- இற்கு இடையில் வாங்குபவர்களுக்கு தொப்பி ஒன்று
ரூ.7,500/- - 8,000/- இற்கு இடையில் வாங்குபவர்களுக்கு பயணப்பை ஒன்று
ரூ.8,000/- இற்கு அதிகமாக வாங்குபவர்களுக்கு ரீசேட் ஒன்று
இலவசம்!
இச்சலுகையை பின்வரும் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.
சன்னதி முருகன் வேர்க் சொப் அன்ட் சர்விஸ்
241, பொயின் பெதுர் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 2228076
ரஞ்சித் ரிபயாரிங் அன்ட் சர்விஸ்
யாழ்ப்பாண வீதி, மானிப்பாய். தொ.பே: 077 3107549
ரஜீவன் மோட்டர்ஸ்
இல.68, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம், யாழ்ப்பாணம். தொ.பே: 021 2240226
முந்துங்கள்!
பஜாஜ்
சரியான உதிரிப் பாகங்கள்
* கையிருப்பு இருக்கும் வரை மட்டுமே
tradlanka
டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் 50 வருடகாலம்...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

**போர்த்துக்கேயரின் வீழ்ச்சி**

பரராசசேகரன் காலத்துக்குப் பின் வந்த அரசர்கள் போர்த்துக்கேயரோடு போராட வேண்டியதாயிற்று. பரராசசேகரன் மகன் கொடுங்கோல் ஆட்சி புரிந்தவனாயினும் போர்த்துக்கேயரை வீரத்துடன் எதிர்த்து தன் நாட்டைக் காப்பாற்ற முயன்றான். இவன் காலத்தில் இருந்து போர்த்துக்கேயர்கள் யாழ்ப்பாணத்தைக் கவர்வதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். யாழ்ப்பாணத்து மன்னர்களுக்கு தஞ்சை நாயக்க அரசர்களுடைய உதவி சில சமயங்களில் கிடைத்த போதிலும் கடைசியில் 1621ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் போர்த்துக் கேயர் ஆட்சிக்குட்பட்டது.

ஆரியச் சக்கரவர்த்திகள் பரம்பரையில் கடைசி அரசனாக இருந்த எதிர் மன்னன் பரராசசிங்கம் என்பவன் தமிழ்ப்புலமை படைத்தவனாயிருந் தான். இவன் காலத்தில் தென்னிந்தியாவினின்று அந்தக் கவி அதிவீர ராகவ முதலியார் யாழ்ப் பாணத்துக்கு வந்தார். அவர் இவ்வரசன்மீது வண்ணக்கவி ஒன்று இயற்றினார். இவருடைய கவித்துவத்தைப் பாராட்டி மன்னன் அவருக்குப் பல சன்மானங்கள் செய்தான். மன்னன் அவருக்கு பொற்கிழி கொடுத்தபோது; தனது வறுமை அகன்ற தோடு தனது புகழ் வெற்றி விளக்காக எங்கும் பரந்தது என்ற பொருள்பட ஒரு செய்யுளை அவர் கூறினார்.

**பொங்குபிடி யின்பந்தம் போயதே என்கவிக்**
**கொங்கும் விருதுபந்தம் ஏற்றதே- குங்குமம் தோய்**
**வெற்பந்தம் ஆனபுய வீரபர ராசசிங்கம்**

பொற்பந்தம் இன்றளித்த போது

அரசனும் புலமை உடையவனாக இருந்தபடியால், அவரைப் பாராட்டி இரண்டு கவிகள் கூறிப் புகழ்ந்தான் என்று சொல்லப்படுகின்றது.

**விரகன் முத்தமிழ் வீர ராகவன்**
**வரகவி மாலையைமதிக்கும் போதெல்லாம்**
**உரகனும் வாணனும் ஒப்பத் தோன்றினால்**
**கிரகர கம்பிதம் செய்ய லாகுமே**

வீரராகவர் பாட்டைக் கேட்டுத் தலை அசைப்பதற்கு ஆயிரம் தலையுடைய ஆதிசேடனும், கைக்கொட்டுவதற்கு ஆயிரம் கைகளைப் பெற்ற பாணகரனும் வேண்டும் என்பது இதன் கருத்தாகும்.

**இன்னம் கலைமகள் கைம்மீதில் புத்தகம் ஏந்தியந்தப்**
**பொன்னம் புயப்பள்ளி புக்கிருப்பா ளென்ன புண்ணியமே**
**கன்னன் களந்தைக் கவிவீர ராகவன் கச்சியிலே**
**தன்னெஞ்சம் ஏடெனக் கற்றான் ஒருமுத் தமிழையுமே**

வீரராகவ முதலியார் வாய்ப்பாடமாக இராமயண கவிகள் சொல்லிப் பிரசங்கம் செய்த போது; அரசன் அந்த பிறவிக் குருடரா யிருந்தும் தமிழ் கற்றதை வியந்து; மகளையும் அவர் விஞ்சி விட்டார் என்று இந்தச் செய்யுளால் அவரைப் பாராட்டினான்.

யாழ்ப்பாணத்தில் தமிழ் வளர்ச்சிக்கு ஆரியச்சக்கரவர்த்திகள் செய்த தொண்டுக்காக அவர்களை மறவாது தமிழுலகம் போற்றுவது கடனாகும்.

*************


BRITISH BUSINESS ACADEMY



STUDY IN EUROPE (SCHENGEN)
With Resident Permit

You have big dream to gain professional qualification in a European (Schengen) Government higher educational institute, but



- Your financial resources are limited?
- You have moderate pre qualifications?
- Your previous attempts to study Europe failed?

Don't worry
We have solutions for those obstacles
Come and Meet us

BBA
British Business Academy (Pvt) Ltd
320,7, 2/1, Galle Road, Colombo 03, Sri Lanka.
T: +94 112 370 037, +94 112 372 111
F: +94 112 576 567
E: Info@bbalk.com W: www.bbalk.com
FLEX Graphic
Or Call Our Guys - Muna: 071 8746063, Shaby 071 874 6064

தொழில் துறையில்
சவாலான சந்தர்ப்பங்களை
எதிர்கொண்டு
முன்னேற விரும்புவர்களுக்கு



அரிய சந்தர்ப்பம்

விற்பனை பிரதிநிதிகள்

இலங்கையின் பழம்பெரும் நிறுவனமும் 1956ஆம் அண்டு ஆரம்பிக்கப்பட்டு உற்பத்தி மற்றும் விநியோகத்தில் கடந்த 50 ஆண்டுகளாக தேசத்தின் நம்பிக்கை வென்றதும், உலகம் முழுவதும் பிரபலமான கம்பனிகளைப் பிரதிநிதிப்படுத்துவதுமான வரையறுக்கப்பட்ட "த ரேட்ஸ்மன்" (தனியார்) நிறுவனம் மேற்குறிப்பட்ட பதவிக்கு உடனடி வெற்றிடங்களை கொண்டுள்ளது.

சிறந்த ஆளுமையும், பற்றுறுதியும் கொண்ட பொருத்தமான இளைஞர்கள் எமது விற்பனை அணியினருடன் இணைந்து யாழ்ப்பாண குடாநாட்டில் எமது உற்பத்திப் பொருட்களை அறிமுகப்படுத்த அழைக்கின்றோம்.

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

- வியாபார குறியிடப்பட்ட தயாரிப்புக்களை விற்றலில் ஆகக் குறைந்தது 2 அல்லது 3 வருட அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும்.
- சந்தைப்படுத்தல் தொடர்பில் தொழில்சார் தகைமை இருப்பதுடன் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் சரளமான அறிவுடையவராக இருத்தல் மேலதிக தகைமையாகும்.
- 25 வயதுக்குட்பட்டவர்கள்
- பொருத்தமான விண்ணப்பதாரிகள் வட மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வசிப்பவராகவும், மோட்டார் சைக்கிள் உரிமம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

தற்போதைய மற்றும் முன்னைய தொழில் பற்றிய விபரங்களும், கல்வி மற்றும் தொழில் சார் விபரங்களும் அடங்கிய ஒரு முழுமையான சுய விபரக்கோவையினை கீழ்காணும் மின்னஞ்சல் முகவரி / தொலைநகல் முகவரி அல்லது அஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

மின்னஞ்சல் : hrd@tradesmann.com, தொலைநகல்: 011 5565610

அல்லது விண்ணப்பதாரிகள் செவ்வாய் - வெள்ளி வரை ந.ப 3மணி தொடக்கம் 5மணி வரையிலான காலப்பகுதியில் சுயவிபரக்கோவையுடன் நேரடியாக சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அழைக்க வேண்டிய தொ.இல : 077 3178 166

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு மாதாந்தம் ரூ.30,000 க்கு மேற்பட்ட கவர்ச்சிகரமான சம்பளமும், நிறுவன மோட்டார் சைக்கிளும், மருத்துவ வசதிகளுடன்கூடிய சிறந்த வேலைச்சூழலும், முன்னேற்றகரமான தொழில் வாய்ப்பும் காத்திருக்கின்றன.

மனித வலு முகாமையாளர்
The TRADESMANN
1956
த ரேட்ஸ்மன் எஸ்.எல் (தனியார்) நிறுவனம்
40, பொறுபன பெரி வீதி,
இரத்மலானை.
www.tradesmann.com



ANY Colour Place Time Desired quantity

இலங்கையின் முதல் முழுமையாக
கணனிமயப்படுத்தப்பட்ட
முறைமையினூடாக
உங்களுக்கு தேவையான வர்ணத்தை
100% சரியாகக் கலந்து பெற்றிடுங்கள்

The Magic Colour box
Powered by ralston Pigments from the Netherlands

OVER 30000 COLOURS



LUXURY GLO-SHIELD KENLUX DEBEER CAR-REFINISHES Sunny Auto HI-BUILD LACQUER

C.P.T. CAUSEWAY PAINTS

Tel : 038-2240040-5, 2243166-9, 038-5599800-8, 038-5673152, 038-5673154 Fax : 038-2240046, 038-5599810, 038-4281900
E-mail : luxury@sltnet.lk Web : www.causewaypaints.com

Colour Box Mixing Centers

1 A.S.G.ENTERPRISES
No. 296/3A, (New Kandy Rd) Kaduwela Rd, Malabe
Tel: 011-4403929

2 ABC PAINT & TRADING COMPANY
No, 188,Lake Rd, Pirivena Juntion, Boralesgamuwa
Tel: 071-4314865

3 COLOUR HOUSE
No,105-D,Ja Ela Road , Gampaha,
Tel: 033-2234892

4 CITY ENTERPRISEE
No. 336, Main Street, Rathnapura
Tel: 045-2223562

5 CITY HARDWARE STORES
No. 29, Agalawatta Road, Matugama.
Tel: 034-2247537

6 EXCELLENT PAINT
No,794 B,Galle Rd, Katukurunda, Kalutara,
Tel: 034-5622970.

7 GENUINE PANIT CENTRE
No,69, St.Joseph Street, Grandpass, Colombo - 14
Tel: 0777-314382

8 LANKA HARDWARE
No. 01, Circular Road, Saranthukade Junction, Galle
Tel: 091-2227459

9 MAHANAMA PAINT CENTRE.
No. 255, Piliyandala Road, Kottawa
Tel: 011-4303464

10 MALEESHA AUTO COLOUR
No. 512/14, Nadungamuwa Rd, Weliweriya
Tel: 033-3335144

11 MAHANAMA PICTURE PALACE
Moraketiya Rd, Embilipitiya
Tel: 047-2230431

12 MATALE PAINT CENTRE
No,311,Main Street, Matale.
Tel: 081-3993875

13 NEW KAMAAL CENTRE
No.37,Stanley Rd, Jaffna
Tel:0212222085

14 NEW COLOUR CENTRE
No. 522/E02, Maithripala, Senanayake Mw, Anuradhapura. Tel: 025-7210834

15 NEW 2K PAINT CENTRE
No 83,Main Street, Kaduruwela
Tel: 027-3271697

16 PABORA PAINT CENTRE
No. 35, Siriwardane Road, Ragama
Tel: 011-2956527

17 PRIME COLORS
No: 207, Main Street, Attidiya, Dehiwala
Tel: 011-2718099

18 RISH PAINT PALACE
No. 315,Main St, Trincomalee.
Tel: 026-2221763

19 RANOLA COLOUR BRANCH
No, 40,Kandy Rd, Gampola
Tel: 081-4940716

20 ROHANA HARDWARE STORES
No,357D,Gampaha Rd, Delgoda
Tel:0112403128

21 SAVOY PAINT CENTRE
No. 565, Galle Road, Colombo - 06
Tel: 011-2587642


22 SURESHAN PAINT CENTRE
No,16,Naththandiya Road, Dankotuwa,
Tel: 031-2259664

23 UNITED HARDWARE
No,300,Narammala Rd, Madeena Bazaar, Kahatagahamada, Siyambalagaskotuwa
Tel: 037-2247900

24 UNITED PAINT & COLOUR MIXING CENTER
No. 48/06, Negombo Road, Kadana
Tel: 011-2245678

Sonata ads


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படத்தில் தோன்றுபவர்களின் அடையாளம் காப்பதற்காக முகம் மறைக்கப்பட்டுள்ளது.

## பொறுத்தது போதும் இத்துன்பம்!
## மாற்றுவோம் ஆட்சியை!

பொருளாதார அபிவிருத்தியை நாட்டிற்கு அளித்த கட்சியுடன் அனைவருக்கும் சௌபாக்கியம் நிறைந்த நாளையை ஏற்படுத்துவோம்.

## ஐக்கிய தேசிய முன்னணி

CONCEPT STUDIO 2426

* 2008-2009 காலப்பகுதிக்கான கணிப்பீடு - நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 02 ★ 06 ★ 1944



மறைவு 01 ★ 04 ★ 2009

### திருமதி சரஸ்வதி சின்னையா

அன்பின் உறைவிடமாயிருந்து
எம்மையெல்லாம் வழிகாட்டிய தெய்வமே!
ஆண்டொன்று ஆனாலும்
ஆறவில்லை உம் நினைவுகள்!
ஆத்ம சாந்திக்காய் இறைவனை
வேண்டுகின்றோம்.

4ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

(C/5696)

தகவல்:
குடும்பத்தினர்.

## மணமகன் தேவை

மலேசியாவில் வசிக்கும் யாழ். இந்து கௌரவ குடும்பம், வயது 37, பொறியியலாளர், உயரம் 5'5'', சிவந்த அழகிய மணமகளுக்கு டாக்டர் மணமகனை எதிர்பார்க்கின்றோம்.

தொடர்பு: 0774419523

satguru 25@ yahoo.com (95661)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், வயது 32, உயரம் 5'7'', நட்சத்திரம் - சித்திரை, 1ஆம் பாதம், கிரக பாவம் 39¼, யாழில் சொந்த தொழில் புரியும் மணமகனுக்கு தாய் அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றார்.

தொடர்பு:

0774014304, 0212226846 (95714)

## புறொயிலர் விற்பனைக்குண்டு

ஒரு மாதம், 2மாதம், 2வாரம் நிரம்பிய ஊர்க்கோழிக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: K.S. சிவகுமாரன் பாம்,
கல்வியங்காட்டுச்சந்தி. தொ.பே.0776845519 (95693)


## வசீகரத் தோற்றத்திற்கு!

## சந்தனாலேப

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல்பூச்சு மருந்து)
வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப்பட்டை, கஸ்தூரி



மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச்சுற்றிக் கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சரும சுருங்குதல், பிளவு படுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விசத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும்.

சந்தனாலேப

'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250. (ஆ/555808)


## முக்கிய அறிவித்தல்

### யாழ்ப்பாணம் / வவுனியா / மன்னார் மாவட்டம்

சிஎஸ்சி கொம்ப்யூட்டர் எடியுகேசன் இந்தியா, சொப்ட்வியூ மல்டிமீடியா விசுவல் கொம்யூனிகேசன் இந்தியா மற்றும் ஏசியன் கொம்ப்யூட்டர்ஸ் பயிற்சி நிறுவனங்களால் வழங்கப்பட்ட அங்கீகாரம் வவுனியா மாவட்டத்தில் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இதுவரை காலமும் வவுனியா மாவட்டத்தில் **Techno World** கணினி நிறுவனத்துடன் மேற்படி நிறுவனம் செய்து கொண்ட ஒப்பந்தமும் பயிற்சிகளுக்கான மாணவர்சேர்க்கையும் **10.03.2010** அன்றுடன் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது என்பதை வவுனியா மாவட்ட பெற்றோர்கள் மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகளுக்கு அறியத்தருகின்றோம். மேலும் சிஎஸ்சி, சொப்ட்வியூ, ஏசியன் கொம்ப்யூட்டர்ஸ் நிறுவன பெயர்களையோ அல்லது அவற்றின் இலச்சினைகளையோ எந்தவொரு வெளியீட்டிலும் அனுமதியின்றி பயன்படுத்த முடியாதென்றும் மீறி பயன்படுத்தும் பட்சத்தில் சர்வதேச மற்றும் இலங்கை சட்ட வரைபுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

Master Franchisee in Sri Lanka.

CSC COMPUTER EDUCATION — AN ISO 9001 : 2000 CERTIFIED INSTITUTION — India

ASIAN BUSINESS COLLEGE — 60, Kotahena Street, Colombo-13, Sri Lanka.

Softview Visual Communication — India

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 19.11.1947

மறைவு: 18.02.2010



### திருமதி வேலாயுதபிள்ளை லலிதாதேவி

எமது குடும்பத்தின் குலவிளக்கு அணைந்தவேளையில் உடன் நின்று உதவிய அனைவருக்கும் தொலைபேசி மூலமும் தந்திமூலமும் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் துண்டுப்பிரசுரங்கள் மூலம் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் எமது அன்புத் தெய்வத்தின் உயிர்காக்கப் போராடிய யாழ்.போதனாவைத்தியசாலை 1 ஆம் 4 ஆம் விடுதி வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் இன்று (21.03.2010) முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர், பிள்ளைகள், மருமகன்

நிரந்தர முகவரி:
சிவஞானவாசம்
புகையிரதநிலைய வீதி,
தெல்லிப்பழை.

(95698)

தற்காலிக முகவரி:
98, செட்டித்தெரு,
நல்லூர். யாழ்ப்பாணம்.


## Bachelor of Information Technology (BIT)
### External Degree of University of Moratuwa




ESOFT நிறுவனம் மொறட்டுவை பல்கலைக்கழகத்துடன் ஒன்றிணைந்து தகவல் தொழில்நுட்பப் பட்டதாரிகளுக்கான வெளிவாரியான பட்டத்தினை வழங்குவதில் பெருமையடைகிறது.

மாணவர்களுக்கான அனைத்து பாடத்திட்டங்களும் ESOFT நிறுவனத்தினால் நடத்தப்படும். மதிப்பீடு செய்தல், வருடாந்த பரிசளிப்பு, சான்றிதழ்கள் மற்றும் பட்டமளிப்புகள் அனைத்தும் பல்கலைக்கழகத்தினால் பாடநெறியினை முறையாக பூர்த்தி செய்தவர்களுக்கு வழங்கப்படும்.

ESOFT 3rd Intake

**Key Points**
Six Semester Academic Programme Offered in two modes:
Full Time (Mon to Fri)
Part Time (Sat & Sun)
Low Investment

**Who is Eligible?**
Anyone with 3 A/L Passes in one sitting in ANY STREAM with a Credit for O/L Maths OR
Any equivalent qualification approved and accepted by the University Senate

Step 1 - Download the Form from www.esoft.lk, complete it, and mail it to us (Can also be collected from our Branches)
Step 2 - We will evaluate your application and direct you to the Aptitude Test conducted by the Centre for Open and Distance Learning - University of Moratuwa.
Step 3 - Following an Interview, final selection will be made based on your eligibility and merit

**Why BIT @ ESOFT?**
- Largest Trainer for BIT@UCSC Programme
- Qualified and Experienced Lecturing Panel
- High Quality Study Environment with Lab and Library Facilities
- Renowned name for Quality delivery of many leading IT Programmes in Sri Lanka

Application Deadline: 12th April 2010
Class Commencement: July 2010

மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்ளுங்கள்
றெல்ப் - 077 22 888 77
யோகா - 077 30 99 305

எமது கொழும்பு, கண்டி, குருநாகல் அல்லது யாழ்ப்பாண கிளைகளில் வகுப்புகளை பின்பற்றலாம்

ESOFT
The Registrar
ESOFT COMPUTER STUDIES (PVT) LTD.

| | | |
|---|---|---|
| Colombo | 158F, Galle Road, Colombo - 04. | 011-2553883 |
| Kandy | 02, Mulgampola Road, Kandy. | 081-2204400 |
| Kurunegala | 44, Negombo Road, Kurunegala. | 037-2223945 |
| Jaffna | 114, Navalar Road, Jaffna. | [illegible] |

www.esoft.lk/BIT



## TECHNO WORLD Studies (Pvt) Ltd

Registered with Tertiary & Vocational Education commission of Sri Lanka.

### கணினிப் பயிற்சி நிறுவனம்

இன்று முதல் சாவகச்சேரியிலும்...

மகளிர் தின சிறப்பு
கட்டணச்சலுகை இன்னும்
சில வாரங்களுக்கு மட்டுமே.



தெரிவு செய்யும் எந்தவொரு பாடநெறிக்கும் 1650/= pm

10 ஆண்டு கால அனுபவம்

Free study pack
- Diploma in Desktop Publishing
- Diploma in Microsoft Office
- Diploma in Hard ware
- Diploma in Video Editing
- Tally Accounting Technology
- Diploma in Computerized Accounting
- Diploma in Office Automation
- Diploma in Graphic Design & many more...

இச் சலுகை எமது 16 பிராந்திய நிலையங்களிலும் வழங்கப்படுகிறது

யாழ் குடாநாட்டில்...

**கஸ்தூரியார் வீதியில்**
334,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். 4921124

**மானிப்பாயில்**
தினேஸ் வெதுப்பக மேல்மாடி,
182,யாழ் வீதி, மானிப்பாய். 4922400

**திருநெல்வேலியில்**
142,பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி. 4922401

**சாவகச்சேரியில்**
கென்ஸ்மன் வீதி, நீதிமன்றம் எதிரில்
சாவகச்சேரி 5102600

கணினி உலகில் என்றும் உங்கள் நண்பன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**60 நாட்களில் ஆங்கிலத்தை கற்றுக் கொள்ளுங்கள்**

இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழிகாட்டி
E.L.Iயின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.

BASIC / SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH

அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத.வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது. (வயது கட்டுப்பாடு தேவையில்லை)

60 நாட்கள் முடிவில் அங்கீகரிக்கப்பட்ட DIPLOMA சான்றிதழ் ஒன்று வழங்கப்படும்.

இலவச T.Shirt ஒன்றும் Tigo Sim English Book என்பன இலவசம்

இலவச Phone Sim

பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய T.SHIRT ஒன்று Phone Sim Card மற்றும் 30 Easy way English புத்தகம் ஒன்று இலவசமாக வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு பெயர்.முகவரியை 0777-220002 க்கு SmS செய்யுங்கள்

இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்

மேலதிக விபரங்களுக்கு 20/- பெறுமதியான 2 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.

**The ENGLISH LANGUAGE INSTITUTE**
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002



**யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்**
**வருடாந்த பொதுக் கூட்டம்-2010**

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் 29.03.2010 திங்கட் கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அன்று முற்பகல் 10.00 மணிக்கு R.இராஜாராம் தலைமையில் யாழ். மத்திய கல்லூரியில் ஏற்கனவே அறிவித்த நிகழ்ச்சி நிரலின்படி நடைபெறும்.

* அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகம் தரவும்.

ச.தவநேசன் கௌரவ செயலாளர்.

(95726)


# தவக்கால ஆற்றுகை 'பலிக்களம்' நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 21

இளவாலை திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் தவக்கால ஆற்றுகை 'பலிக்களம்' நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணிக்கு இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நூற்றிற்குமேற்பட்ட கலைஞர்கள் பங்குபற்றுவதுடன், மேற்படி மன்றம் தனது பத்தாவது வருட நிறைவில் மேடையேற்றுகின்ற படைப்பு இது என்பது குறிப்பிடத்தக்கது. (204)


**FREE ENGLISH**

**Language Courses**

ஆசிய பிராந்திய சமூக ஒன்றியத்தினால் நடத்தப்படும் கீழ்வரும் தொலைக் கல்வி ஆங்கில மொழிப்பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. எமது ஆங்கில மொழிக் கழகத்தின் அங்கத்துவத்தைப் பெறுவதன் மூலம் இப்பயிற்சி நெறிகளை நீங்கள் இலவசமாகப் பயில முடியும்.

Certificate in English
Diploma in English
IELTS

மேலதிக விபரங்களுக்கு:

Programme Assistant (EC),
ARCC,
214, Nawalapitiya Road,
Ulapane,
(Kandy)



**PRE-SCHOOL TRAINING**

எமது நிறுவனத்தினால் தொலைக்கல்வி முறையில் (Distance Learning) நடத்தப்படும் மேற்குறிப்பிட்ட சான்றிதற் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பயிற்சி நெறி தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் நடத்தப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் 9X4 அளவுடைய சுயமுகவரியிடப்பட்ட 15 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட நீண்ட கடிதவுறை சகிதம் விண்ணப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவத்தையும் ஏனைய விபரங்களையும் பெற முடியும். பயிற்சி நெறி முடிவில் முன்பள்ளியொன்றை அமைப்பதற்கான வளங்களைப் பெற்றுக்கொள்ள உதவப்படும்.

Programme Assistant (PS),
ARCC,
214, Nawalapitiya Road,
Ulapane,
(Kandy)





**STUDY IN UK**

USA, AUSTRALIA, MALAYSIA & SINGAPORE

VISA பெற்றுக்கொள்ள முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

எமது சேவை முற்றிலும் இலவசம்

O/L உடன் குறைந்த கட்டணத்தில்! NO NEED IELTS

flex Institute
Step Towards a Bright Future

4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777-761346
Email: flexinstitute@sltnet.lk
(A Subsidiary of Flex Graphic)

FLEX Graphic

www.flexinstitute.lk



**பாடசாலைக் கல்வியை**
**அண்மையில் பூர்த்தி செய்த**
**மாணவர்களுக்கு**
**ஹற்றன் நஷனல் வங்கி**
**யாழ் குடாநாட்டில்**
**நடாத்தும் ஆரம்ப வங்கியியல் மற்றும்**
**வணிகத்துறைச் சான்றிதழுக்கான**
**கற்கை நெறி**

| | |
|---|---|
| அனுமதிக்கான தகமைகள் | • 22 வயதிற்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும்<br>• க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் 5சிறப்புச் சித்திகளுடனும் கணிதபாடம், ஆங்கிலமொழி அல்லது வர்த்தகமும் கணக்கியலும் பாடங்களில் ஏதேனுமொரு பாடத்தில் விசேட சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்<br>• க.பொ.த. உயர்தரத்தில் ஒரே அமர்வில் ஒருபாடத்தில் சிறப்புச்சித்தியும், இரண்டு பாடங்களில் சாதாரண சித்தியும்பெற்றிருத்தல் வேண்டும் |
| பாடநெறியில் உள்ளடக்கப்படும் பாடங்கள் - | • வியாபாரமும் வங்கியியலும்<br>• கணக்கியல்<br>• பொருளியல்<br>• முகாமைத்துவமும் கட்டமைப்புகளும் |
| பாடநெறி கற்பிக்கப்படும் மொழி - | ஆங்கிலம் |
| காலம் - | 60 மணித்தியாலங்கள் |
| இடம் - | HNB சுன்னாக வாடிக்கையாளர் நிலையம் |

மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பிப்பதற்கும் *http://www.hnb.net* என்னும் இணையத்தளத்தில் "Careers at HNB" பகுதியினை பார்க்கவும். அனைத்து விண்ணப்பங்களும் மேற்குறிப்பிட்ட இணையத்தளத்தினூடாக 26.03.2010 முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

HNB

HNB உங்கள் முன்னேற்றத்தில் பங்காளி



**S.R.S Farm**
**எஸ்- ஆர் - எஸ் பாம்**

NEW BERNARDS ANIMAL FEEDS

பலாலி வீதி, கோண்டாவில் வடக்கு (பஸ் டிப்போ முன்பாக)

தொ.பே. 0770890444, 0775049058

கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள பண்ணையாளர்களின் நலன் கருதி நாம்

**நியூ பேர்னாட் இன்**

கோழித் தீவனங்கள், கால்நடை உணவுத் தீவனங்கள், ஒரு நாள் கோழிக்குஞ்சுகள்

என்பவற்றைத் தரமானதாகவும், குறைந்த விலையிலும் வழங்கி வருகின்றோம். இவற்றைக் கொள்வனவு செய்வதன்முலம் உங்கள் செலவினைக் குறைத்து இலாபத்தை அதிகப்படுத்துங்கள்

- ஒரு நாள் இறைச்சிக் கோழிக்குஞ்சுகள் (புறோயிலர்)
- ஒரு நாள் முட்டைக் கோழிக்குஞ்சுகள் (லேயர்)
- இறைச்சிக்கோழி (புறோயிலர்) உணவுவகைகள்
- முட்டைக்கோழி(லேயர்) உணவு வகைகள்
- கோழிகளின் நோய்களுக்கான மருந்து வகைகள் (Antibiotic)
- கோழிகளுக்கான விட்டமின் வகைகள்
- கோழிகளுக்கான தடுப்பு மருந்துகள் (Vaccine)
- கோழிகளுக்கான குளுக்கோஸ்
- பண்ணை உபகரணங்கள்
- சிறிய இன நாய்களுக்கான உணவு (Dog Food)
- பெரிய இன நாய்களுக்கான உணவு (Dog Food)
- நாய்களுக்கான சம்போ,சவர்க்காரம்,விற்றமின்கள்

கால்நடைகளுக்கான அனைத்து மருந்து வகைகளும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். இன்றே நாடுங்கள்

விற்பனை முகவர் : நியூ பேர்னாட் மிருக உணவுகளும் கோழிக்குஞ்சுகளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WANTED

The Exterminators (Pvt) Ltd Sri Lanka's largest and most innovative Pest Management Company involved in the pest management industry in Sri Lanka for over a decade is authorized & licensed by the Dept. of Agriculture Sri Lanka & accredited by AQIS- Dept. of Agriculture Australia The company is also the only pest control company in the Island to hold an Environmental Protection License EPL from the Central Environmental Authority Sri Lanka. Exterminators is the only ISO 9001-2000 and ISO 14001-2004 certified pest Control Company in the Island and one of the few pest control companies to achieve this status globally.

**Colombo, Jaffana, Wattala, Hyde Park Corner**

BUSINESS DEVELOPMENT EXECUTIVE
With Excellent communication skills and command in English, Experience in similar position will be added advantage (Any Gender)

TECHNICAL EXECUTIVE
With Excellent communication skills and command in English. Degree/Diploma in Bio-technology or Agriculture with Entomology, Chemistry and Pest management as a subject (Any Gender)

SALES EXECUTIVES
With Excellent communication skills and command in English, Experience in similar position with CIM/SLIM will be added advantage (Any Gender)

FRONT-OFFICE COORDINATOR
With Excellent communication skills and command in English Experience in similar position will be added advantage. Age below 30 years (Female's Only)

PEST CONTROL TECHNICIAN
With or without experience in pest control with a valid riding/driving license

GENERAL
Attractive Salary
On the job training
International Job replacements
Insurance Motor bikes

Exterminators PEST-CONTROL

Manager Human Resource
THE EXTERMINATORS (PVT) LTD
298, Malabe Road, Kaduwela, Koswatta, Battaramulla
Tel 0115-745 666 Fax 0112-788-282
hrd@exterminators.lk www.pestcontrol.lk


**ஊஞ்சல் அன்பளிப்பு**

கைதடி தெற்கு மின்னொளி மழலைகள் கல்விப் பூங்கா மாணவர்களின் நன்மை கருதி 12 ஆயிரம் ரூபா பெறுமதியான இரட்டை ஊஞ்சல் ஒன்றை கைதடி ஸ்ரீமுருகன் இரும்புத் தொழிலக உரிமையாளர் இ.சிவனேஸ்வரன் இலவசமாக அண்மையில் வழங்கியுள்ளதாக கைதடி தெற்கு சன சமூக நிலையத்தின் செயலாளர். ப.விஜயகுமார் தெரிவித்தார்.

(50-288)

**அரையிறுதி ஆட்டங்கள்**

தென்மராட்சிப் பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் அரையிறுதிப் போட்டிகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப 3.30 மணிக்கு மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானத்தில் நடைபெறுமென பிரதேச செயலக விளையாட்டு அலுவலகர் க. முகுந்தன் தெரிவித்தார்.


# பிள்ளையார் இன் 'A' தரம் உல்லாசப் பயணிகள் தங்கும் இடம்

**('A' Grade Hotel Approved by the Ceylon Tourist Board)**

றூவ் காடின் றெஸ்றோறன்ட், கொபி சொப் றெஸ்றோறன்ட், கொக் ரெயில்ஸ் (Cock Tails and Chilled Beer) மீண்டும் இயங்க ஆரம்பித்துவிட்டன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். இவை யாவும் முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையும் மீண்டும் மாலை 5 மணி தொடக்கம் இரவு 8 மணி வரையும் திறந்திருக்கும். சகல சாப்பாடுகளுக்கும் 1 மணித்தியாலத்திற்கு முன் ஓடர்செய்துவிட்டு வரவும். சித்திரை மாத இறுதியில் 20 A/C அறைகள் தயாராகிவிடும். தற்சமயம் 16 குளிரூட்டப்பட்ட அறைகள், விசாலமான வாகனத் தரிப்பிடம், சிறப்பான உபசரிப்புகள், சேவைகள் யாவுக்கும் நாடவேண்டிய இடம்.

Tel:- 021 222 2829
Fax:- 021 222 4449
Email:- Pillaiyar.in@Gmaill.com.

**PILLAIYAR INN**
*31, MANIPAY ROAD, JAFFNA.*

(95727)



# GRAND OPENING

Landmaark Resort

**Sunday, 21 March 2010**
**from 3 p.m - 4 p.m**
**Chief Guest**
**Mr.K.Senthilnanthanan**
**Divisional Secretary - Nallur**

**All are Welcome**

**Landmaark Resort**
**Your Comfort is Our Priority**
**No.237, K.K.S Road, Jaffna**






**WORLD CLASS DIPLOMAS**
- BUSINESS INFORMATION SYSTEMS
- SOFTWARE ENGINEERING

**SHORT COURSES** (3 Months)
- International Computer Driving License Windows XP, Office package & Internet Email
- Graphic Designing with Adobe Photoshop
- Animations with Adobe Flash & Swish
- Programming Java, C++, C, VB.NET

**CLASSES FOR PROFESSIONAL NATIONAL & INTERNATIONAL EXAMINATIONS**
- Banking Examinations
- English for Beginners Basic/Intermediate and Final
- Business English / IELTS
- Law Entrance Examination
- Computerized Accountancy
- All Professional Accountancy Exams

**WORKSHOPS TO BE HELD IN MARCH**

| | |
|---|---|
| 24th March | Photoshop/Flash For Schools |
| 25th March | Office Packages- Word, Excel, introduction to internet For schools |
| 27th March | MS Office & Internet, Email For Teachers |
| 28th March | MS Office & Internet, Email Open Workshop |

Pre-registration required for each day

**CONTINUOUS CLASSES**
- Computing for Kids Ages 4 - 17 continuous programme combined with London Cambridge Syllabus
- ICT O/L & A/L Government Syllabus

**UPTO 30% SCHOLORSHIP SCHEMES**

INFORMATICS INSTITUTE OF TECHNOLOGY
*An Investment in life*

St. Martin's Trade Centre, Main Street, Jaffna
**Tel:** 021 222 1414 **Hotline:** 0773 449 669
**E-mail:** jaffna@iit.ac.lk
**Web:** www.iit.ac.lk

SKILLS Advertising


# 45ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 10 ★ 10 ★ 1988 |  | 06 ★ 02 ★ 2010 |

# அமரர் தயாகுணம் சிவகரன்

கடந்த 06.02.2010 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புச் செல்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (22.03.2010) திங்கட்கிழமை கீரிமலையிலும் அதனைத் தொடர்ந்து 24.03.2010 புதன்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். இந்த நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

தயாகுணம்
(சின்ராசு - தந்தை)

(95984)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் தலைவிதி தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வெற்றியிலேயே தங்கியுள்ளது

உரைகல்

தற்போதுள்ள தேர்தல் சூழ்நிலையில் மகிந்தவும், நிருபமாராவும்- எதிர்காலத்தில் தமிழ்மக்களால் தேர்ந்தெடுக்கப்படவுள்ள 22 தமிழ்த் தலைவர்களுடன் மட்டுமே இலங்கைத் தமிழர் பிரச்சினைபற்றி பேசப்படும் என தெளிவாகத் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டனர். தாங்கள் கொடுப்பதை உலகில் எந்த நாடு என்ன சொன்னாலும் [சீனா, ரஷ்யாவின் உதவியுடன்] மகிந்தர் கிராமசபை தவிர வேறு எதனையும் கொடுக்க மாட்டார். அதேபோல கிராமசபை[இந்திய பஞ்சாயத்து முறை] தவிர வேறு எதனையும் கொடுக்கும்படி வற்புறுத்தும் தைரியம் இந்தியாவுக்கு இல்லை. எனவே மகிந்தா, இந்தியா தமிழ் நாடு- 'றோ' வின் நோக்கம்- மகிந்தரும் இந்தியாவும் கொடுக்கக்கூடிய [கொடுத்தால்] ஏற்கக்கூடிய தமிழ்த் தலைவர்கள் 22 பேரைத் தெரிவு செய்யப்பண்ணுவதே ஆகும்.

அதற்காக அவர்கள் [தமிழ்த் தேசியம் பேசுபவர்களைத் தவிர] எவரையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக உள்ளனர் என்பது தெளிவாகிறது.

எனவே எப்பாடுபட்டாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இந்தத் தேர்தலில் முற்றுமுழுதாகத் தோற்கடிப்பதே அவர்களின் நோக்கம்.தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும், பிள்ளையான் கட்சியையும் ஒரே தராசில் வைத்துப் பார்க்கிறது இந்தியா.

ஆகவே நிலைமைகளை நன்கு புரிந்துகொள்ளவேண்டியது குறிப்பாக யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் ஒவ்வொரு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களின் பொறுப்பாகும்.பழைய நினைவுகளில் [1977] மூழ்கி, ஜனாதிபதி தேர்தலில் வாக்களித்தது போல மக்கள் வாக்களிப்பார்கள் என நினைத்தால் ஆமையும் முயலும் கதையாகவே முடியலாம்.

மக்கள் யாருக்கு வாக்களிப்பதுஎன குழம்பிப் போய் இருக்கிறார்கள். [த.தே கூட்டமைப்பு மேடையில் சொல்வது போல தமிழ்மக்கள் தெளிவாக இருக்கின்றார்கள்

## வெற்றியை ஈட்டுவதற்கு முறையான பிரசார முன்னெடுப்புகள் மிக அவசியம்

என்பது மக்களுடன் நேரடியாகக் கதைத்துப்பார்த்தால் அவர்களுக்கே நன்கு விளங்கும்].இளைஞர்களையும், பெண்களையும் தமது வேட்பாளர் பட்டியலில் சேர்க்காமல் விட்டதும் ஒரு குறையாகவே தமிழ் மக்களால் பார்க்கப்படுகிறது.

இதனால் த.தே. கூட்டமைப்பு வேட்பாளர்கள் சுவரொட்டி, பத்திரிகை விளம்பரம், மேடைப்பேச்சு என்பனவற்றுடன் நின்றுவிடாது கட்டாயமாக ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று முழுமையாக விளக்கினால் மட்டுமே வெல்லக்கூடிய நிலைஏற்படும். அதேபோல தேர்தல் நாள் அன்றும் தமக்கு வாக்கு போடக்கூடிய சகல வாக்காளர்களையும் வாக்கு அளிக்கும் நிலையத்திற்கு அனுப்பி வாக்கைப் போடச் செய்வித்தால்மட்டுமே கூட்டணி வெல்ல வாய்ப்புள்ளது.

தேர்தல் அலுவலகம் [யாழ்ப்பாணம்] தரும் உத்தியோகபூர்வமான வாக்காளர் இடாப்புகள் 1990இன் பின் திருத்தம் செய்யப்படாதவை. 2008 ஆண்டு தேர்தல் இடாப்பின் அடிப்படையில் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது. அதன்படி தேர்தல் இடாப்பில்

அ]இறந்தவர்களின் பெயர்கள் உள்ளன.

ஆ]வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டவர்களின் பெயர்கள் உள்ளன.

**வீடு வீடாகச் சென்று ஆள் எண்ணிக்கையைப் பார்க்கவேண்டும்**

இவற்றை ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று பார்த்தால் தான் உண்மையில் எத்தனை வாக்காளர்கள் ஆள் எண்ணிக்கையில் [Physically ]ஒரு கிராமத்தில் உள்ளனர் என்பது தெரியவரும்.உதாரணமாக ஒரு கிராமத்தில் தேர்தல் இடாப்பின்படி 8000 வாக்காளர்களின் பெயர்கள் இருந்தால் அதில் 1000 பேர்வரை இறந்திருப்பார்கள். 1000 பேர் வெளிநாட்டுக்குச் சென்றிருப்பார்கள். மிஞ்சியுள்ள 6000 பேரில் 2000 பேர் இடம்பெயர்ந்து யாழ் மாவட்டத்தின் பிறபகுதிகளிலோ அல்லது ஏனைய மாவட்டங்களிலோ வசிப்பவர்களாக இருப்பார்கள். எனவே உண்மையில் அக்கிராமத்தில் [தேர்தல் இடாப்பின் பின் 8000 என்றாலும்] 4000 வாக்காளர்கள் மட்டுமே ஆள் எண்ணிக்கையில் [Physically ] ஆக இருப்பார்கள். இவர்களில் அதே கிராமத்தைச் சேர்ந்தவர்களும் தேர்தலில் போட்டியிடுகிறார்கள். எனவே இந்த 4000 பேரில் எத்தனை பேர் தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கு வாக்களிப்பார்கள் என்பதை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் மிகவும் கூர்மையாக யோசித்துப்பார்க்க வேண்டும். பிரபலமானவர்கள், கல்லூரி பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், சமூகத்தில் பிரபல்யம் பெற்ற பலர் போட்டியிடுவதால் நிச்சயமாக இவ் வாக்குகள் சிதறத்தான் செய்யும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நினைப்பது போல கொத்துக் கொத்தாக தமக்கே வாக்குகள் கிடைக்கும்என எதிர்பார்த்தால் ஏமாற்றம் தான் கிடைக்கும்.

யாழ். மாவட்டத்தில் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் இடம்பெயர்ந்த வாக்காளர்கள் வசிக்கின்றனர். ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் யாழ். மாவட்டத்தில் ஒன்பது தொகுதிகளையும் சேர்ந்த மக்கள் வசிக்கிறார்கள்.பிரதேச செயலகங்களில், இடம்பெயர்ந்த மக்கள் அந்தந்தப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட எந்தெந்தக் கிராம மக்கள் இடம்பெயர்ந்து வசிக்கின்றனர் என்ற விவரம் உள்ளது.உதாரணமாக காங்கேசன் துறைத் தொகுதியைச் சேர்ந்த ஒருவர் சாவகச்சேரியில் வசிக்கலாம். சாவகச்சேரியைச் சேர்ந்தவர் இடம்பெயர்ந்து உடுவிலில் வசிக்கலாம். தேர்தல் நாளன்று இவர்கள் தமது சொந்தச் செலவில் சாவகச்சேரிக்குச் சென்று வாக்களிப்பார்கள் என எதிர்பாக்க முடியாது. எனவே இவ்வாறு இடம்பெயர்ந்திருப்பவர்களை அவர்களுக்குரிய வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிக்கச் செய்வதில் த.தே. கூட்டமைப்பு வேட்பாளர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

வன்னியில் நடந்த இறுதிப் போரின் போது எல்லாவற்றையும். இழந்த மக்கள் வாக்களித்துத்தான் என்ன பயன் என்ற நிலையில் இருக்கிறார்கள்.எனவே நிலைமை விளக்கி அவர்கள் வாக்களிக்க வேண்டிய கட்டாயத்தை தெரியப்படுத்தி வாக்களிக்க வைக்கவேண்டியது த.தே. கூட்டமைப்பு வேட்பாளர்களின் பெரும் பொறுப்பாகும்.

மேலும் பலர் உடல் ஊனமுற்றவர்கள், கால்களை இழந்தவர்கள், கண்கள் இழந்தவர்கள், பெற்றோரை இழந்தவர்கள், சொத்துக்கள் இழந்தவர்கள், வாக்களிப்பதில் அக்கறை செலுத்த மாட்டார்கள். எனவே அவர்களையும் வாக்களிக்கச் செய்விப்பது [உடல் ஊனமுற்றவர்கள் வாகனங்களில் சென்று வாக்களிப்பதற்கு முதலிலேயே விண்ணப்பித்து அனுமதி பெற்றிருக்க வேண்டும்]

**வாக்காளர்களை வாக்களிக்கச் செய்விக்க வேண்டும்**

அவர்களுக்கு அந்த விவரங்கள் எதுவும் தெரியாது. எனவே வேட்பாளர்கள்தான் அவற்றைக் கவனிக்கவேண்டும்.

எதிர்வரும் 25,26.03.2010 இல் அரசாங்க அலுவலர்கள் தபால் மூலம் வாக்களிக்கப்போகின்றார்கள். த.தே. கூட்டமைப்பு வேட்பாளர்கள் மாவட்டத்தின் சகல அ.அலுவலகங்களுக்கும் சென்று அரசாங்க அலுவலர்களைச் சந்தித்து 23,24.03.2010இல் நினைவுபடுத்தி வாக்களிக்குமாறு கோரவேண்டும். தபால் மூலம் வாக்களிப்பு முடிவுகள்தான் மாவட்டத்தின் வாக்களிப்பு எப்படியிருக்கும் என்பதைத் தீர்மானிக்கப் போகின்றன.

ஐ.ம.சு. முன்னனியின்- ஜனாதிபதியால் நேரடியாக நியமிக்கப்பட்ட வேட்பாளர்கள் தாமே என்று விளம்பரம் செய்யும் சிலர் கலண்டர், மாணவர்களுக்கு வாய்ப்பாட்டு அட்டை போன்றவற்றை கொடுக்கின்றார்கள்.சில வேட்பாளர் [பேராசிரியர்கள்] களின் மாணவர்கள் களத்தில் இறங்கியுள்ளனர். பல்கலைகழக மாணவர்களும் அப்படியே சந்தைகள், மக்கள் கூடும் ஏனைய இடங்களில் பிரசாரம் செய்கிறார்கள். ஆனால் த.தே.கூட்டமைப்பு வேட்பாளர்கள் வீடுகளுக்குச் சென்று பிரசாரம் செய்வதையோ அல்லது மக்களை ஏனைய இடங்களில் சந்திப்பதையோ தவிர்த்து வருவதாகவே மக்கள் நினைக்கிறார்கள்.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் உள்ள எந்தத் தொகுதிக்கு எந்த வேட்பாளர் த.தே.கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடுகிறார் என்ற விவரமோ அல்லது த.தே.கூட்டமைப்பு ஆதரவாளர்கள் தொடர்பு கொள்ள வேண்டியிருந்தால் குறித்த வேட்பாளரின் அலுவலக முகவரியோ அல்லது தொலைபேசி இலக்கமோ அல்லது மாவட்டத்தின் மத்திய தேர்தல் தகவல் நிலைய முகவரியோ, தொலைபேசி இலக்கமோ, பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப் படாதபடியால் ஒரு பிரச்சினை ஏற்பட்டால் யாரிடம் தெரிவிப்பது என த.தே.கூ. ஆதரவாளர்கள்கவலைப்படுகின்றனர்.

**த.தே.கூ. சின்னம் வீடு என்பதைப் புரிய வைக்கவேண்டும்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சின்னம் உதயசூரியன்தான் என கிராம மக்கள் பலர் இன்னும் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். அத்துடன் சின்னத்துக்கு முதலில் புள்ளடி போடாமல் தனக்குப் பிடித்த வாக்காளரின் இலக்கத்துக்குப் புள்ளடி போட்டால் போதும் என நினைக்கும் வாக்காளர்கள் பலர் இருக்கிறார்கள். வாக்குச்சீட்டில் [யாழ் மாவட்டத்திற்குரிய] 15 அரசியல் கட்சிகளினதும் 12சுயேட்சைக்குழுக்களினதுமாக மொத்தம் 27 சின்னங்கள் உள்ளன. இவற்றில் வீடு சின்னத்தைக் கண்டுபிடித்து வாக்களிப்பதில் வாக்காளர்கள் சிரமப்படுவார்கள். எனவே இவ்விடயங்களை ஒவ்வொரு வாக்காளருக்கும் தெளிவுபடுத்தும் விதத்தில் த.தே.கூ. வேட்பாளர்கள் தத்தமக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் வாக்காளர்களுக்குத் தெளிவாகத் தெரிவிக்கவேண்டும். தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கு வாலிப முன்னணி, மகளிர் முன்னணி போன்ற அமைப்புக்கள் 1977இன் பின் இல்லாதபடியால் வேட்பாளர்களும் அவர்களுக்கு நெருக்கமான சிலருமே இவ்வேலைகளைக் கவனிக்க வேண்டிய நிலையுள்ளது.

**கிளிநொச்சித் தொகுதியில்**

கிளிநொச்சித் தொகுதியைப் பொறுத்தவரையில் வாக்காளர்களைச் சந்திக்க படையினர் தம்மை அனுமதிக்கவில்லை என ஸ்ரீதரன் என்ற த.தே.கூ. வேட்பாளர் பத்திரிகை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.இதனை அவர் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களான "கபே" "பவ்ரல்" வெளிநாட்டுத் தூதரகங்களின் கவனத்துக்குக் கொண்டு வரவேண்டும். அத்துடன் தேர்தல் நாள்வரை மீள்குடியேற்றம் கிளிநொச்சியில் ஒவ்வொருநாளும் நடக்கப்போகிறது. அவ்வாறு மீள்குடியேறிய மக்களை இவர் சந்திக்கவேண்டும். முகவரி மாற்றங்களால் இவ்வாக்காளர்களின் வாக்காளர் அட்டை அவர்களுக்குக்கிடைக்காமல் போகலாம். தபால் கந்தோர்கள் எங்கு இருக்கின்றன என்பது அவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம்.வாக்காளர் அட்டை அவர்களுக்கு கிடைக்காவிட்டால் தமது வாக்களிப்பு நிலையம் எங்கே உள்ளது எனத் தெரியாமலும் வாக்களிப்பதற்கான வாகன வசதி இல்லாதபடியாலும் இம்மக்கள் வாக்களிக்கப் போகாமல் விடலாம்.

அத்துடன் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் யாழ். மாவட்டத்தின் பல முகாம்களிலும் உறவினர், நண்பர்களின் வீடுகளில் தங்கியிருக்கும் மக்கள் கிளிநொச்சியில் உள்ள வாக்களிப்பு நிலையத்துக்குப் போய் வாக்களிக்க இலவச போக்குவரத்து வசதி செய்யப்பட்டிருப்பதாக அரச அதிபர் பத்திரிகைகளில் விளம்பரம் செய்திருந்தார். ஆனால் இந்த வசதி சீராக நடைமுறைப்படுத்தப்படாதபடியால் பல வாக்காளர்கள் தம் வாக்குகளைப் போட முடியவில்லை.வேறு சில முகாம்களில் போக்குவரத்து வசதி இருந்த போதிலும் வாக்களிப்பு நாளில் பி.ப 3.00 மணிவரை தாமதப்படுத்தப்பட்டு வாக்களிப்பு நேரம் முடிந்தபின் வாக்காளர் அங்கு சென்றதால் வாக்களிக்க முடியாமல் போய்விட்டது. எனவே குறிப்பாக கிளிநொச்சி த.தே.கூ. வேட்பாளர்களுக்கு மிகவும் பாரிய பொறுப்பு உள்ளது. போக்குவரத்து வசதிகள் பற்றிய விவரங்கள் அவர் யாழ். மாவட்ட தேர்தல் திணைக்களத்துடன் உறுதிப் படுத்தி வாக்களிப்பு நாள் 08.04.2010 காலை 6.00மணிக்கே அச்சேவைகள் தொடக்கப் படும் நிலையில் உள்ளனவா என்பதை இ.போ.ச. முகாமையாளருடன் தொடர்பு கொண்டு கவனிக்கவேண்டும். இவ்வாறான சகல வாக்காளர்களும் அன்று பி.ப. 2மணிக்கு முன்னரே வாக்களித்து விட்டு யாழ்ப்பாணம் திரும்பக் கூடியதாக த.தே.கூ. வேட்பாளர் பார்த்துக்கொள்ளவேண்டும். அதே.போல பூநகரி, அக்கராயன், கண்டாவளை போன்ற இடங்களில் தற்போது மீளக்குடியமரும் மக்கள் வாக்களிப்பதில் போதிய அக்கறை காட்டாதிருக்கலாம். எனவே அவர்களையும் தமக்கு வாக்களிக்க வைப்பது கிளிநொச்சி வேட்பாளரின் கையில் தான் உள்ளது. கிளிநொச்சி தொகுதி நிலை தான் வன்னியின் முல்லைத்தீவு, வவுனியா மன்னார் தொகுதிகளுக்கும் உள்ளது.

தேர்தல் தினத்தன்று ஏற்படக்கூடிய அசம்பாவிதங்களைத் தவிர்ப்பதற்காக வேட்பாளர்கள் தம் தொகுதியில் இருப்பதைக் கட்டாயம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்வாறு இருந்தாலே ஆதரவாளர்கள் தமக்கு ஏற்படும் பிரச்சினைகளை அவர்களுக்குச் சொல்லமுடியும்.

எனவே த.தே.கூ. வேட்பாளர்கள் கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக் கொண்டு கவனமாக தமது நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தகுந்த நடவடிக்கைகள், ஏற்பாடுகள் செய்யாவிட்டால் இலவு காத்த கிளியாக கதை போய்விடுவதுடன் தாம் விரும்பும் நபர்களை தெரிவு செய்விக்கக் கூடிய நிலையை மகிந்தவும், இந்தியாவும் நிச்சயம் உருவாகிவிடக்கூடிய நிலைதான் ஏற்படும். ★★★★★★★★

சு.குருநாதன்

## நல்லோர் தூற்றிடவும் ஒரு தமிழன் வாழலாமோ மாற்றார் தாள்பிடிப்பார் தலைவரென ஆவதுண்டோ?

தன்னலம்பெ ாறாமைபே ராசை யோடு
தான் பிறரை மதியாமை சுரண்டல் வஞ்சம்
என்னுமிந்த இழி குணங்கள் மிகுந்ததாலே
இன மொழிநா டிழந்தடிமைத் தமிழரான
பின்னருமே சிறிதளவும் சிந்தியாமல்
பிரிந்து நின்று தத்தமக்குத் தலைமை வேண்டி
இன்னலுறும் மக்களைமேன் மேலும் துன்ப
இருளினிலே தள்ளுகின்றார் இவர்தாம் யாரோ?

மாற்றவர் தம் இனவழிப்புக் கொடுமையெல்லாம்
மனத்தினிலே சிறிதேனும் எண்ணிப் பாரார்
போற்றியவர் தாள்பணிந்து வாழுதற்கே
புதிதாக வழிமுறைகள் சொல்கின்றாரே
ஏற்றமிகு விடுதலைக்காய்த் தமிழரெல்லாம்
இணைந்தொன்றாய்ப் போராடத்துணியா(து)'உண்ணும்
சோற்றினுக்குத் த(ம்)மை விற்றார்' என்றே நல்லோர்
தூற்றிடவும் ஒரு தமிழன் வாழலாமோ?

தனிமரந்தான் தோப்பாகா தென்பார்; மாற்றார்
தாள் பிடிப்பார் தலைவரென ஆவதுண்டோ?
கனியிருப்பக் காய் கவரும் மாக்கள் தம்மை
கற்றவரென் றெவ்வெவரும் மதித்தலுண்டோ?
புனிதமகன் புத்தரொடு வள்ளுவர் தாம்
புகன்ற மொழி யொன்றிதனைக் கேட்பீர் மக்காள்
'அனையரினை யரென்னாமல் யார்சொன் னாலும்
ஆராய்ந்துமெய்பொருள் காண்பதறி வென்றார்!
(அனையர்= அத்தன்மையர்;
இனையர்=இத்தன்மையர்)

கெடுதிசெய் சாராருக்கினத்தைக் காட்டி
கொடுத்தவன் பால் பணப்பரிசு பதவி பெற்றே
அடிமையிடம் அதிகாரம் செலுத்துவார் போல்
அதட்டுகின்றார் தமிழரெல்லாம் நொந்து போனார்
கடுநஞ்சு போன்றவந்தக் கயவர் தம்மைக்
காட்டுக்கே அனுப்பிவிட்டு மற்று நாம் ஓர்
கொடியின்கீழ் அணிதிரண்டே இழந்த எங்கள்
குலவுரிமை ஆட்சியினை மீட்போம் வாரீர்.
(குலவுரிமை=இனவுரிமை, தேசியவுரிமை,
மரபுரிமை)

-அவ்வை-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிளிநொச்சி

மீளக் கட்டியெழுப்பப்படும் மன்னார், வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கு சக்தியை கொடுக்கும் வகையில்.......
சர்வதேச மற்றும் உள்ளூர் வங்கிச் சேவைகள் மீண்டும் உங்கள் அருகாமையில்
மாற்றத்திற்கான ஒத்துழைப்பு; பாதுகாப்பான எதிர்காலம்; தேசத்திற்கு வலிமை
மார்ச் 22ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.31 மணிக்கு

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்


## இதய அஞ்சலி

எமது நண்பன் சி.அச்சுதன்
(பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், வவுனியா)
அவர்களின் அன்புத் தந்தையார்


**அமரர் கனகசபை சிவசுப்பிரமணியம்**

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சி.அச்சுதன் - 0718157001 ஈ.தயாருபன் குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

பிறப்பு 18 * 10 * 1926



இறப்பு 19 * 02 * 2010

**அமரர் சுப்பிரமணியம் பொன்னுத்துரை**
(ஏழாலை கிழக்கு)

கடந்த 19.02.2010 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்த எமது அன்புத் தந்தை சுப்பிரமணியம் பென்னுத்துரையின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் சபிண்டீகரணமும் இன்று (21.03.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. மேற்படி நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களைக் கேட்டுக் கொள்கின்றோம். மேலும் எம்தகப்பனாரின் பிரிவுச் செய்தி கேட்டு எம்துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நி.மு: புன்னாலைக் கட்டுவன் வடக்கு,
சுன்னாகம்.
த.மு: சுரந்தன், நீர்வேலி மேற்கு. (95734)

தகவல்:
குடும்பத்தினர்.


## தேவை

சாட்டி, அல்லைப்பிட்டிப் பகுதியில் நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் 10, 15 பரப்புக் காணி தேவை.
தொடர்பு: 0772078458

## பணியாள்கள் தேவை

1. வரவேற்பாளர் (பயிலுநர் 20-45 வயது)
2. பராமரிப்பாளர்,
3. சுத்திகரிப்பாளர்,
4. இரவு - பகல் காவலாளி.

நேரடியாக தொடர்பு கொள்ளவும்
**ஹொட்டேல் புளுகெவன்**
இல. 70, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 222 9958, 0771538250.

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள HAMADA Offset Machine 612 XL (நேரச்சு இய்ந்திரம்) விற்பனைக்கு உண்டு.
(A3; Portrait ) T.P. 0779204165

## வேலையாள்கள் தேவை

* கையடக்கத் தொலைபேசி திருத்துநர் (Software, Hard ware)
* விற்பனையாளர்
* உதவியாளர் (இருபாலரும் நேரில் வரவும்)
* Reload, Photocopy செய்பவர்கள்

Communication இல் வேலை செய்த அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
**யாழ்.போன் சொப்**
இல.9,10, நவீனசந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0773611282

## உடன் விற்பனைக்கு

தொடர்பு: 0778034218

## Oriental Aquarium Multy Farm

**கொழும்பு விலையில் வளர்ப்புக் கலர் மீன்கள்**
**அதிரடி மலிவு விற்பனை**

வளர்ப்புக் கலர் மீன்கள், மீன் தொட்டி, மீன்தொட்டி உபகரணங்கள், வளர்ப்பின செல்லப் பிராணிகள் (வளர்ப்பின புறாக்கள், முயல், கினிப்பிகள், குருவிகள்) பல விதமான சாடி வகைகள் கண்டியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பல வர்ணப் பூக்கன்றுகள் மற்றும் றோஸ் 80/-, பேபிறோஸ் 50/-, கிரிஷாந்தி மம் 50/-, பாபன்டஸ் 90/- என்பவற்றை மிக மலிவான விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு**

தொடர்பு: **மல்ரிபாம்**
61,இராமநாதன் வீதி, கலட்டி,
யாழ்ப்பாணம் (நாச்சிமார் கோயில் முன்வீதி)
0217912997, 0775397035


## ஒரு திங்கள் நினைவலைகள்

தோற்றம் 20 ★ 01 ★ 1930



மறைவு 19 ★ 02 ★ 2010

**திருமதி செல்லையா தங்கரத்தினம்**

திங்கள் ஒன்று கடந்தாலும்
தினம் உங்கள் கனவுகளில்
நினைந்து இருப்போம் அம்மா
நீங்கள் இறைவன் தாள் சாந்தியடைய
தாள் பணிந்தோம்

செ.சர்வேஸ்வரன் (HNB),
இணுவில் மேற்கு.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## போர் வடுவை ஆற்றுப்படுத்த உளவள ஆற்றுப்படுத்தல்

வன்னிப் பிரதேசத்தில் கடந்த வருடம் நடைபெற்ற கொடிய போரினால் பாதிப்புற்ற மக்களின் புனர்வாழ்வுச் செயற்பாடுகளில் மிகப் பிரதானமானதாகக் கொள்ளப்பட வேண்டியது, அதனால் உளவளம் பாதிப்புற்றோரின் ஆற் றுப்படுத்தலாகும்.

உளவள - மனநல - பாதிப்பின் கொடூரம், புறத்தே புலப்படுவதைவிட, தெரிவதைவிட சம்பந்தப்பட்டவர்களையும் அவர்களின் இரத்த உறவுகளையும் ஆழ்மனதுவரை வேகவைத்து வேதனைப்படுத்தி வருவது சமூக மட்டத்தில் இன்னும் பெரிதும் உணரப்பட்டதாக இல்லை. உளவளம் பாதிப்புற்றவர்களுக்கான ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகள் மிகப் பரந்த அளவில் தொடங்கப்பட்டதாகவும் இல்லை.

ஒரு மனிதனின் உடல் நலத்தில், உள்ளிருந்து பெரும் பாதிப்பை உண்டாக்கும், அறுக்கும் கொடிய நோய் உளநலம் குன்றுதலாகும். உளத்தையும் உடலையும் ஒருசேர வாட்டி வதைக்கும் கொடிய நோய் அது. ஒருவரின் வாழ்க்கையை முற்றாகப் பாழாக்கிவிடவும் சூன்யமாக்கி விடவும் வல்லது.

அதிலும் இளவயதினர் மனநலம் குன்றினாலோ அல்லது பாதிப்புற்றாலோ அவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகவும் பயங்கரமாகவும் மாறிவிடுகிறது.

இதனை மனதிற்கொண்டு, இந்த விடயம் ஜேர்மனின் பிரெட்றிக் ஈபேர்ட் மன்றத்தின் வதிவிடப் பிரதிநிதி யோக்கிப் ஸ்லூற்றின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டுள்ளது.

இங்கு வந்திருந்த அவரிடம் யாழ்ப்பாண மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில், உளவள ஆற்றுப்படுத்தலுக்கு உதவுமாறு கோரிக்கை விடுத்திருக்கிறது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கல்விச் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும்மனித உரிமைகள் தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே, மாணவர்களின் உளவள - மனநல - பாதிப்புகளை ஆற்றுப்படுத்தும், சீர்செய்யும் முக்கிய பிரச்சினை முன்வைக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களை விடவும், வன்னி மாவட்டங்களின் மாணவர்களே நினைத்தும் பார்க்க இயலாத மனதை உலுக்கும் விதத்தில் போரினால் உளவளம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கோரச் சாவுகளை நேரில் கண்டும், தமது இரத்த உறவுகள் தமக்கு முன்னாலேயே உடல் சிதறிப் பலியானதையும் பெற்றோரையும் உடன் பிறப்புக்களையும் இழந்து தவிப்பதையும் அந்தப் பிஞ்சு மனங்கள் எவ்வாறு தாங்கிக்கொள்ளும்? அவர்களின் உளவளப் பாதிப்பின் ஆழம் வார்த்தைகளில் வடிக்க முடியாதவை. அவர்களின் உள்ளங்கள் நொறுங்கி ஆழமான ரணங்களால் நீண்டகாலத்துக்கு வலித்துக்கொண்டிருக்கும்.

எப்படியோ, மொத்தத்தில் தமிழ் மாணவர்களின் உளவள ஆற்றுப்படுத்தல் நடவடிக்கை உடனடியாகக் கவனம் செலுத்தப்படவேண்டிய தாமதமின்றி செயற்படுத் தப்பட வேண்டிய ஒன்றாகும்.

மனிதத்தின் பேரால், மனித நேயத்தின் பாற்பட்டு இதற்கான ஆற்றுப்படுத்தல் திட்டங்களை இந்த நாட்டு அரசாங்கம் முன்னுரிமை அளித்துச் செயற்படுத்தும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை.

உளவள ஆற்றுப்படுத்தலில் உணர்வுபூர்வமாகச் செயற்படும் பிறநாட்டு நிறுவனங்களின் வழிகாட்டலும் உதவியும் உடனடியாக இதற்கு வேண்டப்படுவதாகும். இது குறித்து பிரெட்றிக் ஈபேர்ட் மன்றங்கள் போன்றவற்றின் உதவிகளோடு எமது மக்களும் துறைசார் நிபுணர்களும் முன்னுரிமை கொடுத்துச் செயற்படுவது அவசியம்.

உளவளம் பாதிக்கப்பட்ட மாணவர்களின் ஆற்றுப்படுத்தலில் சமூக மட்டத்தில் விழிப்புணர்வும் மனதார்ந்த சேவையும் தேவை. இல்லையேல் எங்கள் எதிர்காலச் சந்ததியின் வாழ்வு சூன்யமாகிவிடுவதற்கான காரணர்களாகிவிடுவோம் நாம்.

போரின் பின்னரான புனர்வாழ்வில் மாணவர்களின் உளவள - மனநல - ஆற்றுப்படுத்தலுக்கு முக்கிய இடமளித்துச் செயற்பட, உணர்வுபூர்வமாகச் செயற்பட மனங்கொள்வோமாக. இது தாமதிக்கப் படக்கூடியதோ ஒன்பதோடு பத்தாக வைத்து கணிக்கப்படக்கூடியதோ அல்ல என்பதை எல்லோரும் உணர்வோமாக.

# நெடுந்தீவு சுற்றுலா நீதிமன்றத்தை பிரதம நீதியரசர் திறந்து வைத்தார்

நெடுந்தீவு,மார்ச் 21

நெடுந்தீவில் அமைக்கப்பட்டுள்ள சுற்றுலா நீதிமன்றத்தை பிரதம நீதியரசர் அசோக டீ சில்வா வைபவரீதியாகத் நேற்றுத் திறந்துவைத்தார்.

யாழ்.மாவட்ட மேல்நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நீதியரசர்களான ஏ.ஆர்.என்.காமினி அமரதுங்க, டி.ஜே.டி.எஸ்.பாலபட்ட பெந்தி, கொழும்பு மாவட்ட நீதிபதியும் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் பிரதிச் செயலாளருமான நவ்பர் தாகிர், ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி ஆர்.வசந்தசேனன், யாழ்ப்பாணம் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் என்.திருலிங்கநாதன் மற்றும் ஊர்காவற்றுறை, நெடுந்தீவு பொலிஸ் அதிகாரிகள், கடற்படை அதிகாரிகள், சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



நெடுந்தீவு நீதிமன்றக் கட்டடத்தை பிரதம நீதியரசர் நாடாவை வெட்டி திறந்து வைத்தபோது எடுக்கப்பட்ட படம். அருகில் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி வசந்த சேனனும் காணப்படுகிறார். (படம்:லக்ஸ்மன்)

முற்பகல் 11 மணிக்கு ஹெலிக்கொப்டர் மூலம் நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் வந்திறங்கிய பிரதம நீதியரசரையும் ஏனைய நீதியரசர்களையும் அதிகாரிகளையும் நெடுந்தீவு பிரதேச சபை முன்பாகவுள்ள பிரதான வீதியில் இருந்து நீதிமன்றம் அமைந்துள்ள உதவி அரசாங்க அதிபர் பணிமனைவரை 'பாண்ட்' வாத்திய அணிவகுப்புடன் அழைத்துச் செல்லப்பட்டனர்.

பிரதம நீதியரசரும் ஏனையோரும் மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர். நீதிமன்றக் கட்டடத்தின் முன்பாக தேசியக் கொடியைப் பிரதம நீதியரசர் ஏற்றிவைத்து நீதிமன்றக் கட்டத்தின் நினைவுப் பலகையைத் திரைநீக்கம் செய்து கட்டடத்தைத் திறந்துவைத்தார்.

தொடர்ந்து பிரதம நீதியரசரும் ஏனைய பிரமுகர்களும் மங்கள விளக்கேற்றியதையடுத்து இடம்பெற்ற கூட்டத்தில் பிரதம நீதியரசர் மற்றும் காமினி அமரதுங்க, நவ்பர் தாகிர், மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், சட்டத்தரணி எம்.திருநாவுக்கரசு உட்படப் பலர் உரையாற்றினார்கள். (ஒ-1-111)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச்21

நீர்வேலி ஸ்ரீகணேசா அறநெறிப் பாடசாலையின் 9 ஆவது ஆண்டு விழாவும், பரிசளிப்பு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.1.30 மணிக்கு பாடசாலை முன்றிலில் அதிபர் கு. தியாகராஜாக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளர் த.கோபாலகிருஷ்ணன் கலந்துகொள்ளவுள்ளார். (6)

# மகஸின் சிறைக்குள் ஆயுள்கைதியின் திருமண வைபவம்



ஆயுட்கால சிறைத்தண்டனை பெற்று மகஸின்சிறைச்சாலையில் சிறைவாசம் அனுபவித்துவரும் கைதியொருவரின் திருமண வைபவத்தால் மகஸின் சிறைச்சாலை வளாகம் கடந்த வியாழக்கிழமை களை கட்டியிருந்தது.

கைதிகள் சிறைச்சாலைக்குள் திருமணம் செய்துகொள்வது முதன் முறையல்ல. எனினும், ஆயுட்கால சிறைத்தண்டனை பெற்ற ஒருவர் திருமணம் செய்துகொண்டமை வரலாற்றில் முதன்முறையாக நடந்துள்ளது என மகஸின் சிறைச்சாலை அதிகாரி ஷெல்டன் பொதேஜு கூறினார்.

மஸ்கெலிய பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதான இராமையா ரவீந்திரனும், நுவரெலியா பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதான மாதவன் ரஞ்சனியுமே இந்த திருமண வைபத்தில் இணைந்துகொண்ட தம்பதிகளாவர்.

இந்த வைபவம் பற்றி மேலும் தெரியவருபவை வருமாறு:-

சிறைச்சாலை அதிகாரியின் காரியாலயத்தின் ஒரு பகுதி இவ்வைபவத்துக்காகப் பிரமாண்டமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. மணமகன், மணமகள் இரு தரப்பிலிருந்தும் உறவினர்கள் கலந்துகொள்ள விசேட அனுமதியும், வசதிகளும் வழங்கப்பட்டிருந்தன.

வைபவத்தில் கலந்துகொண்டவர்களை உபசரிக்க தின்பண்டங்களும், தேநீரும் கொண்ட நீண்ட மேசையொன்றும் அமைக்கப்பட்டிருந்தது.

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட மணமகனான ரவீந்திரனுக்கு 2003 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் திகதி ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டது. இத்தண்டனையை ஆட்சேபித்து அவர் மேன்முறையீடு செய்து தீர்ப்புக்காகக் காத்திருக்கின்றார்.

ரவீந்திரன், மணமகளான ரஞ்சனியை அவர் 14 வயது மாணவியாக இருந்த காலத்திலிருந்தே காதலித்து வந்துள்ளார். சிறைக்குள் முடக்கப்பட்ட பின்னர்தான் நெடுங்காலமாக மனதில் பூட்டிவைத்திருந்த ஆதங்கத்தை சிறைச்சாலை அதிகாரி ஷெல்டன் பொதேஜிடம் தெரிவித்துள்ளார். அதனைத் தொடர்ந்து இரு தரப்பினரின் பெற்றோர், உறவினர்களின் சம்மதத்துடன் இத்திருமணத்தை நடத்திவைக்க அவர் பூரண ஏற்பாடுகளை மேற்கொண்டார்.

நுவரெலியாவில் இருந்து வந்த மணமகள் கொழும்பில் நடந்த சமய சடங்குகளின் பின் குறிப்பிட்ட சுப நேரத்தில் மகஸின் சிறைச்சாலை வாயிலை அடைந்தார். மணமகன் கோலத்திலிருந்த ரவீந்திரன் குறிப்பிட்ட நேரத்தில் மகஸின் சிறைச்சாலை வளவில் உள்ள இந்துக்கோவிலுக்கு வருகை தந்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார்.

அதன் பின் சுபநேரமான பகல் 11.50 மணிக்கு பொரளை பிரதேச திருமணப் பதிவாளரான திருமதி மஞ்சுபான காலிங்கவின் முன்னிலையில் தம்பதிகளின் திருமணப் பதிவு நடந்தேறியது. திருமணப் பதிவின் போது இரு தரப்பினரது பெற்றோர்கள், உறவினர்கள் உட்பட சிறைச்சாலை உயரதிகாரிகள் பலர் பிரசன்னமாகியிருந்தனர்.

அதன்பின் இந்து ஆகமவிதிகளின்படி தம்பதியினர் மாலை மாற்றிக்கொண்டதுடன் திருமண கேக்கை வெட்டினர். அதனைத் தொடர்ந்து ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேசையில் அமர்ந்து வைபவத்தில் கலந்துகொண்ட அனைவரும் தின்பண்டங்களைப் புசித்து தேநீர் அருந்தினர்.

சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் உட்பட உயரதிகாரிகளால் ஏற் பாடு செய்யப்பட்ட விசேட பரிசுப் பொதி மணமக்களுக்கு வழங்கப்பட்டது.

இவ்வைபவத்துக்கு முன்னாள் பிரதியமைச்சர் இராதாகிருஷ்ணன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன, கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன உட்பட பெருந்திரளான பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

திருமண வைபவத்தின் முடிவில் தம்பதிகள் பிரியவேண்டிய தருணம் மனதை உருக்குவதாக அமைந்தது. இருவர் கண்களிலும் கண்ணீர் தாரை தாரையாகப் பெருகியவண்ணம் இருந்தது. ஒருவரையொருவர் ஆறுதல்படுத்த முயன்றபோதும் இருவருக்குமே வார்த்தைகள் வெளிவரவில்லை.

இறுதியாக மணமகன் திருமண உடையுடன் அதிகாரிகளுடன் சிறையை நோக்கி நடக்க மணமகளும், உறவினர்களும் கண்ணீர் மல்க சிறைச்சாலையை விட்டு வெளியேறினர். (சி)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி 08 | 22.03.2010 |
| | திங்கட்கிழமை |
| திதி: | ஷப்தமி |
| | பி.இ. 02.06 வரை |
| நட்சத்திரம்: | ரோகிணி |
| | மு.ப. 10.46 வரை |
| சுபநேரம்: | 12.17-01.47 வரை |
| ராகுகாலம்: | 07.47-09.17 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

# மின்மாற்றியில் திருத்தவேலை செய்த ஊழியர் தாக்குண்டு எரிகாயங்களுடன் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், மார்ச் 21

சுன்னாகம் மின்சார சபையின் மின்மாற்றியில் திருத்த வேலையில் ஈடுபட்ட ஊழியர் ஒருவர் மின்சாரம் தாக்கி படுகாயமடைந்தார். நேற்றுக் காலை 8.30மணியளவில் நடந்த இந்தச் சம்பவத்தினால் உடல் முழுவதும் எரிகாயங்களுக்கு உள்ளாகி அந்த ஊழியர் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி, சங்கத்தானையைச் சேர்ந்த எஸ்.துவாரகன் (25வயது) என்பவரே இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர் ஆவார். நேற்று யாழ். குடாநாடு முழுவதும் திருத்த வேலைக்களுக்காக மின்சாரம் தடை செய்யப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப் பட்டிருந்தது.

எனினும் மின்சாரம் துண்டிக்கப்படுவதற்கு முன்னரே இந்த ஊழியரை மின்சார சபையின் அதிகாரி ஒருவர் மின்பிறப்பாக்கி ஒன்றில் திருத்தும் பணியில் ஈடுபடுமாறு பணித்தார் என்றும் அவரின் கட்டாய பணிப்பை ஏற்று பிரஸ்தாப ஊழியர் மின்மாற்றி மீது ஏறிநின்று சீரமைப்புப் பணியில் ஈடுபட்டிருந்த வேளை மின்சாரம் தாக்கி எரிகாயங்களுக்கு ஆளானார் என்றும் கூறப்பட்டது. (ஒ-9)

## அனோமா பொன்சேகா விசாரணைக்குட்படுத்தப்படுவார்

கொழும்பு, மார்ச் 21

கடற்படைத்தளத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத்பொன்சேகாவின் மனைவி அனோமாவிடம் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் வாக்குமூலம் பெற உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. எனினும் அவரை விசாரணை செய்வதற்கான காரணம் வெளியிடப்படவில்லை. குற்றப்புலனாய்வுப் பிரிவில் அடுத்த வாரம் பிரசன்னமாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப் பட்டிருந்தது. (அ-1)

**அட்சயா**

★ பேசியல், மேக்கப், கொயாஸ்டைல், தலைமுடி அயன் பண்ணுதல், கருட்டுதல் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம்.
★ முகத்தில் பருக்கள், கருத்திட்டுக்கள் மறைய கிறீம் வகை.
★ 40வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான அழகு கிறீம் வகை.
★ கருமை நிறம் நீங்க கிறீம், சோப் வகை என்பன பெற்றுக் கொள்ளலாம்.
★ மாதவிடாய் பிரச்சினை, மூட்டுவலி, பிரஷர் உடல் நிறை கூட, குறைய உலக சுகாதார நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற இயற்கை உணவுக் குளிசைகள் பெற்றுக் கொள்ளலாம்.
★ போஷாக்கு வழங்கும் கல்சியக் குளிசை பெற்றுக் கொள்ளலாம். (ஒன்று ரூ.43/= மட்டுமே)
★ (ஜிம்) உடற்பயிற்சி நிலையம் ஆரம்பம்.

மேலும் விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

**461, நாவலர் றோட், அத்தியடிச்சந்தி, யாழ்ப்பாணம்.** (95721)

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருமலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, நுவரெலியா என அதன் அபிவிருத்தி நடவடிக்கைகளை விஸ்தரித்து வருகின்றது.

ஆறு பயிற்சி நிலையங்களை அமைத்து வரும் இந்தியா, பேராதனையிலும் ஒரு கல்வி நிலையத்தைத் நிர்மாணித்துள்ளது. இந்தக் கல்விநிலையத்தை திறந்து வைப்பதற்காக அண்மையில் இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவ் வந்திருந்தார்.

காங்கேசன்துறை துறைமுகத்தின் அபிவிருத்தியை மேற்கொள்ள திட்டமிட்டுள்ள இந்தியா, ஹற்றன் பகுதியில் 150 படுக்கைகள் கொண்ட வைத்தியசாலையையும் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இந்திய அர சின் இந்தத் திட்டங்களுக்கான நிதி உதவி களை இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கி வழங்கி வருகின்றது.

வடபகுதியில் விவசாய அபிவிருத்தி நிலையம் ஒன்றை அமைப்பது தொடர் பில் ஆய்வுகளை மேற்கொண்ட இந்திய அதிகாரிகள் தற்போது அதனை அமைப்ப தற்கான பரிந்துரைகளை இந்திய அரசிடம் சமர்ப்பித்துள்ளனர்.

அம்பாந்தோட்டை பகுதியில் அமைக்கப்படும் அனைத்துலக விமான நிலையத்தின் ஒப்பந்தப் பணிகளை பெறுவதற்கு இந்தியா முயற்சிகளை மேற்கொண்ட போதும், அரசு அதனை சீனாவுக்கு வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-1)

## கைக்குண்டுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சோதனை செய்தால் குண்டை வெடிக்க வைப்பேன் என்று அந்த நபர் எச்சரித்த தால். அதைத் தொடர்ந்து கலால் திணைக்கள அதிகாரிகள் வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த பொலிஸார் பிரஸ்தாப நபரின் பையைச் சோதனை செய்தனர். அப்போது அதில் கைக்குண்டு ஒன்று இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து பிரஸ்தாப நபரை மடக்கிப்பிடித்து கைது செய்த பொலிஸார் மல்லாகம் நீதிவான் க.அரியநாயகம் முன்ணிலையில் ஆஜர் செய்தனர். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-1-120)

## நிபுணர் குழுவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய நாடுகள் சபையின் பிரிட்டனின் நிரந்தரப் பிரதிநிதி மார்க்லியால் கிரான்ட், ஐ.நா. செயலாளர், நிபுணர்கள் ஆலோசனைக் குழுவை நியமிப்பது ஏற்புடையது என்றும் அணிசேரா நாடுகள் இயக்கம் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது அர்த்தமற்றது என்றும் கூறினார்.

செயலாளர் நாயகம் பான்-கீ-மூனுக்கு ஆலோசனைக் குழு அமைக்க அதிகாரங்கள் இல்லை என வாதிட்டு வரும் அணிசேரா நாடுகள் அமைப்பின் கூற்றுக்கள் எமக்கு ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளன. இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மனித உரிமை மீறல்கள் நிறுத்தப்பட வேண்டும். அங்கு மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங் கள், வன்முறைகள் போன்றன தொடர்பில் முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதில் பிரிட்டன் தெளிவாக உள்ளது என்றும் மார்க் லியால் கிரான்ட் தெரிவித்தார். (அ-1)

## 25ஆம் திகதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றைய மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:

* மக்கள் தொடர்ந்து மீளக்குடியேறி வருவதால் அவர்களுக்கு வாக்களிப்பு வசதிகள் செய்ய வேண்டியுள்ளது. எதிர்வரும் 25ஆம் திகதிவரை மீளக்குடியமர்வோர் விவரங்களை அரச அதிபர்கள் அனுப்பி னால் சம்பந்தப்பட்ட மக்கள் தமது சொந்த இடங்களில் வாக்களிக்க விசேட வசதி செய்யப்படும்.
* வாக்குப்பெட்டிகளின் மேல் பக்கத் தில் 'ஸ்ரிக்கர்' ஒட்டும் நடைமுறைக்கு மேலதிகமாக வாக்குப் பெட்டிகளின் உள் புறத்திலும் 'ஸ்ரிக்கர்' ஒட்டப்படும்.
* கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.
* ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் வாக்களித்தவர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியல் சகல கட்சித் தலைவர்களுக்கும் வழங்கப்படும்.
* நீதி, நியாயமான தேர்தலை நடத்த முழு ஏற்பாடுகளும் செய்யப்படும்.

(அ-1)

## மீளக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேறிய மக் களின் வாழ்வாதாரத்தை மேம் படுத்தும் வகையில் 'நிக்கொட்' நிறுவனம் குடும்பம் ஒன்றுக்கு தலா 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்குவதற்கு 17 ஆயிரத்து 732 குடும்பங்கள் முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்டன.

இரண்டாம் கட்டத்திற்கு 3ஆயிரத்து 168 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். இவ் வாறு தெரிவுசெய்யப்பட்ட குடும்பங் களுக்கு கொடுப்பனவு வழங்குவதற்கான அனுமதிக் கடிதங்கள் கடந்த 6ஆம் திகதி முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன்படி நேற்று சனிக்கிழமை வரை 18ஆயிரத்து 81 குடும்பங்களுக்கு கொடுப் பனவுக்குரிய அனுமதிக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தக் குடும்பங்களில் 11ஆயிரத்து 777 பேருக்கு கொடுப்பனவுக்குரிய பணம் வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்டவர்கள் நாளை முதல் வங்கியில் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம் - என்றார். (ஒ-9)

## நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரசாரங்களை மேற்கொள்வார். நாளை மறுதினம் யாழ்ப்பாணம் வருகின்றார் ஜனாதிபதி. அவர் குடாநாட்டில் பங்கு பற்ற வுள்ள நிகழ்ச்சி நிரல் தொடர்பான விவரங்கள் நேற்று வரை வெளியாகவில்லை. (ஒ-1)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பட்டி தொட்டி எங்கும் தமது தேர்தல் பிரசாரத்தை முடுக்கிவிட்டுள்ளனர். கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து சூறாவளிப் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தார்.

ஈ.பி.டி.பியினர் ஓட்டோக்களில் ஒலி பெருக்கி மூலம் தீவிர பிரசாரத்தில் ஈடு பட்டு வருகின்றனர். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் உரை அதில் ஒலிபரப்பப்பட்டு வருகிறது.

ஐ.தே.கட்சி தலைவரும் யாழ் வந்து திரும்பியுள்ளார். ஐ.தே.கவின் பிரசாரக் கூட்டங்களும் நடைபெற்று வருகின்றன. தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு மற்றும் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் கூட்டங்கள், கருத்தரங்குகள் போன்றவற்றை நடத்தி வருகின்றன.

குடாநாட்டு பத்திரிகைகளிலும் தேர்தல் விளம்பரங்கள் கூடுதல் இடத்தைப் பிடித் துள்ளன. (ஒ-14)

**பரீட்சை வினாத்தாள் (நாவலர் வெளியீடு)**

தரம் 1முதல் O/L வரை சகல பாடங்களுக்குமான 3ஆம் தவணை வினாத்தாள்கள் பெற்றுக்கொள்ளலாம்.

கிடைக்கும் இடம் (C/565951)

**நாவலர் இன்ஸ்ரிரியூட்**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

**GBS Greenwich Business School**

**UK Student Visa புதிய நடைமுறைகள்**

★ CAS இலக்கம் என்றால் என்ன?
★ எத்தனை மணித்தியாலம் வேலை?
★ IELTS அவசியமானதா?

இன்னும் பல வினாக்களின் விடைகளுடனும் போதிய ஆலோசனை வழங்க GBS அதிபர் யாழ்.வருகிறார். இன்று (21.03.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணி முதல் உங்களுடன்....

Greenwich Business School
19, Chettiththeru Lane, Nallur, Jaffna.
T.P: 021 3734747, 0773537378

கொழும்பு: 190, Grandpass Road, Colombo - 14
T.P: 0114366331, 0773537378 (C/565958)

**Deutsch, Dutch, Italian வகுப்புக்கள்**

தூதரக விசா பரீட்சைகளுக்கான ஜேர்மன் டொச் (Deutsch), நெதர்லாந்து டச் (Dutch) மற்றும் இத்தாலியன் (Italian) மொழி வகுப்புக்கள் எமது யாழ்.கிளையில் தற்பொழுது நடைபெறுகின்றன.
குறிப்பு: மற்றும் ITALIAN மொழி வகுப்புக்களுக்கான புதிய Batch 27.03.2010 அன்று எமது யாழ்.கிளையில் ஆரம்பமாகின்றது.

Vivekananda Academy,
(Centre for International Language Studies),
No. 3, 2nd Lane, Palaly Road, Jaffna. (அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
Tel: 0774842464, 0213216928 (C/565955)

**Honda Civic (A/C) கார் விற்பனைக்குண்டு.**

மிகவும் நல்ல நிலையில் Original வளங்களுடன் கம்பனியில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யபட்டு இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட (1st Owner) Honda Civic (A/C) கார் விற்பனைக்குண்டு.



தொடர்புகட்கு:
இல.148, கோவில் வீதி,
யாழ்ப்பாணம் (புவிசெல் முன்பாக).
0774528818
0212223818




ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

**நிஜம் ஒன்று நிழலாகி மாதங்கள் ஆறு...**



நிலையற்ற இவ்வுலகில் நிலையான
பாசத்தைக் காட்டி
எமை சீக்கிரமாய் விட்டுச் சென்றது
ஏனோ-அப்பா
சென்றன மாதங்கள் - ஆறு
ஓயவில்லை எம் மனதில் உங்கள் நினைவுகள்
புன்னகையுடன் அன்பாக வழிகாட்டினீர்கள்
உங்களை சுமந்து வாழ ஆசைப்பட்டோம்
முடியவில்லை
வாழ்கிறோம் நீங்கள் எங்களைச் சுமந்த
நினைவுகளோடு....

அமரர்
**கந்தசாமி தங்கராசா**
(பத்தர்)

தோற்றம் 15-04-1949 | மறைவு 24-9-2009

குடும்பத்தினர்.
555, கே.கே.எஸ் றோட்,
மதவடி லேன், நாச்சிமார்
கோவிலடி, யாழ்ப்பாணம். (95752)

## மரண அறிவித்தல்

**பூதன் வேலுப்பிள்ளை**
(ஓய்வுபெற்ற பிரதம எழுதுநர், மதுவரித்திணைக்களம்)

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த பூ.வேலுப்பிள்ளை (ஓய்வு பெற்ற பிரதம எழுதுநர், மதுவரித்திணைக்களம்) நேற்று (20.03.2010) கொழும்பில் காலமானார்.

அன்னார் சந்திரமலரின் அன்புக் கணவரும், பிறேமகாந்தன் (லண்டன்), லோகாந்தன், யோகாந்தன் (ஆசிரியர், வவுனியா செட்டிகுளம், அருவித்தோட்டம் சிவானந்தா வித்தியாலயம்), புவிதா (மாணவி, A/L 2010, சாவகச்சேரி இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சேச் வீதி,
மட்டுவில் வடக்கு (சந்திரபுரம்),
சாவகச்சேரி.

தகவல்:
லோகாந்தன் (சுஜி).
மகன்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.03.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org